JAN 1966
MADRAS

தமிழ் வாழ்க.

துணர் சக. மலர் ரு, சூ, எ.

தமிழ்ப் பொழில்

விசுவாவசு — ஆவணி, புரட்டாசி, ஐப்பசி.

1965

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :
ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம். B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம், பொழிற்றொண்டர்.
2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.
3. சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.
4. திரு. வித்துவான். க. வெள்ளைவாரணனார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
5. திரு. கு. சிவமணி எம். ஏ. பி. டி., முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.
6. திரு. வித்துவான். தி. அடிகளாசிரியர், பேராசிரியர், ,,
7. திரு. வித்துவான். ச. பாலசுந்தரம், பேராசிரியர், ,,
8. திரு. வித்துவான். சி. கோவிந்தராசன், பேராசிரியர், ,,

உள்ளுறை.

துணர் ௩௪. மலர் ரு, சூ, எ.

		பக்கம்
1.	பொழிற்றொண்டர் பேசுகின்றார்	129
2.	சங்க அரங்கம்	134
3.	அளபெடை வீ. இராசமாணிக்கம், எம்., ஏ,	137
4.	சுந்தரக் கலையோவியம் இர. குழந்தைவேலு, எம், ஏ,	150
5.	தமிழ்நூற் குறியீட்டு விளக்கம் வித்துவான், ச பாலசுந்தரம்	159
6.	புகார் முதல் வஞ்சி வரை பேராசிரியர், சி. கோவிந்தராசனார்	171
7.	சைவ சமய உண்மைகளும் தமிழ் நூல்களும் திரு. அடிகளாசிரியர்	180
8	நிலவு தந்த நினைவு கு. சிவமணி	193
9.	"செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்று வித்துவான், மோ. இசரயேல், எம்.ஏ., டிப் (செர்மன்)	204
10.	கண்ணகி புலவர், ந. செகதீசன் (ஈரோடு)	217

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௯௬	மலர்
	விசுவாவசு, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி	
௪௧	1965 ஆகச்டு, செப்டம்பர், அக்டோபர்	௫. ௬. ௭.

பொழிற்றொண்டர் பேசுகின்றார் !......

தமிழ்ப் பெருமக்களே ! வணக்கம்

சென்ற திங்களில் அறிவித்ததைப் போன்றே இத் திங்கள் மலர், ஆவணி, புரட்டாசி, ஐப்பசி ஆகிய மூன்று மலர்களைக்கொண்ட கொத்தாக மலர்கின்றது.

தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்க்கென்று பெருமக்கள் பலர், புலமை நலம் வாய்ந்த தங்கள் கட்டுரைகளை அனுப்பி வைத்திருந்தனர். பொன்விழா மலர் வெளிவருவதற்குரிய காலம் சற்றே தள்ளிப்போவதால், அக் கட்டுரைகளிற் சிலவற்றை இத் திங்கள் வெளியிடுகின்றோம். எஞ்சியவற்றையும் தொடர்ந்து வெளியிடுவோம். பொன்விழா மலர் வெளியிடும்போது புதிய கட்டுரைகளைக் கட்டுரையாளர்களிடமிருந்து பெற்று வெளியிடுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்லூரி மாணவர்களுடைய கவின்மிகு கருத்துக்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் 'மாணவர் அரங்கம்' என்னும் பகுதியைத் தொடங்குவோம். பொழிலில் பற்பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும், செறிவு மிகுந்த புதுப் படையல்கள் வெளிவருகின்றன என்பதை அன்பர்கள் அறிவார்கள். வரலாற்று நுட்பமிக்க "புகார் முதல் வஞ்சி வரை" என்னும் கட்டுரையின் தொடர்ச்சியும், இலக்கணக் கட்டுரைகளும், நாடகமும், கவிதையும் பிறவும் இம் மலரில் இடம் பெற்றுள்ளன. "சைவ சமய உண்மைகளும் பழந் தமிழ் நூல்களும்" என்னும் சமய ஆய்வுக் கட்டுரையும் இணைக்கப் பெற்றுள்ளது தமிழ்வழி நின்று தமிழ்ச்சொல்லின் நுட்பத்தையும் திட்டத்தையும் புலப்படுத்தும் "தமிழ்நூற் குறியீட்டு விளக்கம்" என்னும் கட்டுரைத் தொடர் தொடங்கப் பெற்றுள்ளது. இருள்மூடிப் புதைந்த பகுதியாக இருக்கும் பழந் தமிழர்

கல்வி வரலாற்றின் ஒளி விளக்கமாகப் பழந் தமிழர் கல்வி என்னும் புதிய ஆய்வுத்தொடர் கட்டுரை இனி வெளிவரும். ஆகவே கட்டுரையாளர்கள், நல்ல தமிழ் நடையில் செறிந்த சொல்லோவியங்களை அனுப்ப வேண்டுகின்றோம்.

கதமலி கரந்தை!......

'கதமலி கரந்தை கரந்தை யரவம்
அதரிடைச் செலவே அரும்போர் மலைதல்
புண்ணொடு வருதல் போர்க்களத் தொழிதல்
ஆளெறி பிள்ளை பிள்ளைத் தெளிவே
பிள்ளை யாட்டொடு கையறு நிலவே
நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி
வேத்தியன் மலிபே மிகுகுடி நிலையென
அருங்கலை யுணர்ந்தோ ரவைபதி னான்கும்
கரந்தையுங் கரந்தைத் துறையும் என்ப"

என்று பகைவர் கவர்ந்தவற்றை மீட்டும் முயற்சியும் வினைவும் பற்றிப் புறப் பொருள் வெண்பா மாலை கூறும்.

வையமென்னும் கடலில் வளரும் நாடுகளென்னும் கலங்கள், சிக்கலென்னும் அலைகளில் சிக்கித் தடுமாறும் போழ்தெல்லாம், கலங்கரை விளக்கமெனப் பாரதம் பண்டுதொட்டு இலங்கிப் பெரும்புகழ் கொண்டுள்ளது. பாரதம் புத்தபிரானின் அருளால் பொலிவு பெற்றது; திருவள்ளுவரின் பேரறத்தில் திகழ்ந்தது; குடிவழி இயங்கிய முடியுடை மூவேந்தரின் மொய்ம்புடைய ஆட்சியிலும், அன்புவழியைப் பற்றி அரசியலில் அமைதியை விழைந்த பேரரசன் அசோகன் போன்றாரின் தரப்பிலும் வளர்ந்தது. தேவார நாயன்மார்கள், ஆழ்வாராதிகள் இவர்களின் தெய்வநெறி பட்டினத்தடிகளின் பொதுநலம், தாயுமானவரின் தன்னல மறுப்பு, குருகோவிந்தரின் வீர நெஞ்சம், துளசிதாசரின் தூயவழிபாடு இராமலிங்கரின் கருணைவெள்ளம். இராமகிருட்டிணரின் எளியவியல்பு, விவேகானந்தரின் வெற்றிமுரசம், தாகூரின் விடுதலை விழைவு, பாரதியாரின் புரட்சி முழக்கம், காந்தியடிகளின் இன்னா செய்யாமை, அண்ணல் நேருவின் அமைதிவழி ஆயவற்றிலே ஊறித்திளைத்த பாரதம் அன்பையும் பண்பையும், அறத்தையும் அருளையும் உயிராகக்கொண்டியங்கி வருகின்றது.

அறநெறி படரும் பாரதத்தின்மேல் ஒருபாற்கோடி, நடுவுநிலைமை பிறழ்ந்து பாக்கித்தான் படையெடுத்தமை கண்டு பாரே திகைத்தது. பாரதம், பாருக்குள்ளே நல்ல

நாடு மட்டுமன்று; வல்ல நாடும் ஆகும். அதனைப் படை கொண்டு வெல்லல் பகற்கனவுமாகும் என்பதைப் பாரதப் படை மறவரின் வீரம், உள்ளங்கை நெல்லிக் கனி எனத் தெள்ளத்தெளிய உலகுக்குணர்த்திவிட்டது.

இன்று படையெடுத்துவந்த பாக்கித்தானியர், நேற்றைய நண்பர், ஊடுருவல்காரர்களைக் காசுமீரத்தின் உள்ளனுப்பி அதனை உடைமைகொள்ள நினைத்தோர் நேற்று நம்முடைய உறவினர்; ஆங்கில அடிமைத் தளையை அறுத்தெறிந்து உரிமை வாழ்வு பெறுவதில் நம்மோடு தோளோடுதோள் நின்று தொண்டாற்றினோர். சில வாண்டுகட்கு முன் படையெடுத்த சீனரை வேற்று நாட்டான் என்று கருத இடமுண்டு. ஆனால் பகைப் புலத்தில் பாட்டன் கவசவண்டிகளையும் 'சாபர்செட்' வானூர்திகளையும் நம்பி நம்மீது படையெடுத்த பாக்கித்தானியர்களை அவ்வாறு கருத மனம் இடம் தரவில்லை. காரணம், அவர்கள் நேற்றைய இந்தியர்; இன்றைய பாக்கித்தானியர்.

ஊறு விளைக்கக் கருதி மாறுபட்டெழுந்த பகைவரின் திட்டத்தை நம் படைஞர் உடைத்தெறிந்து வெற்றி பெற்றுள்ளனர். வெறும் போர்க்கருவிகளைக்கொண்டு, நெஞ்சிலுரமும் நேர்மைத் திறமுமின்றிப் பகைக்களத்தே நம்மைச் சாடநினைத்தோர் பலமுனைகளிலும் தோற்றோடினர். வடமேற்கு முனையில் நம் பாரதப் படையிலிருந்து வெடித்த வெடிகுண்டு, வெறும் அனற்பிழம்பாக மட்டுமின்றி, விடுதலையைப் பறிக்கக் கருதிய வீண் படையை வெட்டிச்சாய்க்கும் விடுதலைச் சுடராகவும் கனன்று வெடித்தது. விளைவு?.. விண்ணில் காற்றைக் கிழித்து விரைந்து பறக்கும் பகைவரின் வானூர்திகள் குருவிக் கூட்டங்கள்போல் சுட்டுத்தள்ளப்பட்டன. 'சுதந்திரம்.. உயிர் சுவாசம்.. அன்று'' என்று துணிந்த நம் மறவர்களின் ஆற்றலுக்குமுன் மாற்றாரின் கவசப் படைகள் நொறுக்கி உடைக்கப்பட்டன. தண்ணீர் விட்டு வளர்க்காமல் செந்நீர்விட்டு வளர்த்த விடுதலைப் பயிரை வெறிகொண்ட பகைவர் முளையிலேயே கிள்ள முயன்றனரா என்னும் சினத்தில் பிறந்த பெருமூச்சே எரிமூச்சாகி எதிரிகளின் திட்டத்தைச் சுட்டுப்பொசுக்கிற்று.

"அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்ட பிமானமுன் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க் கென்று முவப்பு !"

என்பதை நெஞ்சில் நிலைநிறுத்தி நாடுகாக்கும் பீடுகெழு பணியிலே தங்கள் இன்னுயிரை உவந்தளித்து நடுகல்லாகி நிற்கும் நம் மறவர்குல மாணிக்கங்கள் என்றும் நம்மிதயத்தில் வாழ்வர். தாயகத்தின் மாண்பையும்

மானத்தையும் காப்பதில் அவர்கள் ஆற்றிய அருந்தொண்டு குன்றின்மேலிட்ட மணிவிளக்கு. அம்மணி விளக்கிலிருந்து தெறிக்கும் ஒருசிறு பொறி, நாற்பத்தைந்துகோடி மக்களின் நல்லுணர்வில் ஏற்றிவைத்த உரிமையெனும் பெருஞ்சுடர். அப்பெருஞ்சுடரின் ஒளி, அலைமடியில் தவழும் குமரிமுதல் வெள்ளிப்பனி வீழும் இமயம் வரையிலும் அடிக்கடி தொல்லைக்கு ஆளாகும் வடகிழக்கு எல்லை முதல் வீரஞ்செறிந்த பாஞ்சாலம் வரையிலும் பஞ்சுப் பொதியுள் பற்றிய பொறிபோல் எத்திசையும் எப்பக்கமும் எல்லோருள்ளத்திலும் பரவியுள்ள பேரொளிப் பிழம்பு. அப்பேரொளிப் பிழம்பு முன்னே, போரினை விழைந்த பகைவரின் புன்மை பொடிப்பொடியாம்.

கடல்போல் திரண்ட மக்கள் கூட்டம், கருத்தில் ஒன்றிய நோக்கம், மடைதிறந்த வெள்ளமென மனத்தகத்தே மண்டியெழும் நாட்டுப்பற்று, படைபோட்டு வந்திடும் பகைமையைக் கூற்றுக்கு இரைபோட்டுப் பரணிபாடும் பாரத மறவர் குலம் – இத்தகைய போற்றலுக்குமுன் எதிரிகளின் எதிர்ப்பு எவ்வுருவில் வரினும் எவ்வகையில் வரினும் அவ்வுருவில், அவ்வகையில் அஃது அழிவுபெறும் என்பது உறுதி. கருத்து வேறுபாடுகள், கட்சிப் பூசல்கள், இனவேறுபாடுகள் போன்ற அன்றாட அரசியல் நடைமுறையிலிருந்து ஒதுங்கி, அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு, உயர்ந்த நோக்குடனும் உறுதிகொண்ட நெஞ்சுடனும் ஒன்றுபட்டுத் தம்மைச் செறுவது நாடி வருபவரைத் துகள் செய்து கிடத்தும் அறப்பணியிலே இந்நாட்டு மக்கள் அனைவரும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

"அறம் வெல்லும் பாவம் தேயும்"

* * *

எங்கள் பங்கு : ......

நாட்டுப் பாதுகாப்பு முயற்சியில் நாடே ஒன்று திரண்டு முழுமூச்சுடன் முனைந்துள்ளது. "எப்பதம் வாய்த்திடுமேனும்-நம்மில் யாவர்க்கும் அந்த நிலை

பொதுவாகும்" என்பதைச் சிந்தனையில் தேக்கி இந் நாட்டுமக்கள் செயற்பட முற்பட்டுள்ளனர். கொட்டும் பனியிலும், நடுங்கும் குளிரிலும், நாட்டுப் பற்றோடும் நடுங்கா உள்ளத்தோடும் நமது எல்லைகளைக் காக்கும் படைமறவர்களுக்கு இந்நாடே ஒன்றுதிரண்டு தனது நன்றியைக் காட்டுகின்றது; பகையை முறியடிப்பதில் அவர்களுக்கு உறுதுணையாக அமைந்துள்ளது. புறப் பகையை ஒழிப்பதற்குப் பொருள் மிகுதியும் வேண்டும் என்னும் வேண்டுகோள் அரசிடமிருந்து பிறந்தது. நிதி மிகுந்தவர் பொற்குவை தந்தனர்; நிதி குறைந்தவர் காசு கள் தந்தனர். நாட்டுப்பற்றுமிக்க நல்லோர் எவரும் தங்களாலியன்றவற்றைத் தராமலில்லை. கிடைத்தது எவ்வளவு என்று கணக்கில் நோக்கமன்று; கொடுத் தோர் எத்தனைபேர் என்பதையே எண்ணிப்பார்க்க வேண்டும்.

நாட்டுப் பாதுகாப்புப் பணியில் எங்கள் பங்கு:

(1) கரந்தைப் புலவர் கல்லூரி:	ரூ.	450-00
(2) உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி	ரூ.	1325-00
(3) இராதாகிருட்டின இளையோர் அடிப்படைத் தொடக்கப்பள்ளி	ரூ.	41-00
கூடுதல்	ரூ.	1816-00

* * *

சங்கக் கல்வி நிலையங்களைச் சார்ந்த மாணவர்கள் ஊராரை அணுகி உண்டியல் குலுக்கிப் பாதுகாப்பு முயற்சிக்காகப் பொருள் திரட்டினர். உண்டியல் வழிய தண்டலான தொகை வருமாறு:

கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள்	ரூ.	340-24
உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்	ரூ.	238-35

சங்க அரங்கம்.

கரந்தைப் புலவர் கல்லூரி.

இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 28ஆம் ஆண்டுத் தொடக்க விழா 7—8—65 அன்று தமிழ்ப் பெருமன்றத்தில் நிகழ்ந்தது. கல்லூரி மாணவியரின் இறைவணக்கத்திற்குப் பின் கல்லூரி முதல்வர். திரு. கு. சிவமணி, எம், ஏ., பி. டி. அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரையில் இளங்கோவடிகள் கழகத்தின் கடந்த கால வரலாற்றினையும் நிகழ்கால நடைமுறைகளையும் விளக்கி விழாப் பெருமக்களுக்கும் விருந்தினர்களுக்கும் அனைவர்க்கும் நல்வரவு கூறினார்கள்.

நம்பொழிற்றொண்டரும், சங்கத் தலைவரும் கல்லூரியின் முன்னாள் மதிப்பியல் முதல்வருமாகிய திருவாளர் ச. சுயம்பிரகாசம், பி. ஏ., பி. எல். அவர்கள் விழாவினைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் சங்கத்திற்கும, கல்லூரிக்குமுள்ள தொடர்பினைக் கூறிப் பல்லாண்டுகள் தம்மைப் பிணித்திருந்த மதிப்பியல் முதல்வா பொறுப்புக்களைக் கல்லூரி முதல்வரிடம் ஒப்படைத்தற்கும் சிறந்தோங்கும் கல்லூரி மேலும் செழித்து வளருதற்கும் இவ்விழா வழி வகுக்கின்றது என்று கூறித் தமிழ்க் கழகத்தினை வாழ்த்தித் தொடக்கவுரையாற்றினார்கள்.

மயிலம் சிவஞானபாலய செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியராகிய திருவாளர் வித்துவான். ஆ. சிவலிங்கனார் விழாவிற்குத் தலைமை தாங்கியும் 'இளங்கோவின் செல்வம்' என்ற பொருள்பற்றித் தம்மாய்வு நலம் கனிந்த பேருரையாற்றியும் சிறப்பித்தார்கள். தஞ்சை சரபோசியரசர் கல்லூரித் தமிழ்த் துணைப்பேராசிரியர், திருவாளர். கு. சிவஞானம், எம். ஏ. அவர்கள் தாம் ஆராய்ச்சிப் பட்டத்திற்காக எடுத்துக்கொண்ட 'கம்பர் உவமை நயம்' என்னும் தலைப்பில், பொருள நலம் பொதிந்த சிறப்புரையாற்றினார்கள். கழகச் செயலாளர் திரு. து. பார்த்தசாரதி நன்றி நவின்ற பின் நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறிற்று.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்ற வெள்ளி விழா ஆண்டின் தொடக்க விழா 14—8—65 அன்று தமிழ்ப் பெருமன்றத்தில் நிகழ்ந்தது. உயர்நிலைப்பள்ளி மாணவியரின் இறைவணக்கம் தமிழ்த்தாய் வணக்கம் இவற்றிற்குப்பின் பள்ளித் தலைமையாசிரியர் திரு. S. பஞ்சநதம் பிள்ளை எம். ஏ, எல். டி. அவர்கள் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின் சிறப்பியல்புகளைக் கூறி அனைவரையும் வரவேற்றார்கள்.

ஐதராபாத்-உசுமானியா பல்கலைக் கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் திரு. P. M. சுந்தரம் எம். ஏ., அவர்கள் தம் தலைமை யுரையில் செந்தமிழ்ப் புரவலர்-தமிழவேள்-திரு உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் தமிழ்ப் பற்றினையும், தமிழ்த் தொண்டையும், நட்பின் பெருமையையும் விளக்கிப் பேசினார்கள்.

பூண்டி-புட்பங் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. கி. கோதண்டபாணி, எம். ஏ., அவர்கள் "தம்பியர் இருவர்" என்னும் தலைப்பில் வீடணன், கும்பகருணன் ஆகிய இருவரைப்பற்றியும் எடுத்துக்கூறி, நீர்க்கோல் வாழ்வை நச்சாமல் தன்னை வளர்த்த அண்ணன் பொருட்டு இன்னுயிர் ஈந்த கும்பகருணனை வீடணனைக் காட்டிலும் சிறந்தவன் என்பதை வலியுறுத்திச் சிறப்புரையாற்றினார் கள். தலைவர் பின்னுரைக்குப்பின் பள்ளித் தமிழாசிரியர் புலவர். திரு. மீ. இராமதாசன் அவர்கள் நன்றிநவில நாட்டுவாழ்த்துடன் விழா இனிது நடந்தேறியது.

இராதாகிருட்டின இளையார் அடிப்படைப் பள்ளி :

இப்பள்ளியின் பாலர் சபை 8—10—65 அன்று பள்ளி இளந் துணை ஆய்வாளர் திரு. என். ஏ. குஞ்சிதபாதம் அவர்கள் தலைமை யில் கூடியது. தலைவரவர்கள் தமது தலைமையுரையில், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் சிறப்பியல்புகளையும் பள்ளியின் பெருமைக்குரிய வளர்ச்சியையும் பாராட்டியதோடு, சின்னஞ் சிறுபிள்ளைகள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்பதைத் தொடக்க நிலையினரும் புரிந்து கொள்ளுமாறு எளியவகையில் எடுத்துரைத்தார்கள். அடுத்துக் கல்லூரி முதல்வர், திரு கு. சிவமணி அவர்கள் குடிமக்களாகக் குழந்தைகளை உருவாக்குவதில் ஆசிரியர் ஆற்றுந் தொண்டினைப் பற்றியும், குழந்தைகள் பயிலவேண்டிய வழிவகைகளைப்பற்றியும் உரையாற்றினார்கள். உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. கண்ணன் அவர்கள் சமுதாயத்தில் ஆசிரியர் பங்கு பற்றிப் பேசினார்கள்.

பள்ளிப் பிள்ளைகள் தேவாரப் பாடல்களை உரிய மெய்ப் பாடுடன் ஆடிக்காட்டியும், பாக்கித்தானியர் படையெடுப்பை முறி யடிக்கவேண்டுமென்னும் கருத்தமைந்த பாடல்களை உணர்வோடு பாடியும் அவற்றிற்கேற்ப ஆடியும் அனைவரையும் மகிழ்வித்தனர்.

பள்ளித் தலைமையாசிரியர் திரு. மீ. பாலசுப்பிரமணியன் அவர் கள் நன்றி கூற நாட்டு வாழ்த்துடன் சபை கலைந்தது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

நம் சங்கத்தின் கலைமகள் விழா 16—10—65 அன்று தமிழ்ப் பெருமன்றத்தில் நிகழ்ந்தது. சங்கத் தலைவர் திரு. சு. சுயம்பிர காசம் பி ஏ., பி. எல். அவர்கள் சங்கத்தின் முறைகளைக் கூறி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். அருட்டிரு ஞானானந்த

அடிகளார் தமது தலைமையுரையில் கம்பராமாயணம், திருக்குறள் இவற்றின் சிறப்பியல்புகளை விரிவாகக் கூறி இறைநெறியின் இன்றியமையாமையைப்பற்றி வலியுறுத்தினார்கள். அதன்பின், திருச்சித் தேசியக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. புலவர். கு. திருமேனி பி. ஏ., பி. ஓ. எல். அவர்கள் 'நம்காப்பியம்' என்னுந் தலைப்பில் முதல் இராமாயணம் தமிழருடையது; தமிழிலிருந்துதான் ஏனைய மொழிக்கு அக்கதை சென்றது என்று விளக்கிப் பேசினார்கள். அடுத்து காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. புலவர் அ. மா பரிமணம் எம். ஏ., எம். லிட். அவர்கள் இளங் கோவின் உள்ளம் என்னுந் தலைப்பில் சிலப்பதிகாரத்தைப் பற்றி அழகிய சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் பின்னுரைக்குப் பின் கல்லூரி முதல்வர் திரு. கு. சிவமணி அவர்கள் நன்றி கூற, வாழ்த்துக்குப்பின் விழா இனிது நிறைவெய்திற்று.

கையறவு

கரந்தைத் தமிழ்ச்சங்க உறுப்பினரும், கரந்தைப் புலவர் கல்லூரிக் கட்டிடத்திற்காக ரூ. 1001 நன்கொடை அளித்தவரும், கரந்தைப் பெருவணிகரும் சங்கச் செயலாளர் திரு. நா. லெ. வரதராசலு நாயுடு அவர்களின் தமையனாரும், சங்க வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டுதவியவரும் ஆகிய

திருவாளர் நா. லெ. வேங்கடசாமி நாயுடு அவர்கள்

20—10—65 அன்று கரந்தையில் காலமானது கேட்டுக் கழிபெருந் துயரம் அடைகின்றோம். அவரைப் பிரிந்து வருந்தும் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

— பொழிற்றொண்டர்.

—:O:—

அளபெடை

வீ. இராசமாணிக்கம், எம். ஏ.

அளபெடையென்பது தமிழிலக்கணங் கூறுஞ் சார்பெழுத்துக்கள் பத்துள் ஒன்ருகும். இவ்வளபெடை உயிரளபெடை. ஒற்றளபெடையென இருவகைத்து இவ்விரண்டனுள் உயிரளபெடை கருத்து வேறுபாட்டிற்குரிய வொன்ருக வுள்ளது. இவ் வுயிரளபெடையின் றன்மைகளேச் சற்றே ஆய்ந்து காண்போம்.

அளபெடையைக் குறித்து பவணந்தியார் கூறுகிற போது,

"இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலேநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே" (நன்-91)

எனவுரைக்கின்ருர்.

"இசை கெடுங்கால் ஒரு மொழிக்கு முதல், இடை, கடையாகிய முந் நிலேகளில் நெட்டெழுத்துக்கள ஏழும் அளபெழுந்து நிற்கும். அதனறிகுறியாக அவ்வந் நெட்டெழுத்துக்குரிய குற்றெழுத்து அதன் பின் நிற்கும எனபதே இதன் பொருளாம், இவ்வுயிரளபெடையின் விரிவைக் கூறுமிடத்து "உயிரள பெழுமூன்று" என் நன்னூலார் கூறுகிருர். அஃதாவது நெட்டெழுத்தேழும் மூவிடத்தும் அளபெழுமெனவே, இருபத்தோரிடங்களென்பதைப் பெற்ரும். ஆனல் நன்னூல் உரையாசிரியர் இவ் விருபத்தொன்றை வேறு வகையில் கணக்கிடுகிருர். "நெட்டுயிர் ஏழனுள் ஔகாரம. மொழி இடை, கடை நிலேகளில் வகருதலில்லே; எனவே அளபெழுமிடங்கள் பத்தொன்பதாம; இவற்றுடன், இன்னிசை சொல்லிசையெனு மிரண்டிசையும் சேர்க்க இருபத்தொன்ரும" என்று கணக்கிட்டுக் காட்டுகிருர். இருபத்தொன்றென்பதற்குப் பவணந்தியார் இவ்வாறுதான் கணக்கிட்டிருப்பரெனக் கூறவியலாது அளபெடை. செய்யுளிசை. இன்னிசை, சொல்லிசையெனப் பகுக்கப்பெறல்வேண்டும் என்ற எண்ணத்தால் இவ்வாறு கணக்கிட்டார்போலும்.

தொல்காப்பியர் அளபெடையைக் குறித்துக் கூறுங்கால்;

"நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி யெழூஉதல் என்மனர் புலவர் (எழுத்து-6)

எனக் குறிப்பிடுகிருர். தொல்காப்பியரோ, பவணந்தியாரோ இசைகெடின் அளபெழுமெனப் பொதுவாகக் குறிப்பிட்டனரேயல்லாது, செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசையெனப் பிரித்தாரல்லர், இம் முப்பிரிவும் உரையாசிரியரால் ஆக்கப் பெற்றவையேயாம்.

உரையாசிரியர் கணக்கிட்ட முறை தவறென்பதை முதற்கண் காண்போம், நெட்டெழுத்தேழும் முதலிடை கடை நிலேகளில் அளபெழ இருபந்தொன்ரும். ஆனல் ஔகாரம் இடை, கடை, நிலேகளில் வருதலில்லே யெனவே பத்தொன்பதாமெனக் கணக்கிட்டார்.

உரையாசிரியரெனின் அது பொருந்துமாறில்லையென்பதைக் காண லாம். அவர் கூறும்மாறுபோல ஔகாரம் மொழி இடையிலும் கடை யிலும் வாராமலில்லை ஔகார வுயிர்பற்றித் தொல்காப்பியர்,

"உயிரௌ வெஞ்சிய விறுதி யாகும்" (எழுத்து-69) எனக் கூறுகிறார்' இந்நூற்பாவால் ஔகாரம் இறுதிககண் வருதலில்லை யெனக் கூறியுள்ளாரேயன்றி இடையில் வாராதெனக் கூறவில்லை. அஃதோடு, இவ்வௌகாரமும் க், வ். எனுமெழுத்துக்களொடு ஓரெ ழுத்தொரு மொழியில் இறுதியாக வரும் எனவுங் குறிப்பிடுகிறார்.

"கவவோ டிடையி னௌவு மாகும" (எழுத்து-70) அஃதா வது, கௌ. வௌ என்ற ஓரெழுத்தொரு மொழிகளில் ஔகாரம் இறுதியில் நின்றதையறியலாம், மற்றும், ஔகாரம் மொழி முதலில் வருமென ஒப்புக்கொண்ட உரையாசிரியர், அஃது அளபெழுந்த தற்கு எடுத்துக் காட்டுத்தரவில்லை. யாப்பருங்கலக் காரிகையில் இதற்கு எடுத்துக் காட்டாக 'ஔஉவியம்' என்ற சொல்லைக் காண் கிறோம். எடுத்துக் காட்டுக்காக இச்சொல்லில் வைத்துக் காட்டியுள்ளாரேயன்றிச் செய்யுளில் வந்துள்ளதாக ஓரெடுததுக் காட்டையுந் தரவில்லை. எனவே ஔகாரம் முதலிலும் அளபெடுத்த லில்லையெனவே கொள்ளவேண்டும். இவ்வாறுயின் உரையாசிரியர் எண்ணுமாறு போல, அளபெடை பத்தொன்பதெனக் கொள்ளாது பதினெட்டெனவே கொள்ளுதல்வேண்டும். ஆனால் இவ்வண்ணங் கொள்ளுதல் ஆகாது' நூற்பா நெடில் ஏழும், முதலிடை கடை நிலை களில் அளபெழுமெனத் தெளிவாகக் கூறுகின்றது. செய்யுள்களில் அமைந்த எடுத்துக் காட்டுக்கள் நமக்குக் கிடைத்திலவென்றுதான் கூறல் வேண்டும்.

மற்றும், ஔகாரம், இடையிலும் இறுதியிலும் வாராதென ஈண்டைக்கேற்பக் கூறி விட்டாரெனவே கூறல் வேண்டும். ஏனெ னின் நன்: 108 ஆம் நூற்பாவில் ஔகாரம், ககர, வகரங்களோடும் ஈருமென்ற நூற்பாவுக்கு உரை யெழுதியுள்ளார். ஆண்டு மறுக்க வில்லை. மற்றும், ஒகரம், நகரவொற்றோடிறுதியாம் என்பதை, ஏன்று கொள்ளும் உரையாசிரியர், ஔகாரம் ஈரிடத்து இறுதியாதலை யேன் ஒவ்வுகின்றிலர், இன்னிசையையும், சொல்லிசையையும் சேர்த்தல் வேண்டுமென்ற எண்ணமல்லாது வேறில்லை யென்பதை யறியலாம் நிற்க.

யாப்பருங்கலக்காரிகையில், சொல்லின் முதல் இடை கடை நிலைகளில் அளபெழும் என்பதோடு, நெட்டெழுத்துக்கள் தனித்து நிற்கும் நிலையிலும் அளபெழும் எனச் சேர்த்துத் தனி நிலை, முதல் இடை, கடை ஆகிய நான்கு இடங்களிலும் நெடில் ஏழும் அள பெடுக்குமெனவே, அளபெடை இருபத்தெட்டாம் எனக் கூறுவர். இவர். செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசை யெனப் பெயர்களைக் கூறவில்லை யென்பதையும் காணவேண்டும்.

மற்றும், நன்னூலாசிரியர். "உயிரள பெழுமூன்று" என்ற தொடரால், உயிரளபெடை தோன்றும் இடங்களைத்தாம் இருபத்தொன்றெனக் குறிப்பிட்டுள்ளாரேயன்றிச் செய்யுளிசையென்றோ, இன்னிசை, சொல்லிசையென்றோ கூறினாரல்லர். பத்தொன்பதொடு இன்னிசை, சொல்லிசை ஆகிய இரண்டையும் சேர்க்க இருபத்தொன்றும் எனக்கூறியவர், செய்யுளிசையை யேன் சேர்க்கவில்லை. இன்னிசை சொல்லிசை யிரண்டும் சேர்க்க இருபத்தொன்று எனக் கணக்கிட்டால் மற்றைய பத்தொன்பதும் செய்யுளிசையென்றல்லவோபடும். இது, பொருந்தாதென்பதை யறிவோம். எனவே, அளபெடை தோன்றும் இடங்களோடு, இன்னிசை, சொல்லிசை யென்ற விரணடையும் சேர்த்துக் கணக்கிட்டமை பிழையென்பதை அறியலாம்.

இனி அம் மூவளபெடைகட்கும் கூறப்பெறும் விளக்கங்களைக் காண்பாம். செய்யுட்கண். சீர்களில் அசைகுறைந்துவரப்பெறுங்கால், அக்குறையை நிறைசெய்வான் வரும் அளபெடை செய்யுளிசை யளபெடை. செய்யுட்களிலே அசையோ, தளையோ, குன்றாவிடத்தும் அளபெழுமாயின் அஃது இன்னிசை யளபெடையாம்; இது பெரும்பாலும உகரக்குறில் நீண்டு பின் அளபெழும். ஒரு பெயர்ச்சொல் வினையெச்சப் பொருளைத் தரும்பொருட் டளபெடுப்பது சொல்லிசையாமென வுரையாசிரியர் விளக்குகிறார். எடுத்துக்காட்டு.

செய்யுளிசை :—

"திறப்பா டிலாஅ தவர்" (குறள் 640)

இக்குறளடியில் 'டிலாஅ' என்பது அளபெடுக்கவில்லையெனின் 'டிலா' எனக் குறில்நெடிலிணைந்த நிரையசையாகவே நிற்கும். ஓரசை ஒரு சீர் ஆகாது. ஈண்டு அளபெழுந்தமையால் நிரைநேர் என ஈரசைச் சீராகியதோடு மலர் எனும் வாய்பாட்டுடன் இயற்சீர் வெண்டளை (மா முன் நிரை) பொருந்துமாறும் அமைந்துள்ளது. எனவே இவ் வளபெடை செய்யுளிசையெனப் பெயர்பெற்றது.

இன்னிசை யளபெடை

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை"

இக் குறட்பாவில் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என்பன அளபெழுந்து காய்முன் நேர் என்ற வெண்சீர் வெண்டளை கொண்டமைந்துள்ளன. இவை அளபெழவில்லையெனின் கெடுப்பதும், எடுப்பதுமென நின்றும் விளமுன்நேர் என்ற இயற்சீர் வெண்டளை அமைந்திருக்கும். இஃதும் வெண்பாவுக்குரிய தளையே. அளபெடுக்காமலேயே வெண்பாத்தளை பொருந்துமாறிருக்க ஈண்டு அளபெழுந்தது. செவிக்கின்னோசைபயக்கவேயாம் எனவே இஃது இன்னிசையளபெடையெனும் பெயர்பெற்றது.

சொல்லிசையளபெடை

"வரனசைஇ யின்னு முளேன்"

என்ற குறளடியில் 'நசை'யென்ற பெயர்ச்சொல் வினையெச்சப் பொருளைத் தரும்பொருட்டு 'நசைஇ'யென அளபெடுத்துள்ளமையால் இது சொல்லிசையெனும் பெயர் பெற்றது.

இவ் வண்ணம் மூவகை யுயிரளபெடைகட்கும் உரையாசிரியர் எடுத்துக்காட்டுக்களைந் தந்து நிறுவியுள்ளார். இனி இம்மூவகை யளபெடைகளும் எவ்வெவ்வகையிற் பொருந்துமெனக் காண்போம். முதற்கண் சொல்லிசை யளபெடையை நோக்குவோம்.

சொல்லிசையளபெடையென்பது, ஒரு பெயர் வினையெச்சப் பொருளைத் தரும்பொருட்டு அளபெடுப்பதாகும். அஃதாவது, அளபெடுத்த நிலையில் வினையெச்சமாயிருத்தல் வேண்டும். இதற்கு 'நசைஇ'யெனுஞ் சொல்லைக் காட்டினார். இஃதேபோன்று, அசைஇ, அணைஇ, குவைஇ, சினைஇ, தலைஇ, புகைஇ முனைஇ, துழைஇ, நிலைஇ, தைஇ உடீஇ, உரீஇ, ஒரீஇ, குழீஇ, கொளீஇ, தழீஇ, செரீஇ, நிறீஇ, உரைஇ, வளைஇ, விரைஇ என்பனவற்றையுங் காட்டலாம். இவையனைத்தும் உரையாசிரியர் கூற்றுப்படி, அளபெழுந்து வினையெச்சங்களானமையால் சொல்லிசையளபெடையென்பதில் ஐயமின்று.

ஆனல், அவர் கூற்றுப்படி வினையெச்சப் பொருளைத் தரும் பொருட்டு மாத்திரம் அளபெழாமல், பெயரெச்சப் பொருளைத் தரும் பொருட்டும் அளபெழுதலைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, முற்காட்டியவற்றுள், பல,

நசைஇய, குழீஇய, கொளீஇய, தழீஇய, சினைஇய
தலைஇய, தைஇய, நிலைஇய, தரீஇய
கவைஇய, குவைஇய, மரீஇய, வளைஇய

என்பனவாகப் பெயரெச்சப் பொருளில் அளபெடுத்துள்ளதைக் காண்கிறோம். வினையெச்சப்பொருளைத் தரும்பொருட்டளபெடுப்பதே சொல்லிசையாயின், பெயரெச்சப்பொருளைத் தரும்பொருட்டு அளபெடுப்பனவற்றை என்ன இசையென்றழைப்பது? எனவே பொதுவாக எச்சப்பொருளைத் தரும்பொருட்டு அளபெடுப்பது சொல்லிசையெனக்கொண்டால் என்னை?

இவ்வாறு கூறினுந் தடையெழுகிறது. 'நசைஇ'யென்பது போல் வினையெச்சமாக அளபெடுப்பதோடு, 'செலீஇயர்'என்ற உருவத்திலும் அளபெடுத்து வினையெச்சப் பொருளைத் தருகிறது. இதைச் 'செய்யியர்'என்ற வாய்பாட்டு வினையெச்சமென்று கூறலாம். 'செலீஇயர் அண்டர்' என்பது குறுந்தொகை அடியாகும்.

இவ்வாறு, வினையெச்சப் பொருளிலும், பெயரெச்சப் பொருளிலும் மாத்திரம் அளபெழாது, வியங்கோள் வினைமுற்றாகவும் நிற்கின்றன:

"எவ்வி தொல்குடிப் படீஇயர்" (புறம் 202)
விடுத்தனன் வெலீஇயர் நின் வேலே" (,, ,,)

இவ்விரு அடிகளிலும் 'படீஇயர்' 'வெலீஇயர்' என்பன முறையே 'பாடுவார்களாக,' 'வெல்வதாக' வெனும் வியங்கோள் வினைமுற்றுப் பொருளில் அமைந்திருத்தலைக் காண்கிறோம்.

இம்மட்டோ? அன்று, வினையாலணையும் பெயராய் அளபெடுத்து நிற்றலையுங் காண்கிறோம்.

சினைஇயோர் (புறம் 41) நிலைஇயர் (புறம் 24, 56) மரீஇயோர் (புறம் 13) தொலைஇயோன் (புறம் 125) வெலீஇயோன் (புறம் 125) என்பனவற்றை யெடுத்துக்காட்டாகத் தரலாம். ஆகவே, வினையெச்சப் பொருளில்லாத மற்ற நிலைகளில் நின்ற அளபெடைகளை யெல்லாம் சொல்லிசை யாகாவெனக் கூறிவிடமுடியுமோ? சொல்லிசை யாகாவென்றால் இன்னிசைப்பாற்படுத்தலாமோ? ஆம், அனைத்தும் இன்னிசையாதலைப் பின்னர் விளக்குவேம்.

இனிப் பெயர் வினையெச்சப்பொருளைத் தரும்பொருட்டு அளபெடுப்பது என்ற கூற்றைச் சற்றே ஆய்வோம். 'நசைஇ' என்பது நசையென்ற பெயர்ச்சொல் வினையெச்சமாதற்கு அளபெழுந்தது எனக்காட்டுவர். இவ்விதி அனைத்திற்கும் பொருந்துவதாயில்லை. தழீஇ, கழீஇ, மரிஇ, ஒரீஇ, நிறீஇ, வெரீஇ போன்ற அளபெடைகள் எவ்வெப்பெயர்களாயிருந்து அளபெடுத்தனவெனக் காண்டலரிதாகிறது. எனவே கூர்ந்து நோக்கும்பொழுது ஒரு பெயர் வினையெச்சப் பொருளைத்தர அளபெடுப்பது எனக்கூறுவதினும், வினையெச்சமே இன்னோசையின் பொருட்டும், ஒலித்தற்கெளிதாகும்பொருட்டும அளபெடுக்கிறதெனின் பொருந்தும். எடுத்துக்காட்டாக.

தழுவி, கழுவி, உருவி, மருவி, ஒருவி
குழுமி. நிறுவி, வெருவி, அளவி, நிலவி

என்ற வினையெச்சங்களே, முறையே,

தழீஇ, கழீஇ, உரீஇ, மரீஇ, ஒரீஇ
குழீஇ, நறீஇ, வெரீஇ, அளைஇ, நிலைஇ

என்று அளபெடுத்துள்ளதைக் காணலாம். யாங்ஙனமென்பதைக் காண்போம். முற்கூறிய தழுவி, கழுவி போன்ற சொற்களில், ஈற்றெழுத்து வகரஇகரமாதலைக் காணலாம். இயல்பாகவே வகரம் ஒலித்தற்குச் சற்றே கடினம் என்பர். இதை அரையுயிரென மொழிநூலார் கூறுவர். பலவிடங்களில், சிறப்பாக, உகரவொலியை யடுத்து வருகின்ற விடங்களில் இவ்வகரம் அகரமேபோல் ஒலித்தலை

யுணரலாம். 'உவகை' யென்ற சொல்லை ஒலித்துக் காண்க. 'உஅகை' யென்பதுபோல ஒலித்தலைக் காணலாம். வகரத்திற்குப் பிறப்பிடங் கூறுங்கால்,

"மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே" (நன் 30)

என்ற நூற்பாவை பவணந்தியார் குறிக்கிறார். அதாவது, மேற் பல்லும் கீழுதழும் இயைவதால் வகரம் பிறக்கிறது. ஆனால் 'உவகை' யெனுஞ் சொல்லில் இடைநின்ற வகரத்தை அவ்வாறு ஒலித்தற்கியலாமையை யுணரலாம். ஏன் இவ்வகரத்திற்கு முன்னருள்ள ஒலி உகரமாகும். இவ்வுகரம் ஈரிதழ்களும் வட்டமாக குவிவதால் பிறக்கிறது. இவ்வாறு இதழ்கள் குவிந்த பின்னர், கீழிதழ் மேற்பல்லொடு உடனே இயைதற்கியலவில்லை யென்பதை யுணரலாம். எனவே இரண்டிற்கும இடையே அகரம்போல் ஒலிக்கிறது.

மற்றும் 'உஅகை' யென்ற ஒலிப்பிலும் நில்லாது 'ஓகை' யென வழங்கப்படுகிறது. முன்னின்ற உகரம் ஒகரமாகி, இடையகரம் கெட்டு, அவ்'அ'கரம கெட்டமைக்கீடாக, அவ்வொகரம நீண்டு 'ஓகை' யென இலக்கியங்களிலே ஆளப்படுகிறது. உகரம ஒகரமாதல் இயல்பாகக் காணப்படும் ஒன்றும், உரல், குடை. நுங்கு, உடைத்தான் போன்றவை முறையே ஒரல், கொடை நொங்கு, ஒடைத்தான் என வழங்கப்படுதலை யறியலாம். எனவே 'தழுவி' 'மருவி' போன்ற சொற்களிலுள்ள இறுதி வகரவொற்றும் ஒலித்தற்குக் கடினமாகிறது. காரணம், அதன் முன்னின்ற ஒலி பெரும்பாலும் உகரவொலியானமையால், எனவே 'தழுஇ' 'மருஇ' யென வொலித்திருக்க வேண்டும்.

அதன்பின்னர், இறுதியில் நின்ற இகரவுயிர் அதற்கு முன்னின்ற வுகரவொலியைத் தன்வயப்படுத்திற்று. இதை மொழி நூலார் 'உயிரொலி யியைபு' (Vovel Hormony) என்றோ 'ஓரினமாதல்' (Assimilation) என்றோ வுரைப்பர். இதை ஊருணி, பருதி ஆகிய சொற்கள் ஊரிணி பரிதியென வழங்கப் படுதலினின்றும் அறியலாம், இவ்வண்ணமே, தழுவி, மருவி யென்பன தழுஇ. மருஇ என்றாகி; ஓரினமாதலென்ற விதிப்படி தழிஇ, மரிஇ யென்றாகி இன்னோசை பயக்கும் பொருட்டு தழீஇ. மரீஇயென அளபெடுத்தனவெனல் பொருந்தும்.

அவ்வாறாயின் முன்னர் கூறிய எடுத்துக்காட்டுக்களில் 'அளவி' 'நிலவி' யென்பனவற்றுள் இடையில் உகரம் இல்லையேயெனலாம். உகரம் இல்லையாயினும், மற்றச் சொற்களைப் போலவே இவையும் எண்ணப்பட்டு ஒலிக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

இவ்வண்ணமே தழுவிய, மருவிய யென்பனபோன்ற பெயரெச்சங்களும், தழுவியோர், மருவியோர் என்பன போன்ற வினையா

லணையும் பெயர்களும், முறையே, தழீஇய, மரீஇய, தழீஇயோர், மரீஇயோர் என அமைந்திருத்தல் வேண்டும்.

இவற்றைப் போலவே, 'கூவி' 'தாவி' 'தூவி' யென்பன 'கூஇ', 'தாஇ', 'தூஇ' யென்ருகிப்பின் கூஉய், தாஅய், தூஉய் என்றள பெடுத்து நின்றனவெனலாம், இறுதியில் நின்ற இகரவுயிர் எங்ஙனம் யகரவொற்ருயிற்றென வினவலாம்.

"இகர யகர மிறுதி விரவும்" (தொல்—எழுத்—58).

என்ற நூற்பாப்படி, யமைந்தனவெனலாம்.

உரையாசிரியர் கூறுமாறுபோல, நசை, தொகை, புகை போன்ற பெயர்கள் வினையெச்சப் பொருளில் அளபெடுத்தன உள வென்ருலும் அவை சிறுபான்மையே, வேறுதன்மையில் அள பெடுப்பனவே பெரும்பான்மையெனலாம். அஃதோடு பெயர்ச் சொற்களை வினைச்சொற்களாகவும், வினையெச்சங்களாகவும் ஆளுதல் இயல்பே. அப்போது அவை, குறிப்பு வினைமுற்றெனவும் குறிப்பு வினையெச்சமெனவும் பெயர்பெறும். ஈண்டுப் பெயர்ச்சொல் வினை யெச்சப் பொருளைத் தருவதோடு அளபெடுத்து நிற்கிறதெனின் அஃது இன்னேசைப் பொருட்டென்பது பெறப்படுகிறது.

இதுகாறுங் கூறியவாற்ருல், சொல்லிசையளபெடை யென்பது பெயர்ச்சொல் வினையெச்சப் பொருளைத் தரும்பொருட்டு மாத்திரம் அளபெடுப்பதென்பது பொருந்துவதில்லை யென்பதையும், ஏற்க னவே வினையெச்சமாகவுள்ளவையும் இன்னேசை பொருட்டு அள பெடுககின்றனவென்பதையும், மற்றும், பெயரெச்சப் பொருளிலும், வினையாலணையும் பொருளிலும், வியங்கோள் வினைமுற்று நிலையி லும் அளபெடுத்துள்ளன வென்பதையும் கண்டோம். எனவே, இன்னவாறுள்ளதுதான் சொல்லிசை யளபெடையென வரையறுத் துக் கூறமுடியாத தன்மையயறிகிருேம்.

2 அடுத்து இன்னிசையளபெடை குறித்துக் காண்போம். இன் னிசையளபெடையாவது, செய்யுளில் அசையோ, தளையோ குன்று விடத்தும இன்னேசைபபொருட்டு அளபெடுத்தலாம். பெரும்பாலும் உகரக்குறில் நீண்டு அளபெழுமென உரையாசிரியர் குறிப்பிடுகிருர். இவ் விதியும எவ்வளவிற்குப் பொருந்துமென்பதைக் காண்போம்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை" (வான்சிறப்பு)

என்ற குறட்பாவில் 'கெடுப்பதும்' 'எடுப்பதும்' என்ற சொற்களே 'கெடுப்பதூஉம்' 'எடுப்பதூஉம்' என அளபெடுத்துள்ளன. அள பெழா நிலையிலும், விளமுன் நேர் என்ற இயற்சீர் வெண்டளை பொருந்தியே யுள்ளது. அளபெழுந்தபின் காய்முன் நேர் என்ற வெண்சீர் வெண்டளை அமைந்துள்ளது. அளபெழா நிலையிலேயே

தளை பொருந்துமாறிருக்க அளபெழுந்ததேனெனின் இன்னிசை பயத்தற்பொருட்டே. இவ்விரண்டு சொற்களிலும் 'து' என்ற எழுத்திலுள்ள உகரம் ஊகாரமாக நீண்டு அளபெழுந்துள்ளதையுங் காணலாம். எனவே இவற்றைப்பொருத்த வரையில் உரையாசிரியர் கூற்று மிகப்பொருந்துகிறது.

இனி அவ் விதி எங்ஙனம் பொருந்தவில்லையென்பதைக் காண்போம்.

" துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை "

என்ற குறளில் இரண்டாமடியில், 'துப்பாய தூஉ' என்ற அளபெடையைக் காண்கிறோம். 'துப்பாயதும்' என்ற சொல்லே அளபெடுத்துள்ளதென்பதை யறிவோம். 'துப்பாயதூம்' என்றிருப்பின் இரண்டாவது சீர் ஒரேயசையாக விருப்பதால் அது சீராக நிற்காது. அஃதைச் சீராக்க 'யதூஉ' வென் அளபெழுந்ததை யறிகிறோம். ஈண்டுத் 'து' என்பதிலுள்ள உகரம் ஊகாரமாக நீண்டு அளபெடுத்துள்ளமை, செய்யுளில் அசை குறைந்ததை நிறைசெய்தற்கே யென்பது தெளிவு. எனவே உகரக்குறில் நீண்டு அள்பெடுப்பது இன்னிசையின் பொருட்டென்பது பொருந்துமாறில்லை.

" அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு " (அறன் வலி-2)

எனுங்குறளை நோக்குக. இக் குறளில் "அறத்தினூஉங்" என்ற சீரை யின்னிசை யள்பெடையெனக் கூறவேண்டும். ஏனெனின் அளபெழ வில்லையெனினும் வெண்பாவுக்குரிய இயற்சீர் வெண்டளை யமைந்துள்ளது. எனவே ஈண்டு அள்பெழுந்தது இன்னிசையின் பொருட்டே யாதல்வேண்டும். ஆனல் உரையாசிரியர் கூற்றுப்படி உகரம் நீண்டு அளபெழவில்லையென்பதை யீண்டுக் காண்கிறோம். எவ்வாறெனின் '.அறத்தினூங்கு" என்பதிலுள்ள 'ஊங்கு' என்பது, மிகை, மிகுதி யெனும்பொருளில் வருவதோ ரிடைச்சொல்லாம். ஆக, நின்ற நெடிலே அளபெழுந்துள்ளதையு மறிகிறோம்; மற்றும்,

" கடுஞ்சூன் மூண்டகங் கதிர்மணி கழாஅலவும் " (148)

என்பது சிறுபாணாற்றுப்படையில் காணப்பெறும் அடியாம். இவ்வடியின் ஈற்றில் அமைந்துள்ளது எவ் வளபெடையினைச் சாரும்? இவ் வளபெடை, ஆசிரியப்பாவின் அடியில் அமைந்துள்ளமையாலும், செய்யுளில் அசையோ தளையோ குன்றியமையால் எழுந்ததன்று. எனவே இஃதை யின்னிசை யளபெடையென்றே கூறல் வேண்டும். ஆனல் ஈண்டு உகரக்குறிலே யில்லையென்பதை யறிகிறோம். 'கழலவும்' என்ற சொல்லே 'கழாஅலவும்" (கழற்ற, பூக்க) என அளபெழுந்துள்ளமையால், அகரக்குறிலும் நீண்டு அளபெழலாம் எனல் வேண்டுமென்றே! எனவே 'கழாஅலவும்" என்ற எடுத்துக்காட்டால் இன்னிசைக்கு உகரக்குறிலேயன்றி அகரக்குறிலும் நீண்டு அளபெழலாமென்பதைப் பெற்றும்.

மற்றும் "அராஅப் போலும்" என்ற தொடரையுங் காண்போம். 'அரவுப் போலும்' என்றிருப்பின் தளையோ, சீரோ குன்றுதலில்லை. 'அரவு' என்பது, 'அராஅ' என்றளபெடுத்தது இன்னிசையின் பொருட்டே. இதைப்போலவே 'மரத்த' என்பது மரா அத்த வெனவும் 'கடாத்த' என்பது கடா அத்த எனவும் ஆளப்பட்டிருத்தலையும் அறிகிறோம்: இவைபோலவே,

சிறுவர், நிலவு, இரவு, புலவு, மகவு

என்பன முறையே,

சிருஅர், நிலாஅ, இராஅ, புலாஅல், மகாஅர் என

அளபெடுத்தலை யறிகிறோம். ஈண்டும் சொல்லிசைப்பகுதியில் குறிப்பிட்டதைப்போல வகரம் ஒலித்தற்குக் கடினமானதால் விடப்படுவதை யுணரலாம்.

மற்றும், படூஉம், தரூஉம் (புறம் 35)

'பிடித்த கல்வி பெரும்புணை விடூஉம்' (மணிமேகலை)

என்ற காட்டுக்களைக் காண்போம், படூஉம், தரூஉம், விடூஉம் என்பன. ஆசிரியப்பாவில் அமைந்துள்ள சீர்களாம். இவைகள் முறையே படும், தரும், விடும் என்பவற்றினின்றும் அளபெழுந்தனவாம், அளபெழாவழி இவையெலாம் ஓரசையானமையால் ஒரு சீராக நில்லா. அளபெழுந்தபின் ஈரசைகொண்ட சீர்களாயின. எனவே இவைகளைச் செய்யுளிசையளபெடை யென்றன்றோ குறிப்பிடல் வேண்டும். உரையாசிரியர் கூற்றுப்படி, உகரக்குறில் நீண்டு அளபெழுந்தவழியும் ஈண்டு இன்னிசை நிறைத்தற்பொருட்டு அளபெழவில்லையென்பதை யறிகிறோம். எனவே இன்னிசைக்கு உரையாசிரியர் கூறும் விதி பலவிடங்களில் பொருந்துவதில்லையென்பதைத் தெளிவாக உணரலாம்.

(3) அடுத்துச் செய்யுளிசையளபெடையைக் காண்போம்.

செய்யுளிலே தளையோ அசையோ தட்டுப்படுங்கால் அவற்றைப் போக்க எழும் 4 அளபெடை செய்யுளிசை யெனப்படுகிறது.

"திறப்பா டிலாஅ தவர்" (640)

என்ற குறளடியில் 'டிலா' என்ற நிரையசையை யீரசைச் சீராக்கும் பொருட்டு அளபெழுந்ததன்மையோடு, அடுத்து நிற்கும் தவர் என்பதோடு தளையும் பொருந்தி நிற்கிறது எனவே இதைச் செய்யளிசையளபெடையெனப் புகல்வர்.

'கைவல் சிருஅர்'; 'பொரஅப் பொருநர்'

'உளரெனப் படாஅர்'; உய்த்தன விடாஅர்'

இவற்றுள் அளபெடைகள் நான்கும் செய்யுளிசையளபெடையெனக் கூறுவர். காரணம் அளபெழவில்லையெனின் இவையெல்லாம்

ஓரசையாகவே நிற்கும். ஆனால் இவையிற்றையும் இவைபோல்வன பிறவற்றையும் செய்யுளிசை யல்ல; இன்னிசையாய் நிறுவலாம்.

சிறூஅர், பொராஅ, அரூஅ, விடாஅர், படாஅர், ஆகிய அளபெடைகளை நோக்கச் செய்யுளிசைபோற் காணப்பெறினும், அவ்வாறளபெழுந்து இன்னோசையின் பொருட்டு நிற்பதே விதியென்பதைத் தொல்காப்பியத்தால் அறிகிறோம்.

உயிர்மயங்கியலில் உயிர்முன் வல்லெழுத்துக்கள் மயங்குமிடங்களைக் குறிக்குமிடத்து அகரவீற்றுச் சிறப்பு விதிகளுள் ஒன்றாக

"குறியதன் முன்னரு மோரெழுத்து மொழிக்கு
மறியத் தோன்று மகரக் கிளவி" (உயிர்மயங்-24)

எனக்குறிப்பிடுகிறார், அஃதாவது, குற்றெழுத்தின் முன்னின்ற ஆகாரவீற்றுக்கும் ஓரெழுத்து மொழி ஆகாரவீற்றுக்கும் நிலைமொழிக்கண் அகரமாகிய உயிரெழுத்து அறியத் தோன்றுமென்பது பொருளாம். இதற்கெடுத்துக்காட்டாகப் 'பலா அக்கோடு', 'காஅக்குறை' யென்பனவற்றைக் காட்டுவர் இளம்பூரணர். மற்றும், சாரியை பெற்றவிடத்தும் 'உவாஅத்து ஞான்று கொண்டான்' என்பதையுங் காட்டுவர்.

ஓரெழுத்து மொழிக்குக் 'கா' என்ற சொல்லைத் தந்ததோடு 'யா' வென்பதும் 'பிடா', தளா வெனுஞ் சொற்களும், மெல்லெழுத்துப் பெற்றவிடத்தும் அவ்வகரம் பெற்றேவருமென எடுத்துக் காட்டுக்களைத் தருவர் உரையாசிரியர். எனவே, குறிலையடுத்துவரும் ஆகார நெடிலும், ஆகார இறுதியுடைய ஓரெழுத்து மொழியும் இயல்பாகவே அகரம்பெற்றுவடுமென்பதை இந்நூற்பாவின் விளக்கத்தாலறியலாம். 'பலாக் கோடு', 'காக்குறை' யெனலே சாலுமன்றே! பலா, கா என்பனவற்றுக் கிறுதியிலே அகரம் பெற்றமை ஓசையின் பொருட்டேயாம். "அறியத் தோன்றும் அகரக் கிளவி" யென்பது. செய்யுளிலே அசை குன்றுமிடத்துத் தோன்றும் என்ற பொருளில் இயற்றப்பெறவில்லையென்பதையும், அவ்வாறமைதலே இயல்பென்பதும் பெற்றும். இவ்விளக்கத்திற் கியையவே செய்யுட்களில் சொற்கள் அமைந்துள்ளமையைக் காணலாம்.

குறள்:—

தொழாஅ ரெனின் (2)	தெய்வந் தொழாஅள் (58)
உழாஅ ருழவர் (14)	எச்சம் பெறூஅ விடின் (238)
படாஅமை நன்றாற்றின் (36)	உண்ணாமை வேண்டும் புலாஅல் (257)
	குறுந்தொகை
பற்றி விடாஅ விடும்மை (347)	உயத்தனர் விடா அர் 5
தவாஅப் பிறப்பீனும் (361)	உளரெனப் படாஅர்

அகம்

கடாஅ வுருவொடு	(585)	அளிநிலை பெருஅ	5
படாஅ தவர்	(623)	நிலவடுக் கொளாஅ	5
கெடாஅ வழிவந்த விடாஅர் விழையும்	(809)	கன்மழ நிலை பெருஅ	6
துன்ப முருஅ வரின்	(1052)	கராஅந் துஞ்சும்	18
கழாஅக்கால் பள்ளியுள் குழாத்துப் பேதைபுகல	(840)	மராஅ மானை	18
		உராஅ வீர்க்கும்	18

புறம்

அருஅப் புனைகொடி (200)
கழாஅத் தலையை (202)
ஒருங்குவரல் விடாஅ (236)
வாய்புகு கடாஅத்த
ஈர்ப்புடைக் கராஅத்த
ஒற்றுபு கொடாஅ
உடாஅ போரா
கெடாஅ நல்லிசை
கைவல் சிருஅர்
வேர்புரை சிதாஅர்
களிறுகண் டழூஉ மழாஅல்

இவ்வாறு தமிழ்ச்செய்யுட்களில் காணப்பெறும் செய்யுளிசை யெனக் கூறப்படும் அனைத்தும் தொல்காப்பியர் இலக்கணத்திற்குப் பொருந்தி யமைந்திருப்பதை யறியலாம். இத்துணையும் செய்யுளில் அசை குறைந்தமையால் அளபெடுத்தனவெனக் கொள்ளமுடியுமோ! குறில் நெடிலாகாரத்தின்பின் அகரம் அறியத் தோன்றிற்றெனலே பொருந்தும். வேறிடங்களில் இவ்வாறு அகம் அறியத் தோன்றுமென்னுது ஈண்டுக் கூறியதால் இஃது இன்னோசையின் பொருட்டென்பதை யுணரலாம்.

மேற்காட்டிய எடுத்துக்காட்டுக்களில் படாஅமை உருமை, கழாஅக்கால், குழாஅத்து, உருஅதோர், பெருஅமை என்பனவெல்லாம் அகரமின்றியே யீரசைச் சீராக நிற்றலால் அவ் வகரம் அளபெழுந்தது. வருஞ்சீர் முதலசையுடன் தளையால் ஒன்றுவதற்கேயெனக் கூறுவருளரெனின், அது பொருந்தாமையை நிறுவுதும்.

"வீழ்நாள் படாஅமை நன்ருற்றின்"

என்ற குறளடியை யெடுத்துக்கொள்வோம். இதில் 'படாஅமை' என்பது அளபெழுந்த சீராகும். அளபெழவில்லையெனின் 'படா அமை' என நிற்கும். நிற்பின் நேரொன்றிய ஆசிரியத்தளை யமைந்து வெண்பாவிற்கேற்ற தளை யமையாதாகிவிடும். அன்

பெழுந்த நிலையில், விளமுன்நேர் என்ற இயர்சீர் வெண்டளை வந்தமையும். எனவே இது செய்யுளிசை நிறைக்கவந்த செய்யுளிசையளபெடை யென்பர். ஆனால் படாமை யென்பதில் 'படா' என்ற அசை, குறிநெடில் ஆகாரவீறானமையால் ஆகாரத்தின்பின் அகரம் ஆறியத்தோன்றி அதற்கேற்ப வருஞ்சீர் நேர்சைத் தொடக்கத்தோடமைந்தது எனவே பொருந்தும். படாஅமை யென்பது வெண்பாவுள் அமைந்தமையால் செய்யுளிசை நிறைக்கவந்ததென மொழியின், ஆசிரியப்பாவுள் அமைந்தால் என்னெனக் கூறுவது. வேறு சில எடுத்துக்காட்டுக்களைக் காண்போம்.

நிலத்துக் காஅங்கு (குறுந் 27)
அணவந் தாஅங்கு (,, 128)
கழனி மாஅத்து (,, 128)
முகனமர்ந் தாஅங்கு (அகம் 6)

இந்நான்கு எடுத்துக்காட்டுக்களைக் காண்க. இவையெலாம் செய்யுளிசை நிறைக்கவந்தவையெனக் கூறலாமோ! இவை அளபெழவில்லையெனின் காங்கு, தாங்கு, மாத்து, தாங்கு என நிற்கும் இவையெலாம் ஈரசைச் சீர்களாக, ஆசிரியப்பாவிற்கேற்ற ஆசிரியவுரிச்சீராகவே அமைந்துள்ளன. எனவே இவை அளபெழத் தேவையில்லை. அங்ஙனமாயின் அளபெழக் காரணமென்னையெனின், இன்னோசை பயத்தற்கேயெனல் பொருந்தும்.

இவ்வண்ணமே, ஆசிரியப்பாவில், கடாத்த, மரத்த, கழலவும் என்பன, கடாஅத்த. மராஅத்த, கழாஅலவும் என்றளபெழுந்ததெலாம் தட்டிய தளையைத் தட்டாமற் செய்யவோ, குன்றிய அசையை நிறைசெய்யவோ அன்று. இன்னிசைப் பொருட்டேயெனத் தெளியலாம், மற்றும்,

போஒய்ப் பெறுவ தெவன் (குறள் 46)
போஒ மளவுமோர் நோய் (,, 848)
சொல்லாடப் போஒ முயிர் (,, 1070)
கோஒல் செம்மையில் (புறம் 117)
ஒண்ணுத்ற் கோஒ வுடைந்தது (குறள் 1088)
ஓஒதல் வேண்டும் (குறள்)
ஓஒ வினிதே (,,)
இரப்புமோ ரேஎ ருடைத்து (,, 1054)

தேஎத்த (அகம் 31) நயந்தோர் தேஎம் (பெரும்பாண் 425)
யாஅத்து (,, 31) பணியார் தேஎம் (,, 230)
தாஅய் (,, 12) சிறந்த தேஎத்து (,, 506)
சாஅய் (,, 14) பின்னர் மேஎய (மதுரை 577)
சாஅய் (சிறுபாண்) இரும்பிடி மேஎந்
தோஅன்ன (,, 634)

இவையெலாம் (இரண்டொன்று நீங்கலாக) ஓசை யீரசையாதற் பொருட்டு அளபெழுந்துள்ளன ; எனவே செய்யுளிசையளபெடைகள் எனக் கூறுமோவென்னின், கூறும்.

"குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்"

என்ற நூற்பாவிற்கிணங்க ஆகார நெடிலுடைய ஓரெழுத்து மொழிக்குப் பின்னர் அகரம் அறியத் தோன்றிற்றெனலே ஒவ்வும். ஓகாரமும், ஏகாரமும், அளபெழுந்தனவாலெனின்,

"ஈகார விறுதி யாகார வியற்றே" (தொல்-உயிர் 47)
"ஏயென் னிறுதிக் கெகரம் வருமே" (,, ,, 75)
"வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே
ஒகரம் வருத லாவயி னான" (,, ,, 90)

என்ற நூற்பாக் கருத்தால் தெளிவுறும்.

பிறவிடங்களில்—குறில் நெடிலாகாரம், ஆகார, ஈகார, ஏகார, ஓகார ஓரெழுத்து மொழிகளல்லாத பிறவிடங்கள், அ, இ, எ, ஒ ஆகிய குற்றுயிர்கள் அறியத் தோன்றுமெனத் தொல்காப்பியர் விதி விடுக்காமையாலே மேற்கூறப்பட்டவையெலாம், இன்னிசைப் பொருட்டே, யளபெழுத்தாற்போல் நின்றனவெனக் கொள்ளுதலே பொருந்தும்.

மற்றும் சில எடுத்துக்காட்டுக்களைக் காண்போம்.

"மாஅகாவிரி மணங்கூட்டும்" (பட்டினப் 116)
"தூஉவெக்கர் துயின்மடிந்து" (,, 117)
"தேர்பூண்ட மாஅபோல" (,, 123)

இவற்றுள் 'மாகாவிரி', 'தூவெக்கர்', 'மாபோல' என்பன இந் நிலையில் நிற்பினும், தளையோ, அசையோ பிழையாவாம். அள பெழுந்த நிலையிலும் மூவசைச் சீர்களாகவே நிற்கின்றன. இந் நின்ற நிலையினும், அளபெழுந்தவழி ஓசை இனிமையுடையதாதலை யறிகிறோம். எனவே, இவை இன்னிசை யளபெடைகளெனக் கூறலே பொருந்தும் நிற்க.

'குரீஇ' என்ற சொல்லை நோக்குவாம். இச்சொல்லிற் காணப்பெறும் அளபெடையை இயற்கையளபெடை யென்பர். ஆனால், சொல்லிசை யளபெடையில் கூறியவாறுபோல, 'குருவி' யென்ற சொல்லின் இறுதி வகர மெய் ஒலித்தற்குக் கடினமாகை யால் நீங்கிக 'குருஇ' என்றாகிப் பின் உயிரொலியியையு என்ற விதிப்படி குரிஇ யென்றாகிப் பின்னர் குரீஇ யென அமைந்த தெனலே பொருந்தும்.

இறுதியாகக் கழாஅத்தலையார், நரிவெரூஉத்தலையார் செவியறிவுறூஉ, என்பன போன்ற பெயர்ச்சொற்களும் இயல்பாகவே அள

(150-ம் பக்கம் பார்க்க)

சுந்தரக் கலையோவியம்.

இர. குழந்தைவேலு, எம். ஏ.

——::——

1

புலமைத் திருவினர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை மனோன் மணீயத்தைக் கற்றறிந்த நுண்ணறிவாளர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தம் நாடகத்தில் பெற்ற பொருண்மைச் சுவையில் திளைத்த திளைப்பை நினைந்து,

"சொல்லி லமுதம் கனிந்து சுவை
சொட்டச் சொட்டக் கவிதருவோன்"

(சுந்தரன் பாமாலை)

எனப் போற்றிய மாசில்புகழ் பாவாணர் அவர். அப்பெருமகனார் கவிமணியார் 'சிவகாமி சரித'த்தை நினைந்தபோதும்,

"சிந்தை கவரும் சிவகாமி நற்சரிதம்
செந்தமிழில் சுந்தரன் செய்தனனால்-முந்தவரு
மூலத்தை வெல்லும் மொழிபெயர்ப்பென் றேஎவரும்
சாலப் புகழ்ந்திடவே தான்'

(சுந்தரன் பாமாலை)

என்று அதன் வான்புகழ் தோன்றக் காட்டியுள்ளார்.

அவர் காதலுற்ற அககாதலின் கலையோவியம்—சிவகாமி சரிதம்—கற்றவர் நெஞ்சைக் கவர்ந்து. நாடகப் பேராசிரியர் எண்ணியது

(149-ம் பக்கத் தொடர்ச்சி)

பெடையுடன் ஆளப்பட்டுள்ளன. பேராசிரியர் போன்ற உரையாசிரியர் உரைநடைக்கண்ணேயும் அளபெழுந்த சொற்களைப் பயன்படுத்துகின்றனர். அவையெல்லாம் ஒலித்தற்கு இனிமையுடைமையாலேயே பயனுறுத்தப்பெற்ற என்பதையும் உணரலாம்.

எனவே, இறுகாறுங் கூறியவாற்றான், செய்யுளின்கண்ணும், சிறுபான்மை உரைநடைக்கண்ணுங் காணப்பெறும் அளபெடைகளெல்லாம், இன்னோசையின் பொருட்டே அளபெழுந்தனவெனலாம். செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசையெனப் பாகுபடுத்தாமல், காணப்பெறும் உயிரளபெடையெலாம் இன்னிசை யென்ற ஒரே அளபெடையின்கண் சேர்த்துக் கூறிவிடலாம்.

இத்தகைய ஓசையினிமையுடைய அளபெடைகள் தற்காலப் புலவர்களாலோ, புற்றீசல்போல் பெருகிவருங் கவிஞர்களாலோ ஆளப்பெறுமை வருந்துதற்குரியதே. செய்யுட்கு இனிமை தரும் இவ்வளபெடைகளைப் புலவரும், கவிஞரும் பயன்படுத்தினால் செய்யுளும், கவிதையும் இனிமைபெற்றுப் பொலிவுறும்.

———

போல எண்ணவும், உணர்ந்தது போல் உணரவும் செய்யும் பேராற்றல் வாய்ந்தது.

2

வாணி மனோன்மணியின் தோழி. மனோன்மணிக்கென வாழும் பிறவியெடுத்தவள் அவள். காதலனோடு நேரடியாகக் கண் கலப்புக் கொள்ளாதவள் மனோன்மணி. அவள் உள்ளக் கருத்தை வாணி கலந்து பழகி அறிந்தவள், பற்றிய காதல் சிறந்து பல்கிப் பெருகவே,

'' பாக்கிய சாலிநீ! பழகியும் உளையே!
நீக்குக இத்தீ நினைவு! யாழுடன்
தேக்கிய இசையிற் செப்பொரு சரிதம்
[வாணி வீணை மீட்ட]
அவ்விசை யேசரி ஒவ்வுமித் தருணம்! ''
(III, iii, 34-37.)

என்று உறக்கங்கெட்டு ஏங்கி வாணியிடத்து வேண்டினான் மனோன்மணி அவளது அத்திறத்து மனத்தைப் பண்பட்ட குறிக்கோள் ஓங்கிய நம்பிக்கை நெறியில் தலைப்படுத்தக் கருதினாள் வாணி. அவ் வடிப்படையில், 'சிவகாமி சரித'த்தை நெஞ்சம் இனிக்கத் தமிழிசைக் கனிவொடு வாணி நல்லாள் பாடலாயினாள். இந்தக் கண்கொண்டு 'சிவகாமி சரித'த்தில் கருத்துச் செலுத்துதல் நலமூட்டுவதாகும்.

3

நெடுங்காட்டு வழியில் இளைஞன் ஒருவன் புறப்பட்டான்; வளைந்து வளைந்து வழியறியாது வழிமாறிச் சென்றான். அவனது உள்ளத்தில் சோர்வு எழுந்தது. அக் காட்டு வழிக் கடுஞ்சோலையில் முனிவர் ஒருவரைக் கண்டான் அவன். அக் காலை அவர்பால், தன்னிழல் எல்லையினைக் குறித்துக் கொள்ளாது, அந்நிழலின் அளவை அளத்தற்கு நாட்டங்கொண்டு அளவிட்ட ஒருவனது அள விற்கு எட்டாது நீளும் நிழலைப்போலத் தான் நடந்த நடைக்குக் காட்டின் எல்லை கடத்தற்கு அரிய நெடுந் தொலைவாக நீண்டதனையும், அலைந்த அலைச்சல் துன்பத்தினையும், நடைக்குத் தடையாக இருள் மண்டிக்கிடந்தனையும், நடந்த நடையால் உடலுற்ற வருத்தத்தினையும் உரைத்துத் தங்குதற்கேற்ற வீட்டிற்கு வழியினைக் காட்டி வருந்தி அழியும் வருத்தத்தினைத் தீர்க்கக் கனிந்து வேண்டி நின்றான்.

'' வாழிய நின் மலரடிகள்! மௌனதவ முனிவ!
மனமிரங்கி அருள்புரிந்தோர் வார்த்தையெனக் கீயில்
பாழடவி இதிற்சுழன்று பாதைவிடுத்தலையும்
பாவியொரு வனையளித்த பலனுறுவை பெரிதே.

சர்ரும்வரை குறியாது தன்னிழலை யளக்குந்
தன்மையென நான் நடக்கத் தான்வளரும் அடவி.
ஆரிருளில் இனிநடக்க ஆவதில்லை. உடலம்
ஆறும்வகை வீடுளதே லடையுநெறி யருளாய்''
(சிவகாமி சரிதம், 1, 2,)

இளைஞனுடைய குறைகளையெல்லாம் செவிகொடுத்து வாங்கிக் கொண்டு, "மகனே, தனித்த இவ்விரிந்த காடு தனித்தது. இங்குத் தங்குதற்கு முயல்வோர் எவரும் இலர். நீ தங்குதற்கு மடமும் இன்று. இப்பரந்த வெளியிடமே எனது வீடு: விருப்பு வெறுப் பற்ற முனிவர்பால் உலகப்பற்று முளைத்தற்கு இடனுண்டோ? இன்று. அத்தகு தவவல்லமையொடு அறம் வாழும் நெஞ்சினரே எனது வீட்டினை எய்துவர். அந்நல்லோர் உறங்குதற்குப் பூப்படுக் கையும் பருகுதற்குப் பாலையும மதித்திலர். ஆதலான், எனது அடிச்சுவட்டினைத் தொடர்ந்து வருக. என்பாலுள்ளது உனக்கு உரிமை. வழிச் செலவால் உற்ற உடற்சோர்வும் வருத்தமும் கலைதல் ஒருதலை. இரவு மறையப் பகலில் ஒளி பரந்து நிறையும். பின்னர்க் கதிரொளியில், விருப்புற்றால் விருப்புற்றவிடம் செல்க" என்று முனிவர் பெருமகனார் தம் உறைவிடத்துப் பெருமைகளை நயனுற எடுத்துறைக்கலாயினர்.

"ஏகாந்தப் பெருங்ககனம்; இதினுலக ரணையார்;
சென்றுறைய மடமுமிலை; திகழ்வெளியென் வீடு;
சிந்தையுற நொந்தவர்க்குச் சேரவிலை பந்தம்.
அறங்கிடந்த சிந்தையரா யாசையெலாந் துறந்த
அதிவீர ரொழியஎவ ராயினுமிங் கடையார்
உறங்கஅவர் பணிப்பாயும் பூவணையும் உன்னார்
உண்ணவெனில் பாலமிழ்தும் ஒன்றாக மதியார்:
ஆதலிலென் பாலுறுவ தியாதெனினு மைந்த!
அன்புடன் நீ யென்பிறகே யணியிலஃதுனதாம்,
வேதனையும் மெய்ச்சலிப்பும் விட்டகல இருளும்
விடியும் உடன் மனமிருக்கில் வேண்டுமிடம் ஏகாய்"
(சிவகாமி சரிதம், 3-5)

முனிவரது நிறைமொழியெல்லாம் கேட்ட பின், இளைஞன் நெஞ்சில் பழைய நினைவு தளிர்ந்தது. ஆதலான், அரும்பிய கண்ணீர் நிறைந்து அவனது கண்ணீர் பார்வையை மறைத்தது. அந்நிலையில், முனிவர் முன்னே சென்றார்; பின்னே அவன் வணங்கி நடந்து தொடர்ந்தான்.

அக்காட்டில் கடுமையதாய நெறியின் புனைவில் கரந்து அமைந்து கிடக்கும் நூல்நயம் உவட்டாமல் இனிப்பது. அங்கு இருள் திரண்டது. விண்ணில் மீன்கள் பூத்தன. அவை தம்முள் கண்ணோடு கண்காட்டி மறைபொருள் நவின்று நகைமிக முறுவலித்தன. இதனுள், சுவையூட்டவல்ல குறிப்பு ஒன்று உண்டு.

இளைஞன் நெஞ்சகத்து மலம்–கட்டு–மாசு ஊறிச் சேர்ந்தது, எனவே, அவன் வீணை அவாவுற்றுப் பாழடவியில் பாதைவிடுத்துக் கலங்கினான் ; ஓடி ஓடி அலைந்தான் ; தன் மெய்யுணர்வைக் கைவிட்டான். மாசு மனத்தைப் பற்றிப் பிணித்தது. அவ்வல்லமை இயக்கவே, எங்குமாய்ப் பார்க்கின்ற மலரூடும் நிறைந்திலங்கும் கடவுள். தன்னருகிலும் கடக்காது திகழ்தலை அக்கடவுட் காதலனால் தெளிந்து (முனிவர் அருகில் வீடுபேறு நயக்கும் அன்பன் ; காதலின் கலையோவியத் தலைமகன் சிதம்பரன் அருகில் சிவகாமி) அடையவியலாது போயிற்று. அவ்வியலாமையொடு அறிவற்றுத் துன்பமெல்லாம் விடுதலையுற்ற அவ்வளவில், வீடுபெறும் திறமுமின்றிக் கடவுளன்பானது மலங்கெடாது மனங்கெட நேர்ந்தது. இவற்றைக் கண்டு தம் அகத்தும் புறத்தும் இருள் கூடாத விண்மீன்கள் நகையாடியிருத்தல் கூடும. இவ்வெண்ணத்தில் இயைந்து விளங்கும் பொருத்தத்தினை,

> "இந்திரநற் சாலவித்தை யெதுவோவென் றிழைக்க
> இட்டதிரை யெனத்திசைக ளெட்டுமிருள் விரிய
> அந்தரத்தே கண்சிமிட்டிச் சுந்தரதா ரகைகள்
> அரியரக சியந்தமக்கு ளறைந்து நகைபுரிய"
> (சிவகாமி சரிதம், 7)

என்னும் முற்றுப்பெறாத பாத்தொடர்களுள் கற்க இடனுண்டு. இவ்விண்மீன்கள் நகைப்பு அரும்ப உரையாடல் நிகழ்த்திய போக்கு,

> "துணிவெளுக்க மண்ணுண்டு,—எங்கள் முத்து
> மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
> தோல்வெளுக்க சாம்பருண்டு,—எங்கள் முத்து
> மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
> மணிவெளுக்கச் சாணையுண்டு,—எங்கள் முத்து
> மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
> மனம்வெளுக்க வழியில்லை, எங்கள் முத்து
> மாரியம்மா, எங்கள் முத்து மாரி!"
> (தெய்வப் பாடல்கள், முத்துமாரி)

என்ற பாரதியின் பாத்தொடர்களை நினைவுறுத்தும்.

மனோன்மணி, ' சிவகாமி சரித" த்தைதுய்த்தற்கு முன்னா, இணைபிரியா அன்றில் கூவல் செவிக்கு ஏறியமையால் தன்னிடத்துமிகுந்த பால்வேட்கையை மறைத்தாள் ; மனமழிந்து.

> "இதுவரை
> எங்கிருந் தனவிவ் அன்றிற் பேய்கள்!
> நஞ்சோ நாவிடை" (III, iii 7–9)

என்று அன்றில் கூவல் இனிமை தரவில்லை என நொந்தாள். அதனை உளங்கொண்ட வாணி, அவன் துணிந்து சென்ற அவ்வழியில், உயிர்மெய்யாக எண்ணத்தக்க வாழ்வில் காதலால் ஒன்றிய

இரட்டை அன்றிற் பறவைகள், இணை சிறிது பிரியவே கூவிக் கூவித் துடித்துக் குரல் எழுப்பின எனப் பாடலாயினள்,

"என்புருகப் பிணைந்த அன்றில் இணைசிறிது பிரிய
ஏங்கியுயிர் விடுப்பவர்போ லிடையிடையே கூவ"
(சிவகாமி சரிதம், 8)

இங்கு, வர்ணி, சிற்றிலக்கியக் 'குறவஞ்சி'யில் குறவர் மகள்–குறவஞ்சி–குறி சொல்லும் நெறியில், மனோன்மணியின் காதல் கலக்கத்தைச் சுட்டப்பெற்ற நலம் புலப்படல் உன்னற்பாலது.

ஊக்கமுள்ள இளைஞன் முனிவரொடு இருள் சூழ்ந்த இரவில் தொடர்ந்து சென்ற அவ்வழி, யானை, பாம்பு, புலி முதலியவற்றின் இடையூறு பெருகியது. மனோன்மணி தன் உள்ளத்தே குறிக்கோளொன்று வைத்துப் படாதபாடு பட்ட பாட்டை எண்ணி வெதும்பியே அக்காடு இத்தகையது என்று வாணி எடுத்துக் கூறினள். கனவில் கண்டவரை—புருடோத்தமரை—மன்றலஞ் செல்வராக எய்தப்பெறுதலே மனோன்மணியின் வேணவா. காட்டில் விலங்கின் இடையூறுகள் ஒடுங்கியிராது, அதுபோலக் குடிலனது கொடுமன எண்ணம் புறத்தடையாகக் காழ்த்து வன்மையுற்றது: மனோன்மணியின் நோக்கத்தை அசைத்து வளர்ந்தது. இக்குறிப்பு விளங்கிக் கிடக்க வாணி இயம்பியிருத்தல் இங்கு நினையத்தகும் செய்தி. இவ் வாழ்வுப்போரில் கலங்காது நடுக்கம் ஒன்றுனுமின்றி நகுதல் செய்து, அப்புறத்தடையினை எளிதே வீழ்த்தி எறிதற்கு வாய்ப்பு மிகுதியும் உண்டு என்று வாணி மனோன்மணிக்கு நம்பிக்கையூட்டி ஆற்றுவித்த பக்குவம் இது.

"பொறியரவின் சுடிகையுறு பொலன்மணியி னொளியும்,
பொலிமதத்தின் கறையடியின் புலைமருப்பி னொளியும்
அறிவரிய சினஉழுவை அழல்விழியி னொளியும,
அலதிலையவ் அடவியிடை யயல்காட்டு மொளியே"
(சிவகாமி சரிதம், 10)

அவ்விளைஞன் செடிகொடிச் செறிவுக்கிடையே அவற்றை அகற்றினான்; சிறிது தொலைவு 'பிரிவரிய ஊசிவழி பின்தொடரும் நூல் போல்' முனிவரைப் பின்தொடர்ந்து வழி நடந்தான். அணிமையில் ஓர் அழகிய மனை; பூட்டும் பொருந்தியது; வாயிலும் கொண்டது; வலிமை பொருந்திய சுற்றுச் சுவரும் உடையது என்றின்ன மரபொன்றுமில்லாத் தனியிடம் விளங்கிற்று. அங்கு குறுகிய முனிவர் நெருப்பு ஓங்கிக் கனிதற்கு நல்விறகு அடுக்கலாயினர். தீயும் பற்றிக்கொண்டு செந்நெருப்பாயிற்று; ஒளியும் ஒளிர்ந்தது. ஆண்டவனுக்கும் அடிமைக்குமிடையே தோன்றிய அன்பினை அறிவிக்கும் நிலைக்கு ஒப்ப, இளைஞன் சற்று நாணிப் பின்வாங்கி ஒதுங்கி நின்றான்.

4

அணுகாது விலகியிருந்த இளைஞனது மனம் மகிழ்சிறக்க முனிவர் முன்னே சில நலங்களைக் குறிப்பிட்டார். இளைஞன்

மகிழ்ந்தினிது இராது கவலைகொண்டிருந்தான். முனிவர் இளைஞன்பால் கொண்ட அன்பால் இரங்கினர்; இருவருமே ஒருவராயின போது சிறியர் பெரியர் எனும் ஏற்றத்தாழ்விற்கு இடனின்று என்று வேற்றுமையற்ற உரிமையினை உவந்து உகக்க உரைத்தார்.

இளைஞன் முனிவர்தம் கனிந்த சொல்லுக்கு வாய்திறந்து ஓர் உரையும் சொல்லாடாதிருந்தான்; கண்ணினின்றும் நீர்த்துளிகள் திரண்டுவிழ முகங்கவிழ்ந்து அவலித்தான். இதனைச் சற்று ஊன்றிக் கருதித் தெளிவை நினைந்து, "அன்ப, எழிலாரும் இவ்விளமையில் திருமனை நீங்கி இம்மாற்றுடையில் இங்குப் புகுந்தது, அடுக்கி வந்துற்ற இடுக்கண் மனத்துள் தைத்ததன் விளைவோ? நின் கவலை யாது? நெஞ்சகத்து உள்ளது என்னை? அரும்பெறல் பொருளை இழக்க நேர்ந்ததோ? தோழமை பூண்டவர்தம் உரையாடல் நகைகிடம் நல்கக் கலக்கமுற்றுயோ? கழிபெருங் காதலால் நின் நெஞ்சகத்தைப் பிணித்த காதலி பொய்மை மனத்தால் புறக்கணித்துவிட்டனளோ? நெஞ்சம் திறந்து வெளிப்படுத்தற்குத் தடையேது?" என்னும் ஐய வினாக்களைத் தொகுத்து இளைஞனிடத்து மற்ற செய்திகளோடு இனிது வாயாடினர் முனிவர்.

கருதத்தக்க நாடக நுட்ப நலத்தைப் பேராசிரியர் சுந்தரனர் இங்குச் சிறப்பித்துள்ளார் என்பது விளங்கித் தோன்றக் காணலாம். மனோன்மணி வாழ்க்கையில் நற்பற்று மிக்கவள் வாணி. அவள், தான் கலந்து உணர்ந்த உண்மையினை உட்கொண்டாள்; மனோன்மணியின் நெஞ்சில் மறைந்து நிலவும் காதலுணர்ச்சியை முகத்தின் வழியாக உணர்தற்கு,

"காதல்கொள நீவிழைந்த மாதுபெருஞ் சூதாய்க்
கைவிடுத்துக் கழன்றனளோ? மெய்விடுத்துக்கழறுய்'

எனவும்,

"பெண்களகக் காதலெலாம் பேசும்முயற் கொம்பே!
பெருங்கபட மிடுகலனே பிறங்குமவ ருடலம்!"

எனவும் முனிவர்தம் வாய்மொழியில் பொருத்தி நயம்பொலிய இடித்துரைத்தல் போன்ற இம்முயற்சியினை மேற்கொண்டாள். நாடகக் கருத்தோட்ட அமைப்பிற்கேற்ப, வாணி மனோன்மணியை நோக்கினள்; அவளது முகக்குறிப்பையும் இடையிடையே கண்டு உருக்கமாகச் 'சிவகாமி சரித'த்தைப் பாடினள். இங்ஙனம் கருத்துக் கொள்ளுதற்கு இப்பகுதி வாய்ப்பளிக்கின்றது. வாணி தன் முயற்சியால் மனோன்மணியிடத்து வினங்கிக்கொண்டு வெற்றியுற்றதை,

"ஏதிலனீள் கனவுவிழித் தெழுந்தவன்போல் விழித்து
விரிவெயிலில் விளக்கொளியும் மின்னெளியிற் கண்ணும்
வெளிப்பட்ட கள்வனும்போல் வெட்கிமுகம் வெளுத்தான்"
(சிவகாமி சரிதம், 25)

என்று அடுத்துச் சுட்டிச் சுவைப்படுத்திய பாங்கு அழகியது. அது நாடகப்பயன் நிறைத்து இன்புறுத்துவது.

இதற்குப் பின்னர் முனிவர் இளைஞனைக் கண்டார். இளைஞன் முகத்தை நாணம் விரைந்து தழுவிற்று. முனிவர்க்கு அந்நிலை வியப்பைத் தந்தது. நனி நாணம் தடுக்கவே மறைத்தாலும் மறைக்க வியலாத கூந்தல் சரிந்தது. அங்கு எழுந்த நெருப்பின் ஒளி பாயப்பாய உடைப்புனைவில் மறைந்திருந்த நங்கை வெளிப்பட்டாள்; கவினொடு பொலிந்தாள். அவள் நெஞ்சம் புத்துணர்ச்சியால் கரைந்துருகவே எழுந்து,

"அவனருளாலே யவன்தாள் வணங்கி"

(திருவாசகம், சிவபுராணம் 18)

என்று மாணிக்கவாசகர் போற்றிய அருள் எழுச்சிக்கு விளக்கம் போல, முனிவர்தம் அருளைத் துணைகொண்டாள்; அவரது திருவடி தனைத் தொழுதாள். இஃது,

"இருடிபதந் தலைவணங்கி"

(சிவகாமி சரிதம், 29)

என்னும் தொடரின் கருத்தால் புலப்படும்.

மேலே வாணி 'சிவகாமி சரித'த்திற்கு முன்னுரையாக இசைத் தமிழ் வளம் அமைந்த புனைவினை, மனோன்மணி உள்ளத்துள் பதிய வைத்தாள்; பின் இசையில் ஈடுபடச் செய்தாள். மனோன்மணி யின் நெஞ்சமும் அதன் வழிப்பட்டது; இனிக் கதையின் போக்கு எப்படியோ என்று எதிர்நோக்கும் விழைவு கொண்டது. இங்ஙனம், நுனித்து அறியும் வேட்கையினை மனோன்மணிக்கு ஊட்டினாள் வாணி. இது, மேற்காட்டிய செய்திகளால் தெளிய வழியுண்டு. மனோன்மணி மனத்துள் புகுந்து ஆவல் வளரத் தூண்டியது வாணி யின் இசைக் கலைத்திறம், தனித்திறம் வாய்ந்தது அது. அடுத்து, ஆணுடையினின்றும் வெளிப்பட்ட மங்கை, தன் வாழ்க்கைக் குறிப் புக் கோவையினைத் துன்பத்தின் ஆழம் பொங்க முனிவர்க்குக் கூறிய தனை வாணி அறிவுறுத்தலாயினாள்.

6

வளத்திற் சிறந்தது காவிரிப்பூம்பட்டினம், அப்பேரூரில் வணி கம் செய்து வல்லமையோடு வாழ்ந்தார் தாய் ஒருவர். அத்தாய்க்கு மக்கள் மூவர். அவருள் தாயினத்தவர் இருவர்; மற்றொருவர் ஆண் மகனார். அவ்வன்னையின் தலைமகள் ஒரு பெண் மகவிற்குத் தாயா வாள், மற்றொருத்தி மகப்பேறின்றி நலிந்தவள்; செல்வத்தில் அவ ளுக்கு ஏனை இருவரும்—எவரும்—நிகராகார். அவ்வாடவர்தம் மகன் கட்டழகு மிக்கவன்.

இளைஞனும் செல்வியும் உள்ளம் கலந்து நெருங்கிப் பழகினர்; அவ்வுறவு காதலை வளர்த்தது. தலைமகட்குச் செல்வத்தால் சிறந்த

தன் சிற்றன்னை பொருள் நல்கினாள். அவள் அப்பெருகிய வளத்தால் செம்மாந்து காதலனை மறந்தாள்; அன்பன் காதல் வெம்மையால் எய்திய எல்லையற்ற துயரத்தினைக் குறிப்பாலுணர்த்தப் பெற்றும் மதித்தாளில்லை. தலைமகன் ஏக்கத்தோடு அகன்றான்.

அத்தலைமகளது அழகு செல்வம் என்றின்ன நலங்களால் மணங்கோடற்குக் கொடுப்போரை அணுகியவர் பலராவர். அங்ஙனம் அணுகிய மக்கள் அன்பின் பெருமையினை உணராதவர்; அன்பின் அருமையினை நினையாத நிலையில் மாசுற்ற மிகத்தாழ்ந்த நெஞ்சினர். பின்னர்த் தன் காதலன் நல்லனே எனக் கருதிய தலைமகள் எண்ணி எண்ணித் தேடித் தேடி மனந்தளர்ந்தாள். அவளது தோழியரும் உளங்கரையாது எங்ஙனம் அவனிருக்குமிடம் அறிதல் கூடும் என்று கூறிச் சிரித்தனர். அம்மகன் தங்கியுள்ள இடம் அறிதற்கு அரிதாயிற்று எனவே அவள் மிகுதியும் துயரத்தால் இடர்ப்பட்டுச் சோர்வடைந்தாள்.

ஆடைப்புனைவில் கரந்து நின்றவள் மொழிந்த அத்துணையையும் முனிவர் நினைவுகூர்ந்தார். முன்னைய நிகழ்ச்சி நிரல் அம்முனிவருள்ளத்தையுருக்கிவிட்டது; மனத்திண்மையால் அதனை அவ்விடத்துப் புலப்படுத்தாது நெஞ்சுள் சிறை செய்யலாயினார். மனங்கசிந்த முனிவரிடத்துத் தன் அன்பர் சாயலைக் கண்டாள் அவள், அத்துணையும் நெஞ்சம் திறந்து வெளியிட்டு ஆறுதல் பெற்றதனையும் அவள் தெளிவுபடுத்தலாயினாள் இனி, உலகத்தில் வாழினும் பயனற்றது ஆம் என்று அவள் கண்டாள்; அது குறிக்கோள் அழிந்த வாழ்க்கையே ஆம் என்னும் உள்ளம் கொண்டாள். அவள் மனம் வெதும்பித் தீப்பாய முனைந்து,

> "இனியிருந்து பெறும்பயனென் ? இவ்வழலே கதி"
>
> (சிவகாமி சரிதம், 47)

என்று அவள் மெய்யாகப் பிரிவிடைப் புலம்பினாள். அவ்வவலச் சொற்கள் முனிவர் தம் செவியேரு முன்பே தா நடுங்க,

> "சிவகாமி யானுனது சிதம்பரனே"

என்றார். அவ்வளவில், முன் அள்ளி அணைந்தவர் எவர் என்று அறியக்கூடாத பிரிவரிதாகிய கலப்பில்-அத்துவித நிலையில்-ஒன்றி மகிழ்ச்சியில் திளைத்தனர்.

7

> "ஆக்கத்தை நீக்குமுன்னே ஆவித்துணை வரை நான்
> தாகத்தின் வண்ணம் தழுவுவனோ பைங்கிளியே ?"
>
> (பைங்கிளிக் கண்ணி, 56)

என்பது தாயுமானவர் தம் சமயக் குறிக்கோள் வளர்ந்த நெஞ்சவிருப்பின் பெருக்கம். இம் மன நிலையில் சிவகாமியும் தன் கண்மணி குளிர்ப்பச் சிதம்பரனைக் கண்டு தழுவிக் களிக்க விழைந்தாள்.

"சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே"
(திருவாசகம், புணர்ச்சிப்பத்து, 4)

என்று கடவுள் இன்பம் அன்றி வேறு எதனையும் எண்ணாத மாணிக்கவாசகனார் கொண்ட வேட்கையினைப் போல, விடாப்பிடியாகச் சிதம்பரனைச் சிக்கெனப் பிடித்தல்வேண்டும் என்று அவனையே சிவகாமி நயந்த நயப்பும் விளைந்து முற்றியது சிவகாமி, 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' அன்புள்ளம் உருகினாள், அந் நல்லருள் கனிந்து அவனது நெஞ்சுள் பாய,

"இருவருமற் றேருருவம் ஆனார்"
(சிவகாமி சரிதம், 48)

என்னுமளவில் காதலில் ஒன்றுகி உயர்ந்த மனத்தொடு தலைப்படல் நேர்ந்தது. இனிமை தருவதாகிய பற்றுதலை—அத்துவித நிலையினை,

"பாலொடு தேன்கலந் தற்றே"
எனத் திருக்குறள் (1121) குறுந்தொடர் நவிலும் இவ்வுண்மையினை,

"உயிரியைத் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்" (அகம், 339)

என்று நரைமுடி நெட்டையர் பெருமைப்படுத்தலாயினர்.

காட்டிடைப் புறத்தடையாக விளங்கியது விலங்கினம். இறைவனது அருள் பாய்ந்த அளவில் விலங்கினம் விலகி ஒளிந்தது; சிவகாமியும் வெற்றியுற்றாள். அவ்வண்ணமே கடவுள் அருட்பார்வை நல்கவே மனோன்மணியது முன்னேற்ற வாழ்விற்குப் புறத்தடையாக அமைத்த குடிலனும் அஞ்சியோடி ஒடுங்குதல் ஒருதலை. இந்நிகழ்ச்சித்திரட்சியைப் பேரின்பப் போக்கிற்கு ஏற்றி விளக்குதல் சிறப்பு, அந் நலத்துள் மேலைக்கண்ட காதல் இன்பக் குறிப்பினை-சிதம்பரன் சிவகாமியார் கூட்டுறவினை-உட்கருத்தாய்க் காண்டல் கூடும்.

8

இசைக் கலைவடிவான வாணி மனோன்மணியின் வாட்டங்கண்டாள்; நலிவின்றி ஊறு நீங்கி வாழவல்ல வழியை ஆற்றுப்படை மரபில் நின்று குறிப்பாகச் சுட்டினாள்; நம்பிக்கையூட்டும் காதல் வரலாற்றை ஓவியம் தெளிவிக்கும் செய்தியாகப் புனைவுசெய்து பாடலாயினாள். இனிவரும் செய்தி என்னை என்று நாடகச் சுவைஞர் நெஞ்சம் அவாவுதல் வேண்டும். அவ்வெண்ணத்தை உருவாக்கிக் கவருதற்கு இடம்வேண்டும். இத்தகு சிறப்பினை நோக்கிப் பேராசிரியர் சுந்தரனார் 'சிவகாமி சரித'த்தை மனோன்மணீய நாடகத்தின் நடுவிடத்துள் அமைத்துள்ளார் என்பது செவ்விதின் விளங்கும்.

தமிழ் நூற் குறியீட்டு விளக்கம்.

(ச. பாலசுந்தரம்)

முன்னுரை:—

இருங்கடல் உடுத்த இப்பெருங்கண் மாநிலத்துக் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடியினர்க்குரித்தாய், இருவகை வழக்கிலும் இன்றும் நின்று நிலவும் தண்டமிழ் மொழியின் முதன்மையும் தொன்மையும் தெற்றெனக் காணவியலா உண்மை கண்ட சான்றோர் தமிழ் மொழி படைப்புக் காலத்தே இறைவனாற் படைக்கப்பட்டதென ஒப்பியும் செப்பியும் வந்தனர்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்"

என்பது தொல்காப்பியம்.

"என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டான்" எனவும் "தழற்புரை நிறக்கடவுள் தந்ததமிழ் தந்தான்" எனவும் கம்பர் கூறுவர்.

"ஆதியிற்றமிழ்நூல் அகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ்ஞானம் நலம்பெறற் பொருட்டே"

என்பது சேனாவரையர் கொண்ட இறை வணக்கம்.

மொழி என்பது இயற்கையினின்றும் பிரியாச் செயற்கையாதலின் அது வளருங்கால் தன்னான் வளர்தலும் பிறிது பிறிதின் துணையால் வளர்தலும் கருதி வளர்தலும் கண்டுவளர்தலும் என வளரும் முறை பலவாம். அவ்வாற்றான் தானே கருதி வளர்ந்த தமிழ் மொழி முதற்கண் கண்டதும்—நட்டதும்—துணைக்கொண்டதும் ஆசியாவின் இடை நிலத்தினின்றும் போந்த ஆரியர் பேசிவந்த பிராகிருத மொழியையே என்பது அறிஞர் பலரின் கருத்தாகும். எனினும் நட்டமையாலும் துணைக்கொண்டமையாலும் நலமும் வளமும் கொண்டது எது என்பதிற் கருத்து வேறுபாடுகள் பலவாம். பிராகிருத நிலையிலிருந்த ஆரியம் சமற்கிருதமான நிலையை அறிஞர்கள் உன்னுவார்களாக. அவ்வளவிலே பைந்தமிழ் செந்தமிழானமையும் சிந்தித்தற்குரியதேயாம்.

அது நிற்க, செம்மை செய்யப்பட்டபின் கவர்ச்சியோடு விளங்கிய வடமொழி (சமற்கிருதம்) யின்பால் காதல்கொண்டு பயின்ற பைந்தமிழ்ச் சான்றோர் பலர் ஒண்டமிழை ஒத்தது வடமொழி என்றும், வடமொழியை நிகர்த்தது வண்டமிழ் என்றும் கருதி மகிழ்ந்த போது "இருமொழிக்கும் இறைவனே முதல்வன் அவனருளிய

வையே ஆரியமும் தமிழும்" என அறைவாராயினர். "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்பர் அப்பரடிகள்.

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல் லேற்றுப்பாகர்"

என்றார் சிவஞான முனிவர். இனி இம்மொழிகள் அநுதியே படைக்கப்பெற்றன. இலக்கண நெறிகளையே இறைவன் அவ்விருவர் வாயில்ாக அருளினான் எனக்கொண்டு

"விடையுகைத்தவன் பாணினிக் கிலக்கணம் மேனாள்
வடமொழிக்குரைத் தாங்கு இயல் மலயமாமுனிகுத்
திடமுறுத்தியம்மொழிக் கெதிராக்கிய தென்சொல்"

எனப் பரஞ்சோதி முனிவர் இசைத்தார் (அறிவியல் வளர்ந்துவரும் இருபதாம் நூற்றாண்டிலும் இக்கருத்துக்கள் மாறவில்லையென்பதை "ஆதிசிவன் பெற்றுவிட்டான்" என்னும் பாரதியார் பாடலால் அறியலாம்) தமிழ்மொழியைப் பரப்புவானவேண்டி முடியுடை வேந்தர் தம் ஆதரவாலும் முத்தமிழ் பயின்ற புலவர்தம் முயற்சியாலும் தென்னவன் தேஎத்துத் தோன்றிய கழகங்களுள் முதற் கழகத்துள் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும—திருமாலும் முருகவேளும் நிதியின் கிழவனும் உள்ளிட்ட கடவுளர் இருந்து தமிழாய்ந்து மொழிந்து வளர்த்தனர் எனக் கருதிக் களவியலுரையாசிரியர் முதல் பலரும் கழறினர். இக்கருத்துக்களும் கூற்றுக்களும் புனைந்துரைவகையான் தமிழ் மொழியின் முதன்மையினையும் தொன்மையினையும் சிறப்பினையும வலியுறுத்த எழுந்தனவென்றே கொள்ளல் தகும். இவ்வாறு வரலாற்றுக் காலத்திற்கும் முன்தோன்றி முதிர்ந்து வளர்ந்துள்ள கன்னித் தமிழில் பல துறையிலும் சிறந்து பண்பட்ட இலக்கியங்களும்—நூல்களும் இருக்கவேண்டுமே? இம்மொழிக்குடையார் வளர்ந்தோங்கி வாழ்விலும், நாகரிகத்திலும் தலைசிறந்து காணல் வேண்டுமே? என்னும் ஐயப்பாட்டிற்கு

"ஏரணம் உருவம் யோகம்"

என்னும் பாடலைக்காட்டி யாவும் கடல் கோளானும் பிறவாற்றானும் மறைந்தன என்றும் (களவியலுரையுள் ஒரு வரலாறும் கூறப்படுகின்றது,) தமிழர் பிற இன, மொழி பண்பாட்டினரோடு கலந்து தன்னியல்பு மறந்தமையால் சில அழிந்தும் பல பிறழ்ந்தும போயின என்றும், பிறவாறும் அமைதி கூறுப. நுணுகி ஆய்ந்தால் இவ்வமைதியுள் பல உண்மைகளைக் காணலாம். இந்நாள் ஆராய்ச்சியாளர் முடிபுகள் பெரும் பகுதி மேலே கூறிய அமைதிக்கு அரண் செய்வனவாக உள,

இனி இவ்வுலகிடை வழங்கிய—வழங்கும் மொழிகளுள் ஒரு மொழிக்குரிய இலக்கணங்கள் முழுதும் பெற்றிருப்பவை செம்மொழிகள் என்றும் பல மொழிக்கு மூலமாய்ப் பண்பட்டு நிறைந்திருப்

பவை உயர்தனிச் செம்மொழிகளென்றும் மொழி நூலறிஞர் வகுத்துக் கூறுப. அவ்வறிஞர்கள் இன்றைய உலகில் உயர்தனிச் செம்மொழிகளாகக் கொண்டவை சில. (எபிரேயம்—கிரேக்கம்—இலத்தீனம்—சமற்கிருதம்—சீனம்—தமிழ்) அவற்றுள் இன்றும் மக்கள் பேச்சு வழக்கிலிருப்பவை இரண்டேயாம். அவ்விரண்டனுள் ஒன்று நம் அருமைத் தாய்மொழியாகிய பெருமைக்குரிய தமிழ் மொழி.

இத்தகு சிறப்புவாய்ந்த உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ் மொழி உரனும் திறனும் சான்ற, வரம்பமைந்த, வளரும் இலக்கணத்தைப்பெற்றிருப்பதை ஓர்ந்துதேர்ந்த பண்டைச் சான்றோர் அதன் பொருள் புலப்பாட்டினை இயல் இசை நாடகமென முத்திறப் படுத்திக்கண்டனர். அம் மரபு பற்றிப் பல நூல்கள் எழுந்தன. தமிழ் மொழியிற்றோன்றிய இசை—நாடக இலக்கிய இலக்கணங்கள் பல மறைந்தன. (இதனைத் தொல்காப்பிய உரையாலும், களவியலுரையாலும் அடியார்க்கு நல்லார் உரையாலும் அறியலாம்) இயற்றமிழ் நூல்கள் பல இருந்தன. சில் இருக்கின்றன. (பல இருந்திறந்தன என்பதைத் தொல்காப்பியத்தால உணரலாம்) அவ்வியற்றமிழ் நூல்களுள் காலத்தானும் கருத்தானும் வளத்தானும் முதன்மையானது தொல்காப்பியமேயாம். இஃதொன்றே இயற்றமிழ்ப் பாகுபாடாகிய எழுத்து—சொல்—பொருள் ஆகிய மூன்றையும பற்றி ஓரளவு விளங்கக்கூறும் முழுமுதல் நூலாகும.

தொல்காப்பியத்தையும் அதற்கு முந்து நூல்களையும் முதனூலாகக்கொண்டெழுந்த தனித்தமிழ் வழிநூல்கள் பெரும்பாலும் கிடைக்கப்பெறவில்லை. எழுத்தும, சொல்லும, பொருளும் ஆகிய முப்பகுதிகளுள் ஒன்றிரண்டைக்கொண்டு எழுந்த நிறைவுரு நூல்களும்—பொருளதிகாரத்துக்குரிய சில பிரிவுகளை எடுத்து ஒருவாறு விளக்கும் சின்னூல்களும ஆரிய மரபினை அவாவி எழுந்தபின் நூல்களும் இந்நாள் தமிழ் இலக்கணங்களென நிலவுகின்றன. அவற்றுள் (சிதைந்து மறைந்தவைபோக) குறிப்பிடத்தக்கன, இறையனார் களவியல்—புறப்பொருள் வெண்பாமாலை நம்பியகப்பொருள் விளக்கம்—யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை—நன்னூல் முதலாயின. ஆரிய மரபை அவாவி எழுந்தவற்றுள் குறிப்பிடத்தக்கன ; வீரசோழியம், தண்டியலங்காரம் நேமிநாதம்—பிரயோக விவேகம் முதலாயின. இவற்றைப் பயின்று ஓராற்றான் தொகுத்துரைக்கும் இலக்கண விளக்கம்—சிலவிட்டுச் சிலகூட்டியுரைக்கும் தொன்னூல் விளக்கம்—முத்துவீரியம் முதலாயினவும், இயற்றமிழ் இலக்கணங்களே எனலாம் இனி வடமொழியும் தென்மொழியும் வளம்படக்கற்ற சுவாமிநாத தேசிகரின் இலக்கணக் கொத்துரையும் இளம்பூரணர் முதலாக சிவஞான முனிவர் ஈறாக உள்ள உரையாசிரியர்களின் உரைகளும் இயற்றமிழ் இலக்கணம் பற்றியனவேயாம்.

மொழி என்பது பருவந்தோறும் பெருக்கெடுத்தோடும் உயிர்ப் பேராறுபோன்ற தொன்றும். கருத்துக்களாகிய கார்முகில் திரளுங்கால் உணர்வாகிய தண்வளிவீசச் சொல் மழையாகப் பொழிந்து

மக்கள் மன்றமாகிய பேராழி நோக்கிப் பெருக்கெடுத்தோடும், ஆறுகள் ஓடும்போது இயற்கையாகவே ஒருபால் வரம்பமைத்துக் கொள்ளும் என்பதை நிலநூலால் நன்கறியலாம். பயன்கொள் வோர் மறுபுறமும் கரையெடுத்து அணைகட்டிப் பலகால்களாகப் பிரித்து நீரின் பயனைக்கொள்வார்கள். அப்படிப் பிரிந்துசெல்லும் கால்வாய்கள் பேராறுகளின் கூறுகளேயாம். இத்தகைய உயிர்ப் பேராறுகளோடு ஓரோவழித் துணையாறுகள் கலப்பதும் உண்டு. அப்பாங்கிலே தமிழ் மொழி யென்னும் உயிர்ப்பேராறு பண்டே இயற்கையாயமைந்த ஒப்பற்றதொரு இலக்கண வரம்பாகிய கரையை யும் ஆன்றமைந்த சான்றோர்கள் ஆய்ந்தமைத்த துணை வரம்பாகிய தொரு இலக்கணக்கரையையும் கொண்டு வற்றாமல் பாய்ந்துகொண் டிருப்பது வியந்து மகிழ்வதற்குரியதாம். இவ்வியல்பினை அறிந்தே "என்றுமுளதென்றமிழ்" எனக் கம்பரும் "கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல் எண் ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும்படுமோ" எனப் பரஞ்சோதி யாரும் கூறி மகிழ்வாராயினர்.

அத்தகு வாழ்வும் வளமும் வரம்புங் கொண்டிலங்குந் தமிழின் இலக்கணமரபுகளும் அவ்விலக்கணங்களை விளக்க அமைந்த குறியீ டுகளும் தொன்றுதொட்டு வருவனவாகும் என்பதை

"எழுத்தெனப்படுப .....முப்பஃதென்ப"
"உயர்திணை என்மனார்"
"கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்"
"சொல்லெனப்படுப பெயரே வினை......அறிந்திசினோரே"
"காலந் தாமே மூன்றென மொழிப"
"கைக்கிளை முதலா......எழுதிணை என்ப"
"நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்"

என விளம்பும் தொல்காப்பியர் கூற்றானறியலாகும். இனி அக்குறி யீடுகளைக் கொண்டு தமிழ்மரபைக் கூறவந்த நூலாசிரியன்மார் யாவரும் இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பினராயினும் குறி யீடுகளின் சிறப்பும் செம்பொருளும் தோன்ற விரித்திலர். ஆட்சி யும்—காரணமும் நோக்கிக் குறியீடு வழங்குமெனக் கூறி உரையாசி ரியர் பலர் ஒரோவிடத்துச் சிலவற்றை விளக்கியுள்ளனர். வட வேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து வழக் கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச் செய்தாரெனப் பனம்பாரனார் சிறப்பிக்கும் தொல்காப்பியரும், அவர் நூலைப் பின்பற்றிச் செய்த பிற நூலாசிரியர்களும எல்லாவற் றையும் விளக்கினாரிலர். எல்லாவற்றையும் விளக்குதல் அவர்தம் நோக்கமும் அன்று. அவ்வக்காலத்து வேண்டுவனவற்றை வேண் டுமளவில் விரித்தும் தொகுத்தும் மொழிபெயர்த்தும் யாக்கப்படுவதே வழிநூலின் இலக்கணமரபாகும். எனினும் இன்றியமையாத சில

வற்றையேனும் அவர்கள் விளக்கியிருத்தல் வேண்டும். எடுத்துக் காட்டாகத் தமிழ் மொழிக்கே சிறப்பான பொருளதிகாரத்தைத் தொல்காப்பியர் தொடங்குங்கால்—பொருளைப்பற்றியும் அகம் புறம் என்னும் அதன் பிரிவு பற்றியும் அப்பிரிவிலமைந்த திணைவகைப் பற்றியும் கூறுமல் நாமே உய்த்துணருமாறு

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக்கிளந்த எழுதிணை என்ப,' என்றுர்.

இதனையே தொடக்கமாகக் கொண்டு பழைய உரையாசிரியர்கள் உரை கூறினர். பேரறிஞர் நாவலர், ச சோமசுந்தர பாரதியாரவர்கள் 'முற்படக்கிளந்த' என்றதனுல் இதற்குமுன் வரைந்த சில நூற்பாக்கள் இருந்து மறைந்தனவாதல் வேண்டுமெனக் கூறிப் போந்தார். இவ்வாறு இருந்து மறைந்தனவோ என்று ஐயுரு நிலையிலும் கூறவேண்டியவற்றை கூருதுவிட்டவை பல; எடுத்துக் காட்டாக எழுத்ததிகாரத்துள் எழுத்திலக்கணம் தொடங்குகின்றவர் எழுத்தின்னது எனப் புலப்படக் கூறி, அதன்பின்வகை கூறித் தொகை கூறல்வேண்டும். அவ்வாறன்றி

"எழுத் தெனப்படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே"

எனத் தொடங்குகின்றுர். இதுபோன்றே மூன்றதிகாரத்தும் இவர் தொடங்குவதைக் காணலாம். இனி நன்னூல் செய்த பவணந்தியார்

"மொழிமுதற் காரணமாமணுத் திரளொலி
எழுத்து—அதுமுதல் சார்பெனவிருவகைத்தே"

என விளக்கினுர். இவ்வாறே சொல்லைப்பற்றியும் விளக்கினுர். இவரும் எழுத்துக்கு இலக்கணம் கூறினுரேயன்றி எழுத்தென்ற தற்குக் காரணங் கூறினுரில்லை. கூறவேண்டியது அவர் பொறுப்புமன்று. அதனுல் உரையாசிரியர்கள் அதனை விளக்க முற்பட்டனர். முற்பட்டு "எழுதப்படுதலின் எழுத்தே" என்றுர் ஒருவர். இந்நூற் பாவின் வெண்மை கண்ட கணக்காயர் சிலர் "எழுப்பப்படுதலின் எழுத்தே" என்றிருத்தல் வேண்டும் என்றும், வேண்டுமென்பதைப் பிறப்பியல் நோக்கியறியலாம் என்றும், தொல்காப்பியரும் நன்னூலாரும் பிறரும் பிறப்பிலக்கணம் கூறுமாற்றுன் எழுத்தென்பதன காரணத்தை உய்த்துணருமாறு வைத்தனர் என்றும் கூறுப. இனி, சிவஞான முனிவர் எழுத்தென்பதற்குப் பகுபத இலக்கணம் கூறுவார், "எழுதப்படுவதென்னும் பொருட்கண் எழுது என்னும் முதனிலை முன்னர்ச் செயப்படு பொருண்மையுணர்த்தும் ஐகர விகுதி புணர்ந்து கெட்டு, கெட்டவழித் தகரமிரட்டித்து எழுத்தென முடிந்தது" என வரைத்தார்:

தொல்காப்பியர் முதலாக இலக்கண நூல் வரைந்த சான்றோர்கள் மேற்கொண்டது நால்வகைச் சொற்களின் பொருளாராய்ச்சியே

யாகும். அவ்வாராய்ச்சியும் பெரும்பாலும் ஆன்றோர் இலக்கியங்களையும், சிறிதே உயர்ந்தோர் வழக்குக்களையும், முந்து நூல்களையும் தழுவிச் செய்யப்பட்டதாகும். ஆதலின் சொல்லமைப்பு, சொல்லின்மூலம் சொல் தோன்றக் காரணம் முதலாயவற்றை ஆராய்ந்தறியாதுவிட்டனர் என்று கருதலாம். முதன் முதலாக வடநூல் தாதுபற்றிய இலக்கணங்களைக் கருத்திற்கொண்டு ஓரளவு வினைச்சொற்களின் பகுதிகளைப் பாகுபடுத்திக் காட்டிய பெருமை பவணந்தி முனிவருக்குண்டென்றாலும் பெயர் வினைகளுக்கு மூலமாகிய உரிச்சொல் பற்றிய அவர்தம் விளக்கம் நிறைவு தருவதாக இல்லை. உரையாசிரியர்கள் நூலாசிரியர்கள் விளக்காமல் விட்ட சில குறியீடுகளுக்கு விளக்கமும் சிறுபான்மை காரணமும் கூறியுள்ளனர். எடுத்துக்காட்டாக 'சொல்லென்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை" என இளம்பூரணரும் "சொல்லாவது எழுத்தோடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது" எனச் சேனாவரையரும். "சொல்லென்றது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசை" என நச்சினார்க்கினியரும் கூறினர். இவை போன்றவற்றை விளக்கம் எனக் கருதலாம். மற்றும் சேனாவரையர் "மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பான்மையும் இடை வருதலின் இடைச்சொல்லாயிற்று" என வரைந்தார். இது போன்றவற்றைக் காரணம் எனக் கருதலாம். இவ்வாறே ஏனை உரையாசிரியர்களும் ஏற்றபெற்றி கூறியுள்ளனர். ஓரளவு மேற்றிசை மொழிகளை வழிகாட்டியாக வைத்துக்கொண்டு கீழ்த்திசை மொழிகளோடு ஒப்பிட்டுத் தமிழை ஆய்ந்து பல உண்மைகளைக் கண்டுரைத்தவர் பேரறிஞர் கால்டுவெல் ஆவார். இக்காலத்துச் சில புலவர்களும் மொழி நூலறிஞர்களும் எழுத்துப்பற்றியும் சொல்பற்றியும் ஆய்ந்து பல உண்மைகளைப் பேசியும் எழுதியும் வருகின்றனர்.

நால்வகை இயற்சொற்களைப் பற்றி ஆய்ந்துணர்த்தும் தொல்காப்பியர், பெயரியல் தொடக்கத்தில் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்று கிளந்துகூறி, உரியியல் முதற்கண் பெயர் முதலாய மூவகைச் சொற்களுக்கும் உரிச் சொல்லே மூலமென்பார்.

"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய் தடுமாறி" வரும் என்றார்.

இடைச்சொல் பெயர் வினைகளைச் சார்ந்துவரும் என முற்கிளந்தமையால் ஈண்டுப் பெயரினும் வினையினும் என்றுமட்டும் கூறிப் போந்தார். இவ்வுரிச்சொல் ஒருசொல் பலபொருட்கும் பல்சொல் ஒரு பொருட்கும் உரியவாய்வரும் எனக்கூறி அவற்றை விரித்து விளக்குங்கால் "பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தித் தத்தம் மரபின் சென்று நிலை மருங்கின் எச் சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்" என்று ஆணையும் தந்தருளினர்—மேலும் பொருளை ஆராயுங்கால் ஓர் எல்லையில்வந்து நின்று முடித்துக்கொள்ள வேண்டு

மென்பார். "பொருட்குப் பொருள் தெரியின் அது வரம்பின்றே" என்றார். இவ்வாறு கூறியதனால் சொற்களெல்லாம் இடுகுறி என்றோ கட்டியசொல் என்றோ கருதவேண்டா. அவை காரணமுடையன, அக் காரணம் எல்லாவற்றினும் வெளிப்படையாகத் தோன்றலில்லை என்பார் "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" எனவும் வலியுறுத்திப் போந்தார். ஒரு சொல்லின் பொருளை நுணுகி நுணுகி ஆயுந்தொறும் ஆயுந்தொறும் அச் சொல்லின் மூலமும் பிறந்த உருவும் பெற்ற உரிமையும், பின் வளருந்தொறும் வளருந்தொறும் அதுகண்ட பொருளும் வரலாற்று முறைமையான் விளங்கும் என்பதைத் தெளியலாம். இன்றைய மொழிநூல்—ஒலிநூல் அறிஞர் தம் கருத்தும் இதுவேயாம்.

அந்நெறியில் நமது அருமைத் தாய்மொழியில் அமைந்துள்ள சொற்களின் அழகும் செம்மையும் ஆற்றலும் எண்ணி எண்ணி வியந்து மகிழ்தற்குரியவாயிருப்பதைப் பயிலும்போதும் பாடம் சொல்லும்போதும் கண்டு மகிழ்வது என் இயல்பாயிற்று' அவ்வியல்பு விருப்பமாக மாறிச் சில பல சொற்களைப் பற்றிச் சிந்தித்தும் மாணக்கரிடம் கூறியும் வந்தேன். தமிழ்ப் பேரறிஞரும் மொழிநூற் புலமைசான்றவருமான மதிப்பிற்குரிய பள்ளியகரம் நீ. கந்தசாமி பிள்ளையவர்களிடம் சிற்சிலபோது என் கருத்துக்களை அச்சத்தோடு கூறுவேன். அவற்றைக் கேட்டு மகிழ்வார்கள். சில சொற்களின் விளக்கங்களைச் சொல்லும்போது இவற்றைக் குறித்து வைத்துக்கொள் பின்னர் தொகுத்து வெளிப்படுத்தலாம் என ஊக்குவர். ஒரு சமயம் வடமொழியும் தமிழ் மொழியும் நன்கு கற்ற ஒரு பேரறிஞர் வடமொழி வேதத்துள் பல தமிழ்ச் சொற்கள் பயின்றுள்ளன என்றும், வேதகால வடமொழியில் உள்ள சொற்களின் பொருள் பிற்காலத்து மாறுபட்டுள்ளனவென்றும் திரு. நீ. க. அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தவர் 'தேவன்' என்னும் சொல் வேதகாலத்தில் புலன்களையே குறித்து வழங்கியது' பிற்காலத்தே தெய்வத்தைக் குறிப்பதாயிற்று என்று கூறினர். அப்போது யான் தேவன் என்பது புலன்களைக் குறித்ததாயின் அச்சொல் தமிழே— பின்பு தெய்வத்தைக் குறிக்கும்போதும் தமிழினின்றும் மாறுபடவில்லை என்று கூறித் தொல்காப்பிய உரியியலில் "தெவுகொளற் பொருட்டே" என ஆசிரியர் விரித்துள்ள நூற்பாவைச் சொல்லி— கொள்ளுதல் புல்லுதலாம்—புல்லுதல்—புலன் ஆயிற்று; மேலும் அந்நூற்பா 'தேவு'க்கொளல் பொருட்டே என்றிருந்திருத்தல்வேண்டும். அதன்முன் நூற்பா 'தாவே வலியும் வருத்தமுமாகும்' என்று நெடிலோசையாய் உள்ளமைகொண்டு இவ்வாறு கருதவேண்டியுளது. என்று கூறினேன்—பெரிதும் மகிழ்ந்துதார்கள். அவர்கள் ஊக்கத்தாலும மாணக்கர் பலரின் விருப்பத்தாலும் சிலவற்றைத் தமிழ்ப் பொழில் வாயிலாகவே எழுத்துவடிவில் வெளியிட முற்படலானேன்.

எனினும் எண்ணிய சொற்கள் எல்லாவற்றையும் ஆய்தல் என் நோக்கமன்று. தமிழ் இலக்கணத்துள் பயின்றுவரும் குறியீட்டுச் சொற்களுக்கும் இன்றியமையாத வேறு சில சொற்களுக்கும் விளக்கம் காண்பதே என் நோக்கமாகும். அதனால் தொல்காப்பியம் முதலாய முன்னூல்களும் நன்னூல் முதலாய பின்னூல்களும் சங்கச் செய்யுட்கள் முதலாக இற்றை நாள் வழங்கும் செய்யுள்—உரை நடை நூல்களும்—வழக்குக்களும். இவ்வாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றன. "கல்வி கரையில" வாதலின் எல்லா நூல்களையும் முற்றக்கற்றல் முடிவு போகாதென்பதை அறிவேன். காணும் முடிபுகள் எல்லாவற்றிற்கும் சான்று காட்டி நிறுவ முடியாதாகலின் இருவகை வழக்குக்களையும் துணையாகக் கொண்டு அவா நோக்கினும் (ஊகத்தால்) சில முடிபுகள் நிறுவ நேரும். எல்லாவற்றிற்கும் ஆட்சியும் மேற்கோளும் காட்டவேண்டுமென விரும்புவோர் பொறுத்தருள்வாராக. எல்லா முடிபுகளுக்கும் சான்றுகள் இருக்குமாயின் அவ்வாராய்ச்சி தொகுத்துரைத்தலாகுமேயன்றி கண்டுபிடிப்பாகாதென்பது என் பணிவான எண்ணம். இதனால் அவரவர் விரும்பும் கற்பனைகளே ஆராய்ச்சியாம் என்றும் யான் கருதவிலலை. நூற்பொருளாராய்வார்க்கெனத் தொல்லோர்வகுத்த உத்திகளுள்

"மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின்
மொழியா ததனையும் முட்டின்று முடித்தல்"

"வாராததனால் வந்தது முடித்தல்"

"வந்தது கொண்டு வாராததுமுடித்தல்"

"பிறன் உடம்பட்டது தானுடம்படுதல்"

"பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்'

"தந்துபுணர்ந்துரைத்தல்"—"தன்கோட்கூறல்"

"உய்த்துக்கொண்டுணர்தல்"

முதலாய உத்திகளையே பெரிதும் துணையாகக் கொண்டு இவ்வாராய்ச்சியினை மேற்கொள்ளுகின்றேன், ஆயப்படும் முடிபுகள் நிறையாகவும்—குறையாகவும்—ஒத்ததாகவும்—ஒவ்வாததாகவும் இருக்கக் கூடும். எவ்வாறிருப்பினும் இவற்றைத் தமிழுலகிற்கு அறிவித்தால் அஃது இனி ஆராய்வார்க்கு வித்தாகவோ எருவாகவோ பயன்பட்டு உண்மையை விளைவிக்கும் என்னும் அவாவினால் இவ்வாய்வுரையினைத் தொடங்குகின்றேன்.

தோற்றுவாய்:—

தமிழ் நூற் குறியீட்டு விளக்கம் என எடுத்துக் கொண்டமையின் முதற்கண் 'தமிழ்' என்னும் சொல்லைப் பற்றித் தெரிவது கடப்பாடாம் "தமிழ்" இஃது த்-ம்-ழ் என்னும் ஒற்றொலிகளும், அ-இ என்னும் உயிரொலிகளுமாக ஐந்தொலியாலாகியதோர் ஒலிக் கூட்டம். அவை முறையே நெஞ்சும், மூக்கும், மிடறும் இடமாகப்

பல்லின் அடியை நாநுனி ஒற்றலும் ஈரிதழியைதலும் அண்ணத்தை நாநுனி வருடலுமாகிய முயற்சியாலும், மிடறு இடமாக அங்காத்தலும் அங்காப்போடு அண்பல்லை அடிநாவிளிம்புறுதலுமாகிய முயற்சியாலும் பிறந்தன என்பது ஒலியியல் நிலை. இனி அவை இரண்டு உயிர்மெய்யும் ஒரு மெய்யுமாக மூன்றெழுத்துக்களாகி நிற்கும் என்பதும் அவற்றுள் முறையே வல்லினம், மெல்லினம், இடையினமெனா மூன்று மெய்யெழுத்துக்களும் அகரமும் இகரமும் என இரண்டு உயிர்க்குற்றெழுத்துக்களும் உள என்பதும் மெய்யெழுத்துக்கள் ஒரோவொன்று அரைமாத்திரையளவு என்பதும் மெய்யெழுத்துக்கள் உயிரோடு கூடி நிற்குங்கால் தன் மாத்திரையை இழந்து உயிரினளவேயாய் நிற்கும் என்பதும் உயிர்க்குறில் ஒரு மாத்திரை பெறும் என்பதும் பிறவும் அதன் எழுத்தியல் வழக்கு; இனி அச்சொல் மூன்றெழுத்தானாகியதொரு பெயர் நிலைக்கிளவியென்பதும் அதுதான் நால்வகைச் சொற்களுள் இயற்சொல்லின்பாற்பட்டு எழுவாய் வேற்றுமையளவாய் நின்றதென்பதும் அது தெரிபுவேறு நிலையலாய்ப் பொருள் தந்து அஃறிணை இயற்பெயருள் அடங்குமென்பதும் பிறவும் அதன் சொல்லியல் வழக்கு. இனி, அஃது ஒரசையாய் ஈரலகுபெற்றதொரு மொழி என்பதும் அஃது இயலசையுள் நிரையசையாய் மலர் என்னும் வாய்ப்பாட்டினுள் அடங்குமென்பதும் பிறவும் அதன் யாப்பியல் வழக்கு.

இனி வடவேங்கடந் தென்குமரியாயிடை இருவகை வழக்கினும் திகழ்வதொரு மொழி என்பது அதன் பொருள் நிலை மரபு. அவ்வாற்றான் அது கருவியாக எழுந்த இலக்கிய இலக்கண நூல்களையும், அதனைப் பேசும் மக்களையும் அம்மக்கள் தம் பண்பாட்டுப் பழக்க வழக்க ஒழுகலாற்றையும் அதன் பயனாகிய இனிமையையும்-நீர்மையையும் உணர்த்திப் பின்னர் இனிமையின் பொருளாகிய இன்பத்தையும் அதற்குக் காரணமாகிய அகப்புற ஒழுக்கங்களையும் காட்டி; நீர்மையின் பொருளாகிய தன்மையையும்—தண்மையையும் ஒழுகுதலையும் சால்பினையும் இன்னோரன்ன தொடர்புடைய பொருள் எல்லாவற்றையும் தந்து பல பொருளொரு சொல்லாய் நிற்றல் அதன் வரலாற்றுப் பொருள் நிலைமரபு.

இனி இச்சொல்லின்மூலம் அல்லது அடியாக நிற்கும் வேர்ப் பகுதி 'தமிழ்' எனும் சொல் முழுதுமாக ஒன்றா? அல்லது தமி + ழ்— தம் + இழ் என இரண்டா? என்பதும் செந்தமிழ் நிலத்துச் சொல்லா, திசைச் சொல்லா, த்ராவிடம் என்பதன் திரிபாகிய வடசொல்லா? என்பதும் பிறவும் அதன் சொற் பிறப்பாய்வு நிலை. இனி, தமிழ் என்பது பிறமொழிகட்கில்லாத் தனிச் சிறப்புடைய 'ழ்' கரத்தைப் பெற்றிருப்பதனால் தமிழாயிற்று என்பதும், 'த' என்னும் வல்லினமும் 'மி' என்னும் மெல்லினமும் 'ழ்' என்னும் இடையினமும் ஆகிய தமிழ் மொழிக்கே சிறப்பாக உடைய மூவின எழுத்துக்களையும் கொண்டிலங்குவதால் தமிழாயிற்று என்பதும் 'தமிழு' என்சாரியை பெற்று நிற்குங்கால் த்-ம்-ழ் என மூவின மெய்களை

யும் அ—இ—உ என அடிப்படை உயிரெழுத்துக்களையும் பெற்று நிற்கும் சிறப்பு நோக்கியது என்பதும் தம்+மொழி அல்லது தாய்+மொழி என்பவை திரிந்து மருஉவாய்த் தமிழ் ஆயிற்று என்பதும் அமிழ்து அமிழ்து அமிழ்து என்றடுக்குங்கால் எழும்சொல்லே தமிழ் ஆயிற்று என்பதும் பிறவும் அதன் சொற் பெயர்க்காரண ஆய்வு நிலை. இனி, சீனர் பேசுவது சீனம் உருசியர் பேசுவது உருசியம் வங்காளர் பேசுவது வங்காளம் ஆந்திரர் பேசுவது ஆந்திரம் கருநடர் பேசுவது கன்னடம் ஆவது போலத் தமிழர் பேசுவது தமிழ் ஆயிற்று என்பது அதன் ஒப்பியல் ஆய்வு நிலை. இனி இஃது எக் காலத்தில் தோன்றியது? எவ்விடத்தே தோன்றியது? முதன் முதல் எடுத்தாண்ட ஆசிரியன் யார்—இலக்கியம் எது? இதன் பொருள் பற்றித் தோன்றிய பிற சொற்கள் உண்டா? உண்டாயின் அஃது எது? என்றின்னோரன்ன பிற ஆய்வுகளும் 'சொல்'லைப் பற்றிய ஆய்வுகளேயாம்.

மேற்கூறிய பலநிலை ஆய்வுகளுள் சொற் பிறப்பியலும்—காரணமும்பற்றித் தமிழியல் மரபை ஒட்டி ஆராய்ந்து விளக்குவதே இக் கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

தமிழியல் மரபு:—

தமிழியல் மரபாவது முன்னுரையிற் கூறியாங்கு எல்லாச் சொற்களும் காரணமுடையன என்பதும் அக்காரணந்தான இசை, குறிப்பு, பண்பு என்னும் மூன்றனுள் ஒன்றையோ, இரண்டையோ பற்றி நிற்கும் என்பதும், ஒன்றாய வழி குறிப்பையும், இரண்டாய வழி இசையையும் குறிப்பையுமோ அல்லது பண்பையும் குறிப்பையுமோ பற்றி நிற்கும் என்பதும் அறிந்து வழுவாது கடைப்பிடித்தலும், அக்காரணங்களால் பொருளுணர்த்தும் ஒவ்வொரு சொற் பகுதியையும் உரிச்சொல் எனத் தெளிதலும், அவ்வுரிச் சொற்கள் யாவும் குறைச் சொற்களாய் நிற்கும் என உணர்தலும், அவ்வாறு நிற்கும் குறைச் சொற்கள் முன்னும் பின்னும் வரும் அடைகளாலும் சார்பொலி—ஒட்டொலி எழுத்துக்களாலும் நிறைந்து பல்வேறு பொருள்களைக் குறித்துணர்த்துஞ் சொற்களாய்த் திகழும் எனக் காண்டலும் பிறவுமாம்.

தொல்லாசிரியர் நெறி:—

மேற்கூறியவாறு தெளிந்து உணர்ந்து காண்டல் வேண்டுமென்பதனைத் தொல்லாசிரியர் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கிளந்துள்ளனர். என்னை? பொருளின்றிச் சொற்கள் பிறவா. பொருள்களே சொற்கள் தோன்றுதற்கிடனும் பற்றுக்கோடுமாகுமாகலின். இதனை "ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே" என்னும் தொல்காப்பியச் சொல்லதிகார முதல் நூற்பா வரியாலும் அதற்கு நல்லுரை காட்டிய சேனாவரையர் விளக்கத்தானும் அறியலாம். அவ்வாறாயின் அப்பொருள்கள்தாம் யாவை என்னின்

அவை கண்ணாலும் செவியாலும் கருத்தாலும் உணரப்படும் உலகத்தவையாம். இதன் விளக்கத்தை நன்னூல் சொல்லதிகார இரண்டாம் நூற்பாவினுரையுள் சிவஞான முனிவர் விளக்குமாற்றான் உணர்க. மற்று அவ்வுலகமும் நிலந் தீ நீர் வளி விசும்போடைந்துங் கலந்த மயக்கம் என்ப. அவ்வாறு கலந்த மயக்கத்தால்தோன்றும் பொருள்களை உணர்ந்து, உணர்த்துங்கால் ஒலிக்கூட்டமாகிய சொற்கள் பொருளின் வேறுபடாமல் எவ்வாறேனும் ஓராற்றான் இயைபு பட்டமைதல் வேண்டுமென்று தொல்காப்பியர் வலியுறுத்துவார் மரபியலுள்.

> நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
> கலந்தமயக்கம் உலகம் ஆதலின்
> இருதிணை ஐம்பால் இயல்நெறிவழா அமைத்
> திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும் (மரபியல்—90)

என்றார். எனவே இவ்வைம் பெரும் பூதங்களின் கலவையாலான பொருள்களை ஒலிக்கூட்டங்களாலாகிய சொற்களொடு தொடர்பு படுத்துங்கால் இடை நிற்கும் கருவி அப்பூதங்களின் கூறாகி அவற்றை உணர்த்தும் புலன்களே என்பது யாவர்க்கும் புலனும். அதனானே புலன்களும் ஐந்தாயின, இவற்றின் வாயிலாகப் பொருள்களை உணர்வது மனமே (அல்லது சிந்தை) யாயினும் அவ்வுணர்ச்சி புலன்களின்றி அமையாதென்பது வெள்ளிடைமலை. அப்புலன்கள்தாம் மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளின் செயல்களாகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பனவாம்.

அற்றாக ஒருவன் ஒரு பொருளை எதிர்ப்படுங்கால் புலன்களின் வாயிலாக மெய்ப்பாடுகள் தோன்றும். அம்மெய்ப்பாடுகளால் உள்ளத்தே எழும் உணர்ச்சிக் குறிப்புக்கள் சொற்களாய்ப் பிறக்கின்றன. [எதிர்ப்படும் பொருள் உருவும் வடிவுமுடைய மரஞ் செடி கொடிகளாகவோ, புள் விலங்கூர்வனவாகவோ, புழு பூச்சிகளாகவோ மலை, அருவி நீர் மின்னல் மழை முதலிய காட்சிப் பொருள்களாகவோ, உருவில்லாக் காற்று இடி முதலிய ஓசைகளாகவோ அவைபற்றிய நினைவாகவோ கனவாக இருக்கலாம்.]

இதனை

> "உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
> இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி"

என வரும் தொல்காப்பிய நூற்பாவின் பகுதியாலும் அதன் உரைகளாலும் தெற்றென உணரலாம்.

அவ்வாறாயின் உள்ளம் உணரும் குறிப்பு (குறிப்பாவது மனத்தான் உணரப்படுவது என்றார் சேனாவரையரும்) ஐம்பொறி வாயிலாக்வும் வருதலின் செவிப்புலனுக்குப் பொருளாகிய இசையையும் கட்புலனுக்குப் பொருளாகிய பண்பையும் மட்டும் ஆசிரியர் தொல்காப்பியர் கூறிப் போந்ததெதனால் எனின்? "வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையின்" என இந்நான்கினையும் பண்பினுள் அடக்

கினமை யானும் நாற்றமும், ஊறும் கொண்டுணரும் உணர்ச்சி விலங்குணர்ச்சி என்பவாகலானும்* கல்விக்கும் கலைக்கும் உரிய சிறப்புடைப் புலன்கள் இவ்விரண்டுமேயாகலானும் இசையினும் பண்பினும் என்றார் என்க. இதனைக்

"கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"

என்னும் மெய்ப்பாட்டியல் நூற்பாவானும் தெளிக. அன்றியும் பிற இரண்டனையும் குறிப்பினுள் அடக்கினார் என்றலுமாம். அற்றாயின் இசையும் பண்பும் குறிப்பினுள் அடங்காவோ எனின்? அடங்கு மென்றன்றே குறிப்பினை நடுவுவைத்தார். இக் கருத்தினை ஓராற்றான் ஆசிரியர் தொல்காப்பியர் உணர்த்துவதனை,

குடிமை ஆண்மை.................. ....
....
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணரும் கிளவி (சொல்–57)

ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
கற்பும் ஏரும் எழிலும என்றா
சாயலும் நாணும் மடனும் என்றா
நோயும் வேட்கையும் நுகர்வு மென்றாங்கு
ஆவயின் வருஉம் கிளவி யெல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சு கொளினல்லது
காட்ட லாகாப் பொருள வென்ப. (பொருளியல்-53)

எனவரும் நூற்பாக்களால் உணரலாம். இனிக்கட்புலனும் பண்பினும் கல்விக்குச் செவிப்புலனும் இசை சிறப்புடைத்தாகலின் முன் வைத்தார் என்பது.

அவ்வாறு உணரும் உணர்ச்சிக்கு அடிப்படை, எப்பொருளாயினும் அப்பொருளின் தோற்ற வேறுபாடுகளும், புடைபெயர்ச்சி வேறுபாடுகளும், அதுவும் தானும்கொள்ளும் பயன் பற்றிய வேறுபாடுகளுமாம் இதனை "வினைபயன் மெய்யுரு என்ற நான்கே வகைபடவந்த உவமத் தோற்றம்" என்றதனான் உய்த்துணரலாம். இந் நூற்பா உவமத்தாற் பொருள் தோன்றும் (புலனும்) தோற்றம் பற்றி உணர்த்த எழுந்ததாயினும் இதுவே சொற்பிறப் புணர்ச்சிக்குரிய இலக்கணத்தையும் உணர்த்தும் என்க.

எனவே இவ்வளவையான் பொருள்களை இடனாகக் கொண்டு பிறக்கும் சொற்களை ஆராய்தலே தமிழ் மரபும் நெறியுமாகும்.

(தொடரும்)

* நன்னூல் பெயரியல் 8ஆம் நூற்பா சிவஞான முனிவர் உரையுள் இக்குறிப்பினைக் காண்பாம்,

(முன் தொடர்ச்சி)

"புகார் முதல் வஞ்சி வரை"

பேராசிரியர். சி. கோவிந்தராசனார்.

சோழநாட்டின் தலைநகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தின் வளத்திற்கே கருவூலமாகத் திகழ்ந்த புகார்த்துறை முதலாகத் தொடங்கி, கண்ணகியின் காற்சிலம்பின் செலவினை உணர்த்தும் இளங்கோவடிகள் உறையூரளவில் ஓர் எல்லையிட்டுப் புகார்க் காண்டத்தினை முடித்துக் காட்டியுள்ளதைக் கொண்டு, கண்ணகியுடன் சிலம்பு சென்ற நெறியினை அளவிட்டுரைக்கும் முறைமையால் இதுவரையில் புகார் முதல் உறந்தை வரையில் கூறியுள்ள செய்திகளுள், பழைய நகரங்களும் சின்னங்களும் மாறியுள்ளமைக்குரிய இயற்கைத்தன்மையினையும், இளங்கோவடிகளின் சமயப் பொது நோக்கின் திறத்தினையும் ஓரளவு விளக்கி, மேல் தொடருதல் இன்றியமையாததொன்றும்.

இயற்கையின் ஆற்றல் :

உலகம் பிறந்ததிலிருந்து தொடர்ந்து, தன்னிலையில் குன்றாது, மக்களால் முப்பிரிவாக வகுக்கப்பட்டு வருவது, காலமெனும் அழிவில்லாத, மாற்றமில்லாத அளவையேயாகும். உலகின் சென்ற காலமே இன்றுள்ள மக்களிடையே பழங்கதையாகி நிற்கின்றது. அதை காலத்தொடு கணித்த அளவில் வரலாறு என்றும் பெயர் பெற்றுள்ளது. உலகத்தைப்பற்றிய கதைகளையும வரலாறுகளையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்துவரும் காலத்தின் கோலத்தை, நவீன ஆராய்ச்சியும் கற்பனையும் கலந்த முறையில் விளங்க வைத்தலின் வழியே, புகாரும் உறந்தையும், மதுரையும் வஞ்சியும் இன்று மாறியும புதைந்தும் மறைந்தும் நிற்கும் இயல்பினை அறிந்து கொள்ளுதல் நலமாகும்,

இயற்கைத் தோற்றங்களுள் ஒன்றாகும் தரையின்மீது, மனிதனின் மாண்புறு செயலால் உருவாக்கப்பெறும் நாகரிகச் சின்னங்கள் மிகுந்த நகரமொன்று கால வெள்ளத்தால் கரைந்து அழிந்து மறைந்து மற்றோர் இயற்கைத் தோற்றமாகக் காட்சியளிப்பது, இயற்கையின் நுட்ப நிகழ்ச்சிகளுள் ஒன்றாகும். இவ்வாறு மாறுதற்கு இயற்கையின் ஆக்க சக்திகளாகிய பெருங்காற்று, பேய் மழை, கடல் கொந்தளிப்பு, நில நடுக்கம, எரிமலைச்சூழல் ஆகியவைகள் முதற் காரணங்களாகவும், மக்களிடையே தோன்றும் பகையால் நிகழும அழிவுகளும், தட்பவெப்பங்களால் தோன்றும் நோய்களும் துணைக் காரணங்களாகவும் இருக்கின்றன. ஒரு வகைத் தோற்றம் மற்றொன்றாக ஆவதற்கு இயற்கையின் நெகிழ்ச்சி ஐயாயிரம ஆண்டுகளளவில இடையே எடுத்துக் கொள்ளுகின்றது. ஒரு நகரமோ நாடோ அழிந்து பின்னர் அப்பகுதி வேறொரு இயற்கைக் காட்சியாக அமைந்து திகழ்வது காலத்தின் விளையாட்டேயாகும், ஓர் இயற்கைத்

தோற்றமோ, அல்லது செயற்கைத் தோற்றமோ மற்றொன்றாக மாறும் முறைமை என்ன என்பதை, முதற்கண் தோற்றமளித்த இடத்தைச் சூழ்ந்து நின்ற சூழலின் பெருக்கத்தைக் கொண்டும் ஒருவாறு திட்டமிட்டு அறியலாகும் ஒரு மாற்றத்திற்கு இலக்கான நிலப்பகுதியோ, நீர்ப்பகுதியோ அப்பொழுது இருந்த சூழலியற்கையின் வலிமையால், புல் வெளியாகவோ, காடாகவோ, கடலாகவோ அன்றிப் பாலையாகவோ, காட்சி தரும். பாலைப் பாங்கு பெற்ற மாற்றம் விரைவில் பசும் புற்றரையாகி மக்கள் நிறைந்த நகரமாகவும் ஆக்கம் பெறும். இவ்வாறு, இடச்சூழலுக்கு ஏற்ப இரண்டொரு மாற்ற அளவிலேயே பழைய நகரம் புதைந்த இடத்தில் புதிய நகரமும் உருவாதற்காம் என்பன போன்ற இயற்கையின் நுண்மையான ஆக்க நிகழ்ச்சிகளை விளக்கும் கருத்தினை, அமெரிக்கப் பேராசிரியர், எட்வர்டு எஸ். ஹோல்டன் என்பவர் தமது "இயற்கையின் உண்மைப் பொருள்கள்"[1] என்னும் நூலுள், நிலவுலகத் தத்துவ விளக்கமாகக் கூறியுள்ளதைக் கொண்டு விளக்கப் பெறுவதாகும். இயற்கையின் மாற்றத்தை விளக்குமுகத்தான் அவர் கற்பனைக் காட்சியாகக் காட்டியுள்ள காட்சியைச் சுருக்கிக் கூறுதல் இக்கருத்தை விளக்குதற்குரிய ஏதுவாகவும் அமையும்.

கற்பனையில்—இயற்கையின் ஆற்றல்:

இருபதாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தோன்றிய மனிதனொருவன் இறப்பில்லாமல் இளமையுடன் இன்றளவும் இருக்கின்றான். அவனிடம் அழிவில்லாத வானவூர்தி யொன்று அவன் விரும்பியவாறு வானத்தில் நிலவும் ஆற்றலுடன் இருக்கின்றது. அத்தகைய புதுமை மனிதனை இன்று நாம கண்டு, அவன் உலகில் கண்ட வியப்பான மாற்றங்களைச் சொல்லுமாறு கேட்போமாயின், அவன் கூறும் செய்திகளுள் இயற்கையின் மாற்றம்பற்றியது இப்படித்தான் இருக்கும் ;—

முதலாவதாக அவன் ஒரு பெரிய நகரைக் கண்டான். அந் நகர் அரணால் சூழப்பட்டிருந்தது. மக்கள் பல்வளமும் கொண்டு பாங்குடன் நிரம்பி இருந்தனர். நகரின் நடுவே பெரிய கட்டிடம், அது அரசனுடையது என்று கூறப்படுகின்றது இந்நிலையில் புதுமை மனிதன் அங்குள்ள ஒருவனை அழைத்து, இந்நகர் எத்துணை ஆண்டுகளாக இப்படி இருக்கின்றது என்று கேட்டான். அதற்கு அவன், வியப்புடன், இந்நகரம் என்னுடைய முன்னோர்கள் காலத்திலிருந்து இப்படியேதான் இருக்கின்றது, என்று கூறியதுடன், இது என்னுடைய நகரம், இது என்னுடைய நாடு என்ற உரிமையையும் கூறினான், புதுமை மனிதன் வானத்தில் பறந்து சென்றுவிட்டான்.

1 ஐயாயிரம் ஆண்டுகள் அகன்றன.

மாடமாளிகை, கூடகோபுரம், சாலை, சோலை, மக்கள் எல்லாம் எங்கோ சென்றுவிட்டன. நகரமிருந்த இடத்தில் வெப்பமான

---

1. Real things in Nature.

கதிரொளியில் பசும்புற்றரையில் ஒரு ஆட்டிடையன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு நிற்கின்றான். அவனிடம் புதுமை மனிதன் சென்று இந்த புல்வெளி எத்துணைக் காலமாக இருக்கின்றது என்று கேட்டான். அவன், எப்பொழுதும் இப்படியேதான் இருக்கின்றது. எக்காலத்திலும் இப்படித்தான் இருக்கும் என்றான்.

2. ஐயாயிரம் ஆண்டுகள் மேலும் அகன்றன.

புல்வெளியில் இப்பொழுது புற்கள் இல்லை. அடர்ந்த காடு நிறைந்திருந்தது. அதில் மிகப் பெரிய மரங்களும், செடிகொடிகளும், பூத்தும் காய்த்தும் கிடந்தன. அமைதியான சூழல், இடையிடையே பறவைகளின் இனிய ஒலி, விலங்குகளின் நடமாட்டம். ஒருகாட்டு மனிதன் மறைந்திருந்து விலங்கொன்றை அடிக்கின்றான். அவனிடம் புதுமை மனிதன் சென்றான். இந்தக்காடு எவ்வளவு காலமாக இருக்கின்றது என்றான். அவன், இதோ நிற்கும் பெரிய மரம் ஆயிரம் ஆண்டு வயதுடையது, ஆகவே இங்கு இந்தக்காடு எப்போதும் இருப்பதுதான் என்றான். புதுமை மனிதன் வான ஊர்தியில் பறந்தான்.

3. ஐயாயிரம் ஆண்டுகள் மேலும் அகன்றன.

முன்னர் நகராகவும், வெளியாகவும், காடாகவும் மாறிமாறி நின்ற பகுதிக்கு புதுமை மனிதன் வந்தான். காடுகள் ஒருபுறம் அழிய அங்கு ஊர்கள் தோன்றி இருந்தன. அவை முறையே நகரமாகவும், பல நகரங்கள் சேர்ந்த நாடாகவும் ஆகுமென்ற அறிகுறிகள் தோன்றின

இதைப்போலவே, முன்னர் கடலாகக் காட்சியளித்த இடங்களுள் சில பாலைவனங்களாகக் காட்சி யளித்தன. பாலைவனங்களாகக் காட்சியளித்த இடங்கள் நகரமாக உருப்பெற்று நின்றன. இவ்வாறு, கற்பனை மனிதனைக்கொண்டு கற்பனையாகக் கண்ட காட்சிப்பகுதி இன்று காட்சிக்கு மாட்சியோடு விளங்கும் இயற்கையின் தத்துவ நுட்பத்தினை சிந்தித்தறிவதற்கு ஏதுவாக எடுத்துக் காட்டப்பட்டதாகும்.

இவ்வாறு மேனாட்டறிஞர் இயற்கையின் ஆற்றலைப் பற்றி எடுத்துக் காட்டுதற்கு அமைத்துக்கொண்ட கற்பனை மனிதனும் அவன் கண்டதாகக் கூறும் காட்சியும் அதற்குரிய காலக்கணக்கும் உலகின் உண்மை நிலையை ஓரளவு புலப்படுத்துவதேயாகும். இதனால், உலகில் இன்று காட்சிக்குரியதாகவுள்ள ஒருவகை இயற்கைத் தோற்றமோ அன்றி செயற்கைத் தோற்றமோ, ஒரு காலத்தில் தவருது மாற்றம் பெறுதற்குரிய தென்பதும், இத்தகைய மாற்றங்கள் இயற்கைச் சக்திகட்கு உட்பட்டதே என்பதும், அறிஞர் வகுத்துக்காட்டிய ஐயாயிரம் ஆண்டுகள் எனும் கால அளவு ஓர் எல்லையாகச் சொல்லப்பட்டுள்ளதே தவிர, திட்டமாகக் குறிக்கப் பட்டது அல்ல என்பதுவும், நிலத்தின் பாங்கு, சூழல், மக்கள் வாழ்க்கை ஆகியவற்றின் இயல்பிற்கு ஒத்த நிலையிலேயே மாற்றத்

திற்குரிய கால அளவு குறைந்தும் மிகுந்தும் இருக்குமென்பதும், மாநில வளாக அறிவுடன் அளவுபடுத்திக் கொள்ளலாகும்.

இத்தகையதாக இயற்கையின் மாற்ற சக்தியால் கால எல்லைக்குள்ளாகி மறைந்த உலக நாகரீகப் பகுதிகளான, எல்லம், சுமேரியா, எகிப்து, பாபிலோன், சிந்து வெளி நகரங்கள், ரோமாபுரி நாகரிகப் பகுதிகள் ஆகிய இடங்களின் வரலாறுகள் கணிக்கப்பட்டுள்ளன.

இமயமலையும் அதன் வடக்குப் பகுதியும் ஒரு காலத்தில் ஆழ் கடலுள் நின்றதெனும் ஆராய்ச்சி நுட்பமும், கபாடபுரத்துடன் உலக நாகரீகத்திற்கோர் கருவூலமாக நின்ற குமரிக் கண்டமெனும் பெருநிலப்பரப்பு, கொடுங்கடல் பரப்பான செய்தியும, இன்று பாலை நிலமாகக் காட்சி தரும் பகுதி, நாலாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நாகரீக வளங்களுடன் முடிமன்னர் ஆட்சியோடு தலை சிறந்து விளங்கிய எகிப்து நாட்டின் பரப்பாகும் என்று எடுத்துக் காட்டும் வரலாறும், மாநில இயற்கையின் மாற்று நிலைகளேயாகும். இவைகள் மீண்டும் மாற்ற இயல்புக்கு உரியதாகி, ஒரு காலத்தில் வேற்றுருவத்தோடு தோற்றங்கொள்ளவும் கூடும் எனும காலக்கணிப்பும், நில வுலக இயகக வுண்மையாக [geophysics) அறிஞர் அளவிட்டுணர்த்தி யுள்ளதைக்கொண்டு அறியத்தக்கதாகும்.

எனவே, இவற்றைக்கொண்டு சிந்திக்குமளவில், கடல் விளிம்பிலும் ஆற்றங்கரையிலும் நின்ற நகரங்களாகிய புகாரும் உறந்தையும் இரண்டாயிரம் ஆண்டுகளளவில் தன்னிலையில் சூழலால் மாற்றங்கொண்டு இன்று புதைபொருள்களாக இருக்கின்றன மொகஞ்சதாரோ ஆரப்பா நகரங்களின் புதைந்த நிலையும் இதற்கு எடுத்துக் காட்டாகுமென்பதும், இப்பகுதிகள் மாற்றங் கொள்ளுதற்குரிய இயல்பினை இயற்கைச் சக்தி தோற்றுவிக்கும் என்பதும், காலத்தின் செயலைக் கண்டறிவதன் வழியே காண்பதாகும்.

இளங்கோவடிகள்—காலக்கணி.

இளங்கோவடிகள் சமண நெறியினர். சைன சமயமே தாம் போற்றிய சமயமென்பதை, புகாரிலிருந்தே குறிக்கத்தொடங்கியவர், தமது எழுத்துக்கள் சமயப் பூசலுக்கு இடம்பெறலாகாது என்ற ஒழுங்குடன் மற்ற சமயங்களையும் ஏற்ற இடங்களில் அவ்வவற்றிற்குரிய சிறப்புடன் பொது நோக்கொடு இடம்பெறச்செய்து, தமது குறிக்கோளையும் புகட்டியுள்ளார். இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள நிகழ்ச்சிகளிலும் சைன சமய விளக்கமாகத் தாம் அமைத்துக் கொண்ட கவுந்தியடிகள் வாயிலாகவும், பொதுவிளக்கமாகவும் ஆசீவக சமய விளக்கங்களை நிலை நிறுத்தியே செல்லுகின்றார். வளைந்து கூறாமல், இளங்கோவடிகளின் உள்ள நிலையை உள்ளவாறு கூறுவோமாயின், அடிகள் தாம்கொண்ட சமயத்தின் ஆர்வ வுரிமை பிற சமயத்தவருக்கு வெறுப்புணர்ச்சியைத் தராத நிலையில், மனிதவாழ்க்கையின் இயல்புக்கு இலக்காகி, வளரும் மக்கள சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாக நிற்கும் கோவலன் கண்ணகி வரலாற்றை யாவரும் எக்காலத்திலும் ஏற்று வழங்கும் நிலையில், தமது சமயத்தில் குறிப்பும் பிற சமயங்களில் பொதுமையும் கொண்டு

சமயப் பூசலுக்கு இடந்தராத பெருநோக்குடன் மெருகேறிய எழுத்துக்களால், முத்தமிழும் விளங்குமுகத்தான் மொழித்திறனும் பெற்றிலங்க சிலப்பதிகாரத்தை உருவாக்கியுள்ளார்.

இவ்வாறு அடிகள் காப்பியம் செய்யக் காரணம் என்ன? தமது சமயக்கோட்பாட்டிற்குரியதாகவே நூல் செய்திருப்பின் அதனால் வரும் இழுக்கு என்னே? சமண சமயமே உயர்ந்த சமயம் என்ற அளவில் தமது சமயத்தார் நின்ற காலத்தில் இவ்வாறு பிற சமயங்களையும் இணைத்துப் போற்றிய நிலையில் இலக்கியம் செய்தது ஏன்? என்ற வினாக்கள் இயல்பாகவே சிந்தனையைத் தூண்டுவதாகும்.

அடிகள், சமயப் பூசலுக்குத் தமிழகத்தில் இடந்தரலாகாது என்று தாம்கொண்டத் திட்டமான நோக்கினை, தகுதியான முறையில், தமிழக மக்கள் போற்றி வளர்த்த பத்தினி வணக்கத்திற்குரிய கண்ணகி வரலாற்றின் வழியே, கலைவளம் நிறைந்த காவியமாக உருவாக்கித் தெரிவித்துள்ளார், என்பதே சிலப்பதிகாரத்தினின்றும் சமயத்துறையில் அறிந்துகொள்ளத்தக்க உண்மையான செய்தியின் சுருக்கமாகும். இதுவே, மேலேகண்ட வினாக்களுக்குரிய விடையாகவும் அமையும்.

இக்காலம் இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளென்று ஆராய்ச்சியாளர் அமைந்திருக்கின்றனர். இக்காலத்தில் சமண பௌத்த சமயங்கள் தென்னாட்டில் சிறப்புற்றிருந்தன எனபதில் வரலாற்றறிஞர் வேறுபாடுகண்டிலர். இந்நிலையில் இளங்கோவடிகள் தாம் சமணமதச் சார்பில் நின்று பௌத்த மதத்தையும், வைதிக நெறியில் வளர்ந்த சைவ வைணவச் சமயங்களையும் ஏற்ற வழியில் போற்றி இருப்பதுடன், அவரவர் தத்தமது சமயக் கோட்பாட்டினின்றும வழுவாத நிலையில், பிற சமயங்களைப் பகைத்துப் போட்டிக்குரியதாக்காத வகையில், ஒத்த மதிப்பில் நின்று ஒருமைப்பாட்டுடன் வாழ்வதுவே சமய நன்னெறியாகும், என்பதை இலைமறைக்காயென காவியத்தில் ஆங்காங்கு இடம்பெறச் செய்துள்ளார்.

இக்கருத்தினை அக்காலச் சூழலைக்கொண்டு அமைத்துக்கொள்வோமாயின், இளங்கோவடிகள் சமயத்துறையில் புதுமைத் தமிழகத்தைக் காணவேண்டுமென்று தாம்கொண்ட சமயப்பொதுநோக்கு சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள உண்மை தெள்ளிதின் புலப்படும். எனவேதான், அடிகள் பல்வேறுபட்ட சமயத்தவர்களையும் ஒப்பப்புகழ்ந்து அவரவர் போற்றும் தெய்வங்களையும் அழகுடன் அமைப்புடன் போற்றிக் கூறியுள்ளார். இதனை ஒருசில எடுத்துக் காட்டுக்களால் விளக்குதல் ஈண்டைக்கு ஏற்புடையதாகும்,

சிலப்பதிகார நிகழ்ச்சிகட்குரிய சிறப்பான இடங்களின் திருப்புமையாக இயங்கும், வைதிக நெறியை மேற்கொண்ட மாடலன் என்னும் மறையவன், பௌத்தர்களையும் சைனர்களையும் மதித்துப் போற்றுகின்றான்.

மாடலன், தனது வைதிக நெறியிற் சிறந்த நான்மறையாளனொருவனை, 'ஞான நல்நெறி நல்வரம் பாயோன்", 'உயர் பிறப்பாளன்' என்றெல்லாம் புகழ்ந்து கூறுகின்றான்.

இம்மறையவனே, 'தவந்தரு சிறப்பின் கவுந்தி', 'தண்ணலம் பெருந் தவத்து ஆசீவகர்' என்றெல்லாம் சமணரைத் தகுதி குன்ருத நிலையில் சிறப்பிக்கின்ருன்.

இத்தகைய மாடலனே, நூலாசிரியர் அறிமுகப்படுத்துமிடத்து, 'குறையாக் கேள்வி மாடலன்' 'நான்மறை முற்றிய நலம்புரிக் கொள்கை மாமறை முதல்வன் மாடலன்' என்று, வேத நெறியின ஞகிய அம்மறையவனை சைன நெறியினராகிய தாம் குற்றமற விளக்கிக் காட்டுகின்ருர்.

ஆசீவக நெறியை அடைந்து நின்ற கோவலன், 'அணி திகழ் போதி அறவோன்" என்று பிறமதத்திற்குரிய தெய்வமாகிய புத்த தேவரைப் புகழ்கின்ருன்.

நாடுகாண் காதையுள், பெளத்த விகாரத்தையும் சாக்கிய முனிவரையும், அவரது ஆகம நூலையும் எடுத்துக்காட்டுவதுடன், இந்திர விகாரமும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

'நலம்புரி கொள்கை நான்மறையாளன் என்று, வைதிக நெறியினனை சைன சமயச் சந்நியாசினி கவுந்தியடிகள் போற்றுகின்ருர்.

குமரித்துறை படிநது மீண்ட மாடலன், வழிச்சென்ற வருத்தத் தான் உண்டாய மிக்க துயரம் ஒழிய, மதுரை நகர்க்குப்புறம்மே நின்ற நிழல்படிந்த சோலையுள் கவுநதியடிகளிருந்த பள்ளியிடத்துச் சென்று இளைப்பாறுகின்ருன்.

சைன மாதவத்தாட்டியும் வைதிக மாமறை முதல்வனும் ஒத்த இரக்கத்தோடு, உளளம் தளர்ந்து நின்ற கோவலன் தனக்கு அறிவுரை கூறுகின்றனர்.

கொற்றவையின் போர்க்கோலத்தைப் பாடும் எளிய பாணருடன் செல்வத்தில் திளைத்தும் ஊழ்வலியால் மெலிந்த கோவலன், கண்ணகி கவுந்தியடிகளோடு மதுரைக்கு வழிக்கொண்டு, அவரோடு பண்களைக் கலந்து இசைத்துச் செல்லுகின்ருன்.

மலைநாட்டிலிருந்து தலயாத்திரை போந்த மறையவன் வைணவத் தலங்களுடன், திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும், செங்கண்நெடியோன் நின்ற வண்ணமும் சீர்மை குன்ருது பேசுகின்ருன்.

இம்மறையவனைக் "குன்ருச் சிறப்பின் மாமறையாளன்" என்று இளங்கோவடிகள் அறிமுகப்படுத்துகின்ருர்.

தமிழகத்தில் அன்று போற்றப்பெற்ற, சிவன், முருகன், திருமால், கொற்றவை, சாத்தன் ஆகிய தெய்வங்களெல்லாம் அவ்வவற்றிற்குரிய சிறப்பியல்புகளுடன் விளக்கமாக சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. சிறப்பாக, திருமாலின் பல்வேறுபட்ட உயர்வினை ஆய்ச்சியர் குரவையுள் அடிகள் கூறியுள்ள மேன்மை ஈண்டு குறிக்கத்தக்கதாகும்.

இத்தகைய சிலப்பதிகாரச் செய்திகள் இளங்கோவடிகளின் சமய ஒருமைப்பாட்டுக் கருத்தினை எடுத்துக் காட்டுதற்குரிய சான்றுகளாகும். மற்றும், மக்கள் சமய வொழுக்கத்தில் பிரிந்தும் சமுதாயத் துறையில் இணைந்தும் நிற்பதற்குரிய மேலான முறையினை,

எளிதான வழியில், இடர்ப்பாடுண்டாகாத வகையில் ஆசிரியர் அமைத்துக்காட்டும் நிகழ்ச்சியொன்றினையும் எடுத்துக்காட்டலாகும்.

உறந்தைக்கு அப்பால் நின்ற சோலையில், மாங்காட்டு மறையவனிடம் மதுரைக்கு வழிகேட்ட கோவலனுக்கு அம்மறையவன் கொடும்பாளூரிலிருந்து போதற்குரியதாக மூன்று வழிகளைக் கூறுகின்றான். அவற்றுள், இடப்பக்கத்து வழியை விளக்குங்கால், வழியில் அமைந்துள்ள அழகர் மலைக்குச் செல்வீர்களாயின் ஆங்கு வழிமயக்கம் இல்லாததாக மலைகளிடையே அமைந்த பள்ளத்தாக்குப் பாதை தொடரும். அப்பகுதியில் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்ற மூன்று பொய்கைகள் உண்டு; அதில் மூழ்குவோர் முறையே இலக்கண நூல் அறிவையும், முற்பிறவியின் உணர்வையும், விரும்பியவற்றையும் பெறுவார்கள. நீங்களும் விரும்பியவாறு அவற்றுள் மூழ்கி உரிய பயனை அடையுங்கள். மற்றும், அங்கு, செல்லுங்கால் மலைமிசை நின்றோனாகிய அழகரின் திருவடிகளை நினையுங்கள; அங்ஙனம் நினைப்பீராயின் அத்திருமாலின் கலுழன் எழுதிய கொடிமரம் பொருந்தி நிற்கும் இடம் காணப்படும். அக்காட்சி நும் பிறவித் துன்பத்தினைக் கெடுக்கும் என்று வழிவகுத்துக் காட்டியதுடன், தான் காமுற்ற தெய்வ நெறியின் மேம்பாட்டுடன் பயனையும் வினவாதபொழுதே அறிவுறுத்துகின்றான். இவ்வாறு, வைணவத்தலத்தின் மேன்மையினைப் பெருமிதப்படுத்தி மறையவன் வாயிலாக சைன சமயத் துறவிக்கும் கோவலன் கண்ணகிக்கும் நன்னெறியொன்றைப் புகட்டும் பாங்கில் ஆசிரியர் கூறியுள்ளார். இவ்வாறு பிற சமயத்தைப் புகழும் போக்கில், கவுந்தியடிகளின் மறுவுரையாக, சமண சமயக் கோட்பாட்டின் திறனையும் பயனையும் திட்டமாக எடுத்துக் கூறி, சமண சமயமே மேலான சமயம் என்னும் சமய விளக்கத்தினையும் நிறுவி இருக்கலாமல்லவா ? ஆனல், அடிகள் நோக்கு வேறுடைய சான்றோராதலின் அவ்வாறு செய்திலர். அம்மறையவனிடம் கவுந்தியடிகள் அமைவுடன் தமது கோட்பாட்டினைக் கூறுமுகத்தான், 'நீ கூறிய பிலவழியில் புகுதற்குரிய தன்மை எம்மிடத்து இல்லை; ஏன் எனின் ?

"கப்பத்து இந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கையின் விளங்கக் காணாய்"

அருக குமரன் அருளிய பரமாகமம் அத்தகைய பயனைக் கண்டுளது என்பதைக் காண்பாய். அஃதுளதாக நீவிர் காட்டும் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி ஆகிய பொய்கைகளிலே மூழ்குதலால் பெறும் பயன் வேண்டுவதில்லை.' என்று தாம் மேற்கொண்ட சமய நெறியின் எல்லையைக் கடவாத திறத்தினைத் தம்மளவில் எடுத்துக் கூறியதுடன்,

"காமுறு தெய்வம் கண்டடி பணிய
நீபோ, யாங்களும் நீள்நெறிப் படர்குதும்"

'நீ காணவிரும்பி வந்த தெய்வத்தைச் சென்று கண்டு அடிபணிதற்குப் போவாயாக; யாங்களும் எங்கட்கு ஏற்ற நெறியேசெல்வோம்.' என்று அமைதியான சொற்களால் அவரவர் நெறியினை

அவரவர் உறுதியாகப் பின்பற்றவேண்டும் என்ற, சமயச் சார்புடையார் கைக்கொள்ளவேண்டிய விதியினைக கூறுவதாக இளங்கோவடிகள் அமைத்துக் காட்டுகின்றார். இத்தகைய குறிப்பு, 'அவரவர் கடமையை அவரவர் செய்யின் பொதுநலம் என்பது தானே புறப்படும்' என்ற கருத்திற்கு இலக்காகி, சமயப் பூசலுக்கு இடமின்றிய வழியை வகுத்துக் காட்டும் துறைகளுள் ஒன்றாக இருப்பது நோக்கற்பாலதாம். மற்றும்,

"வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்"

வாய்மையும் கொல்லாமையும் என்னும் இரண்டினையும் வழுவாது ஓம்புவார்க்கு அடையக் கூடாத அரியபொருள் யாதேனும் உண்டோ? இல்லை. என்று கவுந்தியடிகள் கருத்துரை கூறுவதாகவும் அமைத்துள்ளாரே! இஃது எவ்வளவு பொருள் பொதிந்த பொதுச் சொற்கள்! வாய்மையும் கொல்லாமையும் மேற்கொள்ளாத சமயங்கள் தமிழகத்தில் நிலவவில்லையாயினும், ஆசீவகர் சிறப்புடன் போற்றிய கொள்கையல்லவா இவை. வாய்மையும கொல்லாமையும் கொண்டுள்ளார் பெறும் நற்பயனை எவ்வளவு நாகரிகத்துடன் பொதுக்கருத்தாக ஏற்ற இடத்தில் அமைத்துக் காட்டுகின்றார் அடிகள். இங்கு, தமது சமயம் மேற்கொண்டுள்ள தலைசிறந்த நெறியை பிறர்மாட்டு வற்புறுத்தும் நோக்கு இருப்பதாகவோ, தமது சமயத்தாரின் இத்தகைய கொள்கையால் எய்தாத தொன்றில்லை என்று இறுமாப்பு பேசுவதாகவோ தெரியவில்லையே! 'நயத்தக்க நாகரிகம்' என்று வள்ளுவர் கூறிய வாய்மைக்கு ஒரு சான்றாகவன்றோ அடிகள் அமைதியாக வழங்கியுள்ள கருத்துரைகள் இடம்பெற்றுள்ளன. சமயக் கோட்பாடுகள், ஒன்றையொன்று விஞ்சிய பயன் தருவதாக அமைத்து, தம்மதம் நிறுவவேண்டிய இடத்தில் ,அங்ஙனம் செய்யாது நன்னயம் பேசும் நயனுடை வழியே கருத்துரைத்துக் காட்டிய அடிகளின் மேம்பாட்டினை என்னென்பது!

இத்தகு மேன்மையினை மணிமேகலை எனும் காப்பியம் யாத்த சாத்தனாரின் குறிக்கோளொன்றினை எடுத்துக்காட்டி, இளங்கோவடிகளும் சாத்தனாரும் சமயச் சார்பில் வழங்கிய கருத்துக்களைச் சீர்தூக்கியும் அறியலாமன்றோ! சாத்தனார் தமது பௌத்த சமயக் கருத்தினை கந்திற்பாவையின் கூற்றாகக் கூறுங்கால், "பல்வேறு சமயப் படிற்றுரை" "மாந்தர் அறிவது வானவர் அறியார்" என்பன போன்ற துணிந்த சொற்களால் மற்ற சமயத்தவரையும் தேவரையும் இழிவுபடுத்தும் எச்சவுரைகளைக் கூறி, வெறுப்புணர்ச்சியை விலைகொடுத்து வாங்குகின்றாரே! இவற்றை ஒப்பிட்டுப் பார்க்குங்கால் அடிகளின் சமய ஒருமைப்பாட்டுணர்ச்சி குன்றென உயர்ந்து நிற்பது புலனாகாது போமோ!

சமயமெனும் யாறு, வருங்காலத்தில் உணர்ச்சி வெள்ளத்தால் தன்னிலையில் கேடுற்றுக் குன்றாது, நெறியோடு வளர்ச்சி பெறுவதற்கு இளங்கோவடிகள் இட்ட நல்லதொரு கரையே சிலப்

பதிகாரவடிவில் எழுந்ததென்றும், சமயப் பொதுநோக்கின் திறத்தினை அக்காலத்தில் எடுத்துக்காட்டிய முதல் நூல் இந்நூலொன்றே என்றும் கொள்ளலாகும்.

இளங்கோவடிகள் எண்ணித் துணிந்து இட்டகரையும் காலப் போக்கில் சூழ்நிலையால் உருமாறி கரைந்தொழிந்து, கி. பி. ஏழாம் நூற்றாண்டளவில் முற்றிலும் நிலையழிந்து நின்றதென்பதனை தமிழக வரலாறு சிறப்புடன் எடுத்துக் காட்டுகின்றது.

இளங்கோவடிகள் காலத்தைத் தொடர்ந்தே எழுந்ததாகக் கருதப்பெறும் மணிமேகலை ஆசிரியர் சாத்தனார், பிற சமயங்களைப் பழித்துத் தாம்மேற்கொண்ட பௌத்த சமயக்கோட்பாட்டினை நிறுவிச் செல்லும் நிலையினைக் காணும்போது, அக்காலத்திலேயே தமிழகத்தில் சமயக்காய்ச்சல் அரும்பி இருந்திருக்க வேண்டுமென்பதும் அதனை முளையிலேயே கிள்ளி எறிய எடுத்துக்கொண்ட முயற்சிக்கு கண்ணகி கோவலன் வரலாறு இலக்காகி நின்றதென்பதும் நூலெழுந்த காரணங்களுள் ஒன்றாகக் கருதலாகும். இவ்வாறு, தமிழகத்தில் சமயச்சார்பில் பொதுநோக்கும் மாறுபாடான கொள்கையும் தோன்றிய இலக்குகட்கு, புகாரில் வாழ்ந்த மாசாத்துவான் என்னும வணிகப்பெருமகனின் குடும்பச்சூழல் இணைந்து, முறையே சிலப்பதிகாரம, மணிமேகலை என்ற இருபெரும் தமிழ்க் காப்பியங்களாகத் தோற்றங்கொண்டு திகழுவது வியப்புக்கு உரிய நிகழ்ச்சிகளாகும்.

சமயச்சார்பிலீ, சீற்றமும் மாற்றமும் ஏற்றமும் கொள்ளாது இளங்கோவடிகள் தமது நூலுள் அமைதியான கண்ணோட்டமிட்டுச் செல்லவேண்டிய தென்னை? இவையாவும், தமது காலத்தில் வளர்ந்த சமயங்கள்தோறும் அரும்பி நின்ற ஆர்வவுணர்ச்சியால் வருங்காலம் காணும் முடிபினை, முன்னரே சிந்தித்துக் கண்ட அடிகள், அதற்கொரு தீர்வுகாணும் முறையில் தொடக்கத்திலேயே எளிய முறையில் சமயங்கள் யாவும் போட்டியின்றி, தத்தமது வழியினைப் பின்பற்றிச் செல்லவேண்டுமென்று அறுதியிட்டு வகுத்துக் காட்டிய உறுதியான நுண்ணறிவுப் பாதையல்லவா? என்வே, வருமுன்னர் காவல் செய்ய முயன்று, எல்லா சமயத்தார்க்கும் உற்ற துணையாகவும், வழிகாட்டியாகவும், பொது நோக்கான திட்டங்களை, கோவலன் கண்ணகி வரலாற்றின் வாயிலாக, பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே வகுத்துக்காட்டிய முதற் பெருங்கணி இளங்கோவடிகள் என்று; தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறித்தற்காகும்;

இவ்வளவில் கண்ணகியின் காற்சிலம்பு புகாரிலிருந்து கடந்த நெறியின் வரலாற்றினையும், சமயத்துறையில் இளங்கோவடிகள் கொண்ட உள்ளத்தினையும், பழம் பொருள் ஆராய்ச்சி, வரலாற்றியல்பு ஆகிய கருவிகளைக்கொண்டு உள்ளவாறு கண்டு கூறியுள்ளேன். மேல்; இளங்கோவடிகள் வகுத்துக்காட்டிய மதுரைக்காண்டத்து அமைந்த கண்ணகி சென்ற நெறியினை ஆராய்வோம்.

(தொடரும்)

'சைவ சமய உண்மைகளும் தமிழ் நூல்களும்'

(திரு-அடிகளாசிரியன்)

பழங்கால நிலை:

ஆயிரக்கணக்கான யாண்டுகளுக்குமுன் மக்கள் வாழ்க்கை எப்படி யிருந்ததென்பதை, நாம் நம் அறிவுக்கண்ணுல் நோககி அறிதல் வேண்டும். மக்களின் வாழ்க்கையானது காலமுறையில் வளரக்கூடிய ஒன்ருயுள்ளதால் இக்காலத்திலுள்ள நாகரிக வாழ்க்கையைப் போல அக்காலத்து மக்கள் வாழ்க்கை இருக்கமுடியாது.

ஏறக்குறைய இரண்டாயிரம் யாண்டுகட்கு முன்னர் வாழ்ந்த மாமூலனுர் என்னும் புலவர் அவர் காலத்திலே வேங்கடமலையை அடுத்துள்ள பாலை நிலத்துச் சீறூர்களில் மக்கள் எப்படி வாழ்ந்தனர் என்பதைச் சொல்லோவியமாகக் காட்டியுள்ளனர்.

"............ .... பொறையடைந்து
இன்சிலை எழிலேறு கெண்டிப் புரைய
நிணம்பொதி விழுத்தடி நெருப்பின்வைத் தெடுத்து
அணங்கரு மரபிற் பேஎய் போல
விளரூன் தின்ற வேட்கை நீங்கத்
துகளற விளைந்த தோப்பி பருகிக்
குலாஅ வல்வில் கொடுநோக்கு ஆடூவர்
புலாஅற் கையர் பூசா வாயர்
ஒராஅ உருட்டும் குடுமிக் குராலொடு
மராஅஞ் சீறூர் மருங்கில் தூங்கும்
செந்நுதல் யானை வேங்கடம் தழீஇ
வெம்முனை அருஞ்சுரம்"

(அகநானூறு 265)

"அம்மக்களுடைய கையில் வளைந்த வலியவில் விளங்கும், அவர்கள் கொடிய நோக்குடன் விளங்குவர் அவர்களுக்குப் பசி வந்தால் பக்கத்திலுள்ள மலைக்குச் செல்லுவர். அங்கே திரிந்துகொண்டிருக்கும் காட்டெருதுகளைப் பிடித்துக்கொல்வர். அதனுடைய கொழுப்புப் பொருந்திய தசையை நெருப்பிலே வைத்தெடுத்து, கண்டார்க்கு அச்சத்தைத் தரும் பேய் போல வெள்ளையான ஊனைத் தின்பர். நீர் வேட்கை நீங்கக் குற்றம் அற விளைந்த தோப்பி என்னும் கள்ளினைப் பருகுவர். பின்பு புலால் விளங்கும் கையராய்க் கழுவாத வாயராய் ஊர்ப்பக்கத்திலே கூத்தாடிக்கொண்டு திரிவர்" என்று அம்மக்களின் வாழ்க்கையை எடுத்துககாட்டுகிருர்.

சமயத் தோற்றம்.

இவ்வகையான மக்களிடத்தே நல்லொழுக்கமில்லை நல்லொழுக்கத்தை ஊட்டும் கல்வியில்லை. கல்வியைப் பெறும் நல்லறிவிலலை, இவ்வில்லாமையினுல் இவர்கள் வாழ்க்கை கண்டார்க்கு

அச்சந்தரும் பேய் வாழ்க்கைபோல் இருந்தது. இப்பேய் வாழ்க்கை ஒழியவேண்டும். மக்களெல்லாம் நல்வாழ்க்கை வாழவேண்டும். அவர்கள் இவ்வுலக வாழ்க்கையிலும் மறுவுலக வாழ்க்கையிலும் நன்றாக வாழவேண்டும் என்னும் அடிப்படையான கருத்தைக்கொண்டே சமயங்கள் தோன்றின.

"ஒழுக்கம் கல்வி உயரறி வின்றியே
இழுக்க மேபயில் ஏழையர் யாவரும்
செழுக்க வாழ்ந்து சிவம்பெறச் செய்தலே
வழுக்கில் சைவ வளம்பெறு கொள்கையால்"

பல சமயங்கள்.

அங்ஙனம் தோன்றிய சமயங்களில் உலோகாயத சமயமும் பூதவாதியின் சமயமும் உயிரென்கின்ற ஒரு பொருளில்லை. பூதங்களின் கூட்டுறவால் தோன்றிய அறிவே உயிர்: கூடிய பூதங்கள் பிரிந்தபொழுது அறிவாகிய உயிரும் அழியும். ஆகையால் உயிர் மறுமையிலடையக்கூடியது ஒன்றுமில்லை என்று கூறும். அவற்றிற்குமேல் பௌத்தரும் சைனரும் உயிர் உண்டு, அவ்வுயிர் அடையும் மறுமையும் உண்டு; ஆனால் உயிருக்கு வினைப்பயனை ஊட்டுகின்ற கடவுளில்லை என்பர். மணிமேகலை நூலாசிரியர் கீழ்வருமாறு பௌத்த சமயக் கொள்கையைக் கூறியுள்ளார்.

பௌத்த சமயம்.

"இவ்வுயிரைப் பாசங்களால் கட்டினோருமில்லை; அக்கட்டிலிருந்து விடுவிப்போருமில்லை; கட்டிற்குக் காரணம் உயிர்கள். காமம் வெகுளி மயக்கங்களுடன் கூடியிருப்பதே ஆகும்; வீட்டிற்குக் காரணம் அவற்றிலிருந்து விடுதலை பெறுதலே ஆகும்" என்பர்.

"கட்டும் வீடும் அதன்கா ரணத்தது
ஒட்டித் தருதற் குரியோர் இல்லை
யாம்மேல் உரைத்த பொருள்கட் கெல்லாம்
காம வெகுளி மயக்கங் காரணம்"

(மணி—30—250—53)

சைனர்கள்.

சைனர்கள் தங்கள் தத்துவங்களை ஏழாகப் பகுத்துள்ளார்கள்.

1 உயிருள்ளது (ஜீவதத்துவம்)
2 உயிரில்லாதது (அஜீவ தத்துவம்)
3 வினைகள் வருதல் (ஆஸ்ரவ தத்துவம்)
4 வினைகள் ஆன்மாவைப் பந்திப்பது (பந்த தத்துவம்)
5 வினைகள்வரும் வாயிலைத் தடுப்பது (ஸம்வர தத்துவம்)
6 ஆன்மாவிற் சேர்ந்த சில வினைகளைத் தடுப்பது (நிர்ஜரா தத்துவம்)
7 ஆன்மாவினிடம் சேர்ந்த எல்லா வினைகளையும் நீக்கல் (மோட்ச தத்துவம்)

அவர்கள் பந்தம் என்பது

சீவனது குரோதம், மானம், மாயை, லோபம் என்னும் கஷாயத்துடன் கூடியுள்ளது; அது கர்மம் வருவதற்குத் தகுந்த ஸ்பரிசம், ரசம், கந்தம், நிறம் என்னும் புத்கலங்களை நுகர்கின்றது. அதுவே பந்தம் என்பர்.

அவர்கள் மோட்சமென்பது

ஞானவரணம், தர்சனவ்ரணம், அந்தராயம் முதலான எல்லாக் கர்மங்களும் கெடுவதே மோட்சம் என்பர்.

சைவ வைணவம்.

நம் நாட்டிலே தலை சிறந்த சமயங்களாகிய சைவம் வைணவம் என்னும் இரண்டும் உயிருண்டு, உயிரை இயக்குகின்ற கடவுளுண்டு, உயிரின் பந்தத்திற்குக் காரணமான பொருளுண்டு என்று கூறுகின்றன.

தொல்காப்பியர் கூறுவது

சைவ சமய உண்மைப் பொருளை ஆராய்வதற்கு முன்னர் தொல்காப்பியர் கூறியுள்ள ஒரு நூற்பாவின் கருத்தை நோக்குவோம்.

ஒரு குயவன் குடம் முதலானவற்றை வனைகின்றான். அவ் வனைதலாகிய தொழிலை நடத்த அக்குயவன் நிமித்த காரணமாகின்றான். அவன் வனைதற்றொழிலை நன்கு கற்றிருக்கவேண்டும் ஆகையால், அத்தொழிற் பயிற்சியும் அத்தொழிலுக்கொரு காரணமாயுள்ளது. இவ்வனைதலாகிய தொழில் எந்த செயப்படு பொருள் பற்றி நிகழும் என்றால், குடம் முதலாகிய செயப்படு பொருள்பற்றி நிகழும் என்று கூறுவோம். ஆகவே, வனைதற்றொழிற்கு செயப்படு பொருளும் ஒரு காரணமாகின்றது. அவ்வனைதற் றொழிலைச் செய்வதற்கு ஓர் இடம் வேண்டும். முக்காலங்களுள் ஓர் காலம் வேண்டும். மண் ஆகிய முதற் காரணமும், தண்ட சக்கரம் முதலாகிய துணைக் காரணங்களும் வேண்டும். இவ்வனைதலாற் றோன்றிய குடம் முதலானவற்றை யார் பெற்றுக்கொள்ளுகின்றார்களோ அவர்களும் அத்தொழில் தோன்றுவதற்கோர் காரணமாய் உள்ளனர். அக்குடத்தை வனைந்ததனால் ஏதாவதொரு பயன் ஏற்படும் அல்லவா அப்பயனும் அத்தொழில் தோன்றுவதற்கோர் காரணமாய் உள்ளது. இங்ஙனம் வனைதலாகிய ஒரு தொழிலை நடத்துதற்குச் செய்பவன் முதலான பல காரணங்கள் முன்னரே யிருக்க வேண்டும். அக்காரணங்கள் ஒன்றுகூடி நின்ற வழியே 'வனைதல்' என்ற தொழில் நடக்கின்றது. இதைப் போலவே ஒவ்வொரு தொழிலுக்கும் பல காரணங்கள் முன்னே யிருக்கவேண்டும். அக் காரணங்களெல்லாம் ஒன்று சேர்ந்த வழியே ஒரு தொழில் தோன்

றுகின்றது என்பதை நாம் உணர்ந்துள்ளோம். இந்த உண்மையை ஒல்காப் புலமைத் தொல்காப்பியர்

"வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி யென்றா
இன்னதற்கு இதுபய னாக என்னும்
அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின்முத னிலையே"

(தொல்-சொல்-வேற்-29)

என்ற நூற்பாவில் நன்கு தெரிவித்துள்ளார்.

அருணந்தி சிவம் கூறுவது.

மேற்கூறிய தொல்காப்பியக் கருத்தை வைத்துக்கொண்டு அருணந்தி சிவம் சிவஞான சித்தியாரில் கூறிய ஒரு பாட்டின் கருத்தைப் பார்ப்போம்.

வினைசெய்வதற்கு முதற்காரணமாயிருக்கின்ற உயிரானது இடமாகிய உடலும், கருவிகளாகிய கரணங்களும், முக்காலங்களுள் ஒன்றாகிய காலமும், செயப்படுபொருளாகிய பயனும், இன்னதற்காக இது பயனாக என்பவைகளாகிய நியதிகளும், செயலாகிய செய்தியும் ஆகிய ஏழு காரணங்களையும் தனக்குத் துணையாகக்கொண்டு வினைகளைச் செய்து போகத்தை நுகர்கின்றது என்ற கொள்கை எல்லா அறிஞர்க்கும் ஒப்பமுடிந்தது. மேற்சொன்ன எட்டு தொழிற் காரணங்களுள் உயிர் ஒன்று நீங்கலாக மற்றைய ஏழு காரணங்களும் அறிவில்லாத பொருளாகையாலே (சடமாகையாலே) தாமாக ஒன்று சேர்ந்து இயங்கி ஒரு தொழிலை உதவா. அவ்வேழையும் இன்றியமையாத உயிர் சுதந்தரமில்லாத சிற்றறிவுப் பொருளாயிருப்பதால் அவ்வேழையும் தன்னுடன் கூட்டிக்கொள்ளும் ஆற்றலில்லாததாய் உள்ளது. ஆகவே பாரிசேட அளவையால் உயிரும் ஏழு காரணங்களும் ஆகிய இரண்டையும் கூட்டுவிக்கும் பேரறிவுப் பொருள் ஒன்று உண்டென்பது அறிவுடையோ ரெல்லார்க்கும் புலனாகும் என்று கூறுகின்றார்.

"உலகுடல் கரணம் காலம்
உறுபலம் நியதி செய்தி
பலவிவை கொண்டு கன்மம்
பண்ணுவ துண்ப தானால்
நிலவிடா இவைதாம் சென்று
நினைந்துயிர் நிறுத்திக் கொள்ளாசரி
அலகிலா அறிவன் ஆணை
அணைத்திடும் அருளி னாலே"

(சிவ-சித்-சூத் 2-22)

என்றனர்.

மீமாஞ்சகர்

மீமாஞ்சகர் "வினையைச் செய்தவர்க்கு அவ்வினையே துறக்கம் முதலிய பயன்களை உதவும். இவ்வான்மாக்களுக்கு வேருய்ப் பரமான்மா ஒருவன் உண்டென்பதும், அப்பரமான்மாவினுல் உலகம் தோன்றியழியுமென்பதும் பொய் உலகம் முத்தொழிற் படாமல் என்றும் இவ்வாறே நிலைபெறும்" என்பர்.

திருவள்ளுவர் கூறுவது

உயிர்கள் எண்ணிய காரியம் சில சமயத்தில் எண்ணியபடி முடிகின்றது, சில சமயத்தில் எண்ணியபடி முடிவதில்லை. இதற்குக் காரணம் என்ன? அவ்வுயிர்களின் ஆகூழும் போகூழுமே அவற்றிற்குக் காரணமாகின்றன. ஆகூழும போகூழுமாகிய நல்வினை தீவினைகள் சடப் பொருள்கள் ஆகையினுலே அவை தாமாகச் சென்று உயிர்களை அடையா. வினைப்பயனைப் பெறுகின்ற உயிர்களும் பேரறிவும், பேராற்றலும் இல்லாதன ஆகையினுலே அவ் வினைகளைத் தாமே அறிந்து தம்மொடு கூட்டிக்கொள்ளா. ஆகவே, பாரிசேட அளவையால் வினைகளை உயிரோடு ஒன்றுவிக்கும் இறைவன் உளன் என்பது பெறப்பட்டது. இக்கருத்தினுலன்றே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுரும் திருக்குறளில் 'ஊழ்' என்னும் அதிகாரத்தில், ஊழ்வினையை உயிர்களுடன் வகையறிந்து கூட்டுபவனுகிய இறைவனை 'வகுத்தான்' என்னும் பெயரால் ஓதி, அவன் அவ்வவ்வுயிர்களின் வினையறிந்து வகுத்தபடியே உயிர்களுக்கு வினை நுகர்ச்சி ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" (377)

இக்குறளுரையில் பரிமேலழகர் 'ஒருயிர் செய்த வினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின் 'வகுத்தான்' என்ருர். என்று விசேடவுரையும் எழுதியுள்ளார்.

சேனுவரையர் கூற்று

தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த பலருள்ளும் சிறந்த உரையாசிரியர் என்று கருதப்படும் சேனுவரையர் 'காலம் உலகம்" (தொல். சொல். 57) என்னும் நூற்பாவினுள் 'பால்வரை தெய்வம்' என்னுஞ் சொற்ருெடருக்குப் 'பால் வரை தெய்வமென்பது, எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுக்கும் தெய்வம், என்று உரை எழுதியுள்ளார்.

மெய்கண்டார் கூற்று

இக்கருத்தினை நமது மெய்கண்டார், "—அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு" (சிவ–போ–11)
என்று அழகாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியுள்ளார்.

கதை சமயமல்ல

இங்ஙனம் தருக்கம் இலக்கணம் முதலான கருவி நூல்களைக் கொண்டு சைவ சமய உண்மைப் பொருள்களை ஆராய்ந்துணராத சில நவீனர்' புராணக் கதைகளைக் கருவியாக வைத்துக்கொண்டு நம் சமயத்தை அளந்து குறை கூறத் தொடங்கியுள்ளனர்.

சைவ சமயக் கதைகளெல்லாம் உண்மை நிகழ்ச்சியாகவோ அல்லது புனைந்துரையாகவோ இருந்து ஏதாவதொரு நீதியை நமக்கு உணர்த்தி நிற்கும். டால்ஸ்டாய் எழுதிய கதைகளைப் படிக்கின்றோம். நரிக்கும் காகத்திற்கும் நடந்ததாகவும், நாரைக்கும் நரிக்கும் நடந்ததாகவும் அவர் பல கதைகள் எழுதியுள்ளார். இக்கதைகள் அவ்வளவும் புனைந்துரை ஆகுமேயன்றி உண்மை ஆகமாட்டா. இக்கதைகள் புனைந்துரையாயிருப்பினும் நமக்குச் சிறந்த நீதியை அறிவுறுத்துகின்றன. அதற்காகவே அவற்றை நாம் மதித்துப் படிக்கின்றோம். அதுபோலவே சைவ சமயக் கதைகள் புனைந்துரையாயிருப்பினும் அக்கதைகளில் அமைந்துள்ள நீதியைக் கருதி நாம் அவற்றைப் படிக்கிறோம். அங்ஙனமின்றி அக்கதை சிறிதும் பகுத்தறிவிற்குப் பொருத்தமில்லை என்று சொல்லிக்கொண்டு திரிந்தால் அவர்கள் ஒருபொழுதும் இவ்வுலகத்தில் உண்மை உணரப்போவதில்லை சைவ சமயத்தை ஆராய்பவர் புராணக் கதைகளுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது. அச்சமயத்தின் உண்மையான பொருள்களை ஆராய்ந்துணரவேண்டும்.

சைவ சமயம்

சிவமாகிய பரம்பொருளுடன் ஒன்றுகின்ற கொள்கையைப் போதிக்கும் சமயம் எதுவோ அது சைவ சமயமாகும். ஒருவன் உயிராகிய தன்னை யறிந்து தன்னைக் கட்டிய தளையை யறிந்து அத்தளையை இறைவனுடைய திருவருளால் நீக்கிக்கொண்டு அவனுடன் சம்பந்தப்படுதலே சைவ சமயத்திற்குரிய கொள்கையாகும்.

"சைவம் சிவனுடன் சம்பந்த மாவது
சைவம தனையறிந் தேசிவம் சாருதல்" (1512)

என்பது திருமந்திரம். சைவம் என்னுஞ் சொல் சிவம் என்னுஞ் சொல்லிலிருந்து தோன்றியதாகும். சிவம் என்பதைச் சிவா என்று வழங்குவதும் உண்டு.

சிவா

'சிவா' என்னுஞ் சொல் மங்கல குணத்தை யுணர்த்தும். அப்பொழுது அது அலிப்பாலாகும். அது உமாதேவியையும் உணர்த்தும். அப்பொழுது அது பெண்பாலாகும். அது சிவபெருமானையும் உணர்த்தும். அப்பொழுது அது ஆண்பாலாகும். இங்ஙனம் 'சிவா' என்னுஞ் சொல்லை மூன்று பாலிலும் வடமொழியாளர் வழங்குகின்றனர்.

சிவஞான முனிவர் "சிவம்" என்னுஞ் சொற்கு மங்கல குணம், தூய்மை என்னும் இரண்டு பொருள்கொண்டு "நிறைந்த மங்கல குணத்தைப் பெற்றிருத்தலானும், அநாதியாகவே மலத் தொடக்கு அற்றிருத்தலானும் அறிவுடையோர் இறைவனைச் சிவன் என்று வழங்கலாயினர்" என்று கூறுகின்றார்.

"குறைவிலா மங்கல குணத்தன் ஆதலின்
நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்
இறையவன் பெருமையை யாவர் கூறுவார்."
(காஞ்சிப்புராணம்)

பின்னை லோகாசாரியர் என்னும் ஸ்ரீ வைஷ்ணவர் சிவன் என்ற சொல்லை நாராயணபரமாக வைத்து "சிவன் என்றது சர்வப்ர கார சுத்தன் என்றபடி; சிவசப்தம் சுத்தி, மாங்கல்ய குண விசிஷ்ட வஸ்துக்களிலேயும் ப்ரயுக்தம்" என்று தாம் இயற்றி யருளிய அஷ்டாதச ரகஸ்யத்துள் கூறியுள்ளார்.

சைனர்கள் தங்கள் மோட்சத்திற்குச் 'சிவகதி' என்று பெயர் வைத்து அதற்குக் காரணமான அருக தேவனைச் *'சிவகதி நாயகன்' என்று அழைக்கின்றனர்.

இங்ஙனம் சிலர் 'சிவம்' என்னுஞ் சொல்லைத் தங்கள் கடவுட்கு இட்டு வழங்கினும் அது அவர்கட்கு இடுகுறிப் பெயரா கவோ அல்லது குறைந்த குணமுள்ள காரணப் பெயராகவோ வழங்கப்பெறும்; பரமேசுரனுக்காயின் அது நிறைந்த குணமுள்ள காரணப்பெயராகவே வழங்கப்பெறும் என்னுங் கருத்தால் சிவஞான முனிவர் 'குறைவிலா மங்கல குணத்தன்' என்று குறித் துள்ள அருமை அறிஞர்களால் சிந்திக்கற்பாலதாம். இக்கருத்தை ஸ்ரீ ருத்ரம் என்னும் வடமொழி நூலானது "சிவனுக்கும், சிவம் என்னுஞ் சொல்லின் குணங்களைத் தரித்துள்ளவனுக்கும் வணக்கம்" (சிவாயச சிவதராயச) என்று கூறுகின்றதை நோக்குக. நம் ஆளுடைய அரசும் 'சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம் மேனி அம்மான்' என்றல்லவா முழங்குகின்றனர்.

சிவபெருமான் முதற் கடவுள் என்பதை நம் சமய நூல்களால் நாம் நன்கு அறிந்துகொள்ளுகின்றோம். சமயச் சார்பிலலாத பொது நூல்களில் சிவபெருமான் எப்படிப் பேசப்பட்டுள்ளார் என்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

"சிவபெருமானுடைய எட்டுருவமும், எண்குணமும்"

"எட்டுக்கொண்டார் தம்மைத் தொட்டுக்கொண்டே நின் றார், விட்டார் உலகமென்று உந்தீபற" என்னும் திருவுந்தியாரில் இறைவனை உய்யவந்த தேவ நாயனார் 'எட்டுக்கொண்டார்'

* சினவரன் தேவன் சிவகதி நாயகன் (சிலப்-10 180)

என்னும் பெயரால் குறிப்பிடுகின்றூர். இறைவன் ஐம்பூதங்கள், ஞாயிறு திங்கள், உயிர் என்னும் எட்டினையும் தனக்கு வடிவாகக் கொண்டவன் ஆதலால் எட்டுருவத்தையும தனக்கு வடிவாகக் கொண்டவன் என்று உரை கூறலாம். இக்கருத்திற்கியைய சிவ அஷ்டோத்திரம் இறைவனை "அஷ்ட மூர்த்தியே நம:" என்று கூறியுள்ளது.

"எண்குணத்தான் தாளை வணங்காத்தலை" என்னும் திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் "எணகுணங்களாவன—தன் வயத்தனுதல், தூய உடம்பினனுதல், இயற்கை யுணர்வினனும் தல், முற்றும உணர்தல், இயலபாகவே பாசஙகளின நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை; இவ்வாறு, சைவாகமத்தில் கூறப்பட்டது. அணிமாவை முதலாகவுடையன் எனவுமாம்" என்று கூறியுள்ளதால, இறைவனைத் தன்வயத்தனுதல் முதலிய எட்டுக் குணங்களையுடையவன் என்றும் அணிமாதி எட்டுச் சித்திகளையுடையவன் என்றும் கூறலாம்.

பிங்கல நிகண்டில்

"பவமின்மை இறவின்மை பற்றின்மை பெயரின்மை
உவமை யின்மை ஒருவினை யின்மை
குறைவி லறிவுடைமை கோத்திரம் இன்மையென்று
இறைவ னிடத்தில் எண்குணம் இவையே" (பிங்-2–6)

என்று சிவபெருமான் எண்குணங்களாக ஏழு இன்மையும் ஒரு உடைமையும் சொல்லப்பட்டுள்ளன.

பிறப்பற்றவன்; அருபி.

அப் பிங்கல நிகண்டு இறைவனுக்குக் குறிக்கும் நூறு பெயர்களுள் [1]'பிறப்பிலி' என்பது ஒன்று; [2]அருபி என்பது மற்றொன்று. இளங்கோவடிகள் சிவபெருமானுடைய கோயிலைக் குறிக்கும் பொழுது 'பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும் (சில-5-169) என்று கூறியுள்ளார். இதற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் "என்றும் பிறவாத யாக்கையையுடைய இறைவன் கோயிலும், இனி, யாக்கையிற் பிறவாப் பெரியோன் எனினும் அமையும்; என்றது அருபி என்றபடி" என்று எழுதியுள்ளார். இவற்றுல் நம் நாட்டுச் சான்றோர் சிவபெருமானைப் பிறப்பற்றவனுகவும், அருவனுகவும், பெரியோனுகவும் கருதி வந்தனர் என்பது நமக்குப் புலனுகின்றது.

உலகை அழிப்பவன் ஆக்குபவன்.

இறைவன் இவ்வுலகத்தை மாயை என்னும் தன் சட சத்தியுள் ஒடுக்கிக்கொள்வதால் மெய்கண்டார் அப்பெருமானுக்கு 'அந்தம்'

1 முக்கணன் விடையோன் முன்னவன் பிறப்பிலி (பிங்-2—2)
2 அரன் சிவன் அருபி (பிங்-2—2)

என்ற பெயரை வழங்கினர். 'கூற்ளுத்தியே மாற்றருஞ் சீற்றம் என்னும் புறநானூற்றடியில் இறைவன் கூற்று என்று குறிப்பிடப் பெறுகிருன். மகா சங்கார காலத்திலே இறைவன் உலகங்களை அழித்து ஆனந்தத் தாண்டவம் செய்வான் என்னும் உண்மையை "கூடி நான்குயர் வேலையுங் கோக்கநின் ருடினுன்"(கம்·சுந்·ஊர்-178) என்று கம்பநாடரும் கூறுகின்ருர்.

அங்ஙனம் உலகங்களை யெல்லாம் மாயை என்னும் தன் சடசத்தியில் ஒடுக்கிய இறைவன் மீண்டும அம் மாயையிலிருந்தே உலகத்தைத் தோற்றுவிப்பன் என்னும் கருத்தால் உலகிற்கு [3] அந்தத்தைச் செய்பவனே ஆதியும் ஆவன் என்றனர் மெய்கண்டார்.

இவ்வுலக உற்பத்திக்கு முதற் காரணமான ஐம்பெரும் பூதங்களையும் சிவபெருமானே படைத்தான் என்னும் உண்மையை

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னுக"(மதுரைக் காஞ்சி 463—55)

என்னும் பகுதியில் மாங்குடி மருதனுர் என்னும் நல்லிசைப் புலவர் கூறியுள்ளனர்.

உலகைக் காப்பவன்.

உயிர்களெல்லாம் தனது ஆணையாகிய சிற்சத்தியான் வரும் இருவினைகளான், அவை போக்கு வரவு புரிதற்கு ஏதுவாக, இறைவன் அச் சிற்சத்தியுடன் இயைந்திருப்பன் என்ருர் மெய்கண்ட தேவர். இறைவன் தன் சிற்சத்தியுடன் விளங்கிய நிலை உயிர்கள் போக்கு வரவு புரிந்து வினை நுகர்தற்கு ஏதுவாயிற்து. இக் கருத்தினைத் திருத்தக்க தேவர்

"போகம ஈன்ற புண்ணியன் எய்த கணையேபோல்
மாகம் ஈன்ற மாமதி யன்ளுன் வளர்கின்ருன்" (சிந்தாமணி)

என்னும் பாடற்பகுதியால் அறிவுறுத்தியுள்ளார் இப் பாடலில் தேவர் சிவபெருமானைப் 'போகம் அடைந்த புண்ணியன்' என்று கூருமல் 'போகம் ஈன்ற புண்ணியன்' எனவே கூறியிருப்பது நம்மால் கருதத்தக்கதொன்று. இதற்கு உரை எழுதிய நச்சினுர்க்கினியர் "தான் சத்தியும் சிவனுமாய் உலகத்துக்கெல்லாம் போகத்தை உண்டாக்கிய புண்ணியன்" என்று குறிப்பிட்டுள்ளார். அருணந்தி சிவாச்சாரியார் நவம்தருபேதம் ஏகநாதனே நடிப்பன் என்றும், எத்திறம் நின்ருன் ஈசன் அத்திறம் அவளும நிற்பள் என்றும் சிவம் சத்தியின் தன்னலங்கருதாத் திருவிளையாட்டினை அழகுபடக் கூறியுள்ளார். இக் கருத்தினைத் திருமூலதேவர் மிகவும் சுருக்கமாக.

"ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்ருர்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளக்கும்" (திருமால்-396)

என்று கூறியுள்ளனர்.

---

3 அந்தம் ஆதி. என்மனுர் புலவர் (சிவ–போ–சூ-1)

திருவடிப் பேறு.

சீவக சிந்தாமணியின் ஆசிரியராகிய திருத்தக்கதேவர் "பெற்ற பொருளிலே உள்ள பற்றையும், பெறாத பொருளைப் பற்றித் தோன்றும் ஆர்வத்தையும் நீக்கி நிருமலனுடைய பாதத்தைச் சேரின், அன்பைக் கொடுத்து, அத் திருவடிகளைத் தியானித்துப் போய்ச் சிவகதியை அடையலாம்" என்றார்.

"நின்றபற் றார்வம் நீக்கி
நிருமலன் பாதம் சேரின்
அன்புவிற் றுண்டு போகிச்
சிவகதி அடைய லாமே (சீவ. 3106)

இதனால் அவர் சமயக் கொள்கையில் திருமலன் திருவடி வேறு சிவகதி வேறு என்றும்; சிவகதியைப்பெற நிருமலன் திருவடி சாதனம் என்றும் நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

சைவ சமயக் கொள்கை அதுவன்று. இறைவனுடைய திருவடி சாதனமாகவும் உள்ளது. சாத்தியமாகவும் உள்ளது. இறைவனுடைய திருவடியை அறிந்து தியானிக்க மலத்தை நீக்கித் தூய்மை செய்து தன்னையே வீடுபேறாய் அடையச்செய்யும்,

"திருவடி ஞானமே சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே" (திருமந்-1598)

என்றனர் திருமூல தேவர்.

"அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்னும் (சிவ ஞான போதம்-சூ—11) பகுதிக்குச் சிவஞான சுவாமிகள் "அவ்வத்துவித நிலையை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே அம் முதல்வன் திருவடியாகிய சிவானந்தானுபூதியைத் தலைப்படும்" என்று உரை கூறியுள்ளார்கள். இதனால் இறைவன் திருவடியாகிய சிவானந்தானுபூதியே தொழும்பாகிய ஆன்மாக்கள் அடையும் சிறந்த உறுதிப் பொருள் என்பதை நாம உணர்ந்துகொள்ளுகின்றோம்.

இளம்பூரணர் சைவர்

தொல்காப்பியத்திற்கு எளிய நடையில் உரை எழுதிய சிறந்த உரையாசிரியர் இளம்பூரண அடிகளாவார். இவர் தொல்காப்பியப் பொருளியல் முதற் சூத்திர உதாரணத்திற்கு அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப்பாட்டை எடுத்துக்காட்டி, "யாழ்கெழு மணிமிடற் றந்தணன். தாவில் தாணிழல் தவிர்ந்தன்றால் உலகே" என்னும் பகுதிக்கு 'யாழ்கெழு மணிமிடற் றந்தணனது சிவானுபூதியில் உலகம் தங்கிற்று" என்று விளக்கம் எழுதியுள்ளார். இங்கே இவர் இறைவன் திருவடியைச் 'சிவானுபூதி, என்று கூறியுள்ளதும், சிவஞான முனிவர் திருவடியைச் 'சிவானந்தானுபூதி' என்று கூறியுள்ளதும் அறிஞர்களால் கருதத்தக்க தொன்றாம். இறைவன் திருவடியைச் சைவ சித்தாந்த மரபறிந்து "சிவானுபூதி' என்று இளம்பூரணர் கூறியுள்ளதால் இவரைச் சிறந்த சைவரென்று யான் கருதுகின்றேன்.

இளம்பூரணரும் விநாயகரும்

இளம்பூரணர் தொல்காப்பிய உரையுள் பெரும்பாலும் சங்க இலக்கியங்களிலிருந்தும் சிறுபான்மை வேறு இலககியங்களிலிருந்தும் மேற்கோள் காட்டியுள்ளனர். அம்மேற்கோள்களுள் மூன்று செய்யுட்கள் விநாயகரைப்பற்றி யுள்ளன.

"தன்றுள் நான்கின் ஒன்றுகைம மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே"

என்னும் இப்பாட்டு முதலடி எட்டெழுத்தான் வந்ததற்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது (தொல். செய் ருo) மற்ற இரண்டு செய்யுட்களும் பதினோராந் திருமுறையில் கபில தேவ நாயனாரால் செய்யப்பட்ட மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலையில் இருபதாவது பாட்டும் ஆருவது பாட்டுமாய் உள்ளனவாகும (தொ. செய். 175) இவை முறையே கலித்துறை நேரசை முதலாகப் பதினுறெழுத்தான் வந்ததற்கும், நிரையசை முதலாகப் பதினேழெழுத்தான் வந்ததற்கும் மேற்கோளாய் உள்ளன. அவற்றுள் ஆருவது பாட்டு வேறுபாட பேதத்துடன் காணப்படுகின்றது.

"கனிய நினைவொடு நாடொறும்
காதல் செயுமடியார்க்
கினிய னவனொரு வின்னுங்
கிலனெவ ரும்வணங்கப்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச்
சடைப்பலி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவன்கொல்
யானை முகத்தவனே"

இவற்ருல் இளம்பூரணர் விநாயப்பெருமானிடத்தும் ஈடுபாடுடையவர் என்பது விளங்குகின்றது.

விநாயகரும் சங்க இலக்கியமும்

'விநாயகரைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் பேச்சேயில்லை' என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர், ஆனல் சங்க இலக்கியங்களில் ஒன்ருகிய பரிபாடலில் திருமாலைப் பற்றிய மூன்ரும் பாட்டுள்

''நகையச் சாக நல்லமிர்து கலந்த
நடுவுநிலை திறம்பிய நயமி லொருகை
இருகை மாஅல்
முக்கை முனிவ நாற்கை அண்ணல்
ஐங்கைம் மைந்த அறுகை நெடுவேள்
எழுகை யாளஎண்கை ஏந்தல்
ஒன்பதிற்றுத் தடக்கை மன்பே ராள
பதிற்றுக்கை மதவலி நூற்றுக்கை யாற்றல்
ஆயிரம் விரித்தகைம் மாய மள்ள

பதினு யிரங்கை முதுமொழி முதல்வ
நூரு யிரங்கை யாறறி கடவுள்"

என்று கடுவன் இளவெயினனுர் பாடியுள்ளார். இதற்குப் பரிமேலழகர் "தனக்கோர் வடிவும் பெயரும் இன்றி அன்பராயினுர் கருதிய வடிவே வடிவாகவும், அவர் இட்ட பெயரே பெயராகவும் உடையனுதலின் 'முக்கை முனிவ' என்பது முதலாக 'நூருயிரங்கை ஆறறி கடவுள்' என்பது ஈருக வடிவு வேற்றுமையும், பெயர் வேற்றுமையும் சொல்லப்பட்டன" என்று உரை எழுதியுள்ளார்.

எனவே 'நயமில் ஒருகை' 'இருகை மாஅல்' என்பன திருமாலைக் குறிக்குமென்றும், முக்கை முனிவ முதலாயின அன்பராயினுர் அத்திருமாலுக்குக் கருதிய வடிவு வேற்றுமையும், பெயர் வேற்றுமையும் ஆகுமெனறும் நாம அறிந்துகொள்ளுகின்ருேம். இப்பாடற் பகுதியை வெறும புனைந்துரை என்று கருதாமல் நாம நன்கு சிந்தித்துப் பார்த்தல் வேண்டும், நாற்கை அண்ணல், ஐங்கை மைந்த, அறுகை நெடுவேள் என்னும் மூன்று சொற்ருெடர்களும் முறையே சிவபெருமானையும், விநாயகரையும், முருகனையும் கருத்துட்கொண்டு அமைக்கப்பட்டனவாகத் தோற்றுகின்றன. கடவுள் வழிபாடு செய்வோர் எல்லாத் தெய்வங்களையும் தாம் வழிபடு தெய்வமாகக் கருதி வழிபடுதல் அகண்ட வழிபாடாதலின இளவெயினனுர் திருமாலை எல்லாத் தெய்வமாக வும் கருதி வழிபட்டார் என்க. 'நெடுவேள்' என்பது முருகனுக்கொரு பெயர். இம்முருகனைப் பரிபாடல் ஐந்தாம் பாட்டால் பாடிய இதே இளவெயினனுர் மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத் தோள்' என்னும் அடியுள் முருகனுககுப் பன்னிரண்டு கைகளைக் கூறியிருக்க இங்கே அறுகை நெடுவேள் என்று கூறியுள்ளது பொருந்தாதெனின், எயினனுர் எல்லா எண்களுக்கும் முதற்காரணமான ஒன்று முதலான ஒன்பது எண்களையும் முதற்கண் கூறிப் பின் பததையும், நூறையும, ஆயிரத்தையும், பதினுயிரத்தையும், நூருயிரத்தையும் முறையே சொல்லக் கருதினுராகலின் பன்னிரண்டை ஆறுள் அடககி 'அறுகை நெடுவேள்' என்று கூறினுரென்க. இப்பாடற் பகுதியில் மேல் வரும் 'எண்கை ஏந்தல்' 'பதிற்றுக்கை மதவலி' 'ஆயிரம் விரித்தகைம்மாய. என்பவை சிவபெருமானைக் கருத்துட்கொண்டே அமைக்கப்பட்டன. (கும்பகோணம் கும்பேசுரர் கோயிலில் உள்ள முருக வடிவம ஒன்றற்கு ஆறு கைகள் உள்ளன)

வடவேங்கடம்

சிவஞான முனிவர் தாம் இயற்றிய தொல்காப்பியப் பாயிர விருத்தியுள் "தமிழ் நாட்டிற்கு வடக்கட் பிற எல்லையும் உளவாக வேங்கடத்தை எல்லையாகக் கூறினுர். அகத்தியனுர்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனுகிய அறுமுகக் கடவுள் வரைப்பு என்னும் இயைபு பற்றி என்பது" என்று கூறியுள்ளதால் வட வேங்கடம் முருகனுக்கு உறைவிடமாயிருந்தது என்று அறிந்துகொள்ளுகின்ருேம. பழங்காலத்திலிருந்து நம் நாட்டு

மக்கள் வேங்கட சுப்பிரமணியன், வேங்கட சுப்பன் திருமலைக் குமாரசுவாமி என்னும் பெயர்களைவைத்துக்கொள்ளும் வழக்கத்தை ஆராய்ந்தால் முனிவர் கருத்து முற்றிலும் உண்மை என்றே தெரிகின்றது; ஆனால் அரசஞ் சண்முகனார் எழுதிய தொல்காப்பியப் பாயிர விருத்தியுள்

"வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
....
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"
(சிலப்—காடுகாண் காதை)

என்று இளங்கோவடிகள் வேங்கடத்தைத் திருமால் வரைப்பாகக் கூறுதலின் அது பொருந்தாது என்று முனிவர் கூற்றை மறுத்துள்ளனர்.

இவை நிற்க, வடமொழியுள் ஸ்ரீபதி பண்டிதர் எழுதிய ஸ்ரீகர பாஷ்யத்தில் திருப்பதியில் வேங்கடரமணன் விக்ரகமாக இப்பொழுது கொண்டாடப்படுவது விஷ்ணு விகரகமில்லை என்றும், அது வீரபத்திரருடைய விக்ரகமென்றும், அது பிற்காலத்தில் விஷ்ணு விக்ரமாக மாற்றப்பட்டதென்றும், அவர் கூறியுள்ளார். அவ்வடிவத்தில் திருமாலின் இன்றியமையாத அறிகுறிகளாகிய சங்கு சக்கரங்கள் இல்லை என்றும், சர்ப்பாபரண முடையதாய் அவ்வடிவம் விளங்குகின்றதென்றும், கையின் கீழே நேராகச் சிவலிங்க வடிவம் உள்ளதென்றும் இக்காரணங்களால் அது விஷ்ணு விக்ரகமில்லை என்றும் அவர் கூறியுள்ளனர். இளங்கோவடிகள் 'செங்கண் நெடியோன் ஓங்குயர் மலையத் துச்சிமீமிசை நிற்கின்றார்' என்று கூறியுள்ளபடி இப்பொழுதுள்ள வேங்கடாசலபதிக் கோயில் மலையுச்சியில் இல்லாமலிருப்பதும் அறிஞர்களால் கருதத்தக்க தொன்றும். இவைகளெல்லாம் ஒருபுறமிருக்கப் பதினோராந் திருமுறையுள் கபில தேவ நாயனார் அருளிச்செய்த சிவபெருமான் திருவந்தாதியுள்,

"அரியாரும் பூம்பொழில் சூழ் ஆமாத்தூர் அம்மான்
அரியாரும் பாகத் தமுதன் — அரியாரும்
வேங்கடத்து மேயானை மேவா உயிரெல்லாம்
வேங்கடத்து நோயால் விளிந்து" —(15)

என்னும் வெண்பாவுள் சிவபெருமான் வேங்கடத்துள் விளங்குகின்றார் என்று கூறியுள்ள கருத்தும் அறிஞர்களால் எண்ணத்தக்க தொன்றும். மேலும் திருமந்திரத்துள்,

"வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடும் நந்தியை
வேங்கட மென்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே" —(190)

என்று திருமூலர் கூறும்பாட்டும் மேற்கூறும் கருத்துடன் வைத்து ஆராய்தற்குரியதாம். இக் காரணங்களால் வேங்கடமலை ஒரு காலத்தில் சைவ வழிபாட்டுக் குரியதாய் இருந்ததென்று புலனாகின்றது.

நிலவு தந்த நினைவு

கு. சிவமணி.

அறிமுகம்

[கடையெழு வள்ளல்களில் ஒருவன் வேள்பாரி. அவனுடைய மகளிர் அங்கவை சங்கவை என்னும் பெயரினர். அவனுக்குற்ற ஆருயிர் நண்பர் கபிலர் என்னும் செந்நாப் புலவர்.

பாரி பறம்பிற்கோமான், தண் பறம்பு நன்னாடு முந்நூறூர்களைக் கொண்டது. முந்நூறூர்களையும பரிசிலர் பெற்றனர். காற்றால் நடுங்கிய முல்லைக்கொடிக்குத் தனது தேரையே கொள்கொம்பாக நிறுத்திய பெருமைக்குரியவன் பாரி.

தமிழ்நாட்டு வேந்தரும் வள்ளல் பாரியின் மீது அழுக்காறு கொண்டு போர் தொடுத்தனர். பாரி போரில் மாய்ந்தான்.

கபிலர், பாரிமகளிருக்குரிய கணவரைத் தேடிக்கொண்டு சென்றார். ஒருநாள் இரவு, வானத்தில் வெண்ணிலவு தன்னொளி வீசி எழுந்தது. அந்நிலவைக் கண்டதும் பாரிமகளிருக்குப் பழைய நினைப்புக்கள் தோன்றின. அவர்தம் நெஞ்சத்துடிப்பு என்றும் நிலைபெறும் துன்பப்பாட்டாக மலர்ந்தது]

காட்சி — 1.

இடம் : நிலா முற்றம்.

உறுப்பினர் : வள்ளல் பாரி, புலவர் கபிலர்.

நிலைமை : அரண்மனை நிலாமுற்றத்திலே பாரி தனியாக உலவுகின்றான். அடிவானத்திலே முழுநிலவு தோன்றுகின்றது. அந்த அழகான காட்சியிலே மனத்தைப்பறிகொடுத்த வண்ணம் நிலவின் தோற்றத்தைப் பார்த்தபடியே பாரி நிற்கின்றான். அப்போது அவைக்களப் புலவரும் உயிர் நண்பருமாகிய புலவர் கபிலர் நுழைகின்றார். சிறிது அமைதி; புலவர் உரையாடலைத் தொடங்குகின்றார்,

கபிலர் : வள்ளல் பாரியின் அருளுள்ளத்தைப்போன்று, வானின்றும் பெய்யும் மாரியும் உயிரைப் புறக்கின்றதே என்று வியப்புடன் வானைப்பார்க்கின்றாயா ? பாரி !

பாரி : யார் ? (திரும்பியவாறு) புலவர் பெருமான் கபிலரா (வணங்கியபடி) வாருங்கள்; வணக்கம்; வந்து நெடுநேரமாயிற்றா ? (இருக்கையைக் காட்டி) இதோ ! இவ்விருக்கையில் அமருங்கள்).

கபிலர் : (அமர்ந்தபடியே) இப்போதுதான் வந்தேன். என்ன சிந்தனையோ ? (பாரியும் மற்றோர் இருக்கையில் அமர்கின்றான்).

பாரி ; மலையிடையில் எழுகின்ற நிலவுக்காட்சியின் அழகில் ஒரு கணம் என்னை மறந்தே போனேன், தங்கள் வருகை...

கபிலர் : அந்த ஈடுபாட்டைக் கலைத்துவிட்டமைக்கு வருந்துகின்றேன் பாரி!

பாரி : புலவர் பெருமானே! வருத்தம் எதற்கு? சிறந்த பாடல் ஆயிரம் புனைந்து எனது சிந்தைக்கு விருந்தளிப்பீர்களே! செந்தமிழ்த்தேன் வெறுக்கும் வண்டுண்டோ?...(நிலவைச் சுட்டியவாறு) அதோ! மேகமென்னும் அலைக்கைகள் உந்த, விண்மீனின் மணிக்குலங்கள் ஒளிதெறிக்கும வானக்கடலிடையே மேவும் நிலவுத்தோணியின் காட்சி கண்ணுக்கு எவ்வளவு அழகாக இருக்கின்றது பார்த்தீர்களா?

கபிலர் : என்றும் தோன்றும் நிலவுக்காட்சி இன்று உன் எண்ணத்தில் கற்பனை உணர்ச்சியைத் தோற்றுவித்திருக்கின்றது. வாழ்க; அக்கலையுள்ளம்!

பாரி : நன்றி, பெருமானே! மலருடன் சேர்ந்த நாரும் மணம பெறும்.

கபிலர் : பாரி! நின் குலக்கொடிகள் அங்கவை, சங்கவை எங்கே?

பாரி : ஆடலரங்கு சென்றனர். வரும் நேரந்தான்...அதோ! அவர்கள் (பாரியின் மகளிர் அங்கவை, சங்கவை இருவரும் நுழைந்து வணங்குகின்றனர்)

இருவரும் : ஆசிரியப் பெருந்தகையே வணக்கம்.

கபிலர் : வாழ்க!

இருவரும் : தந்தையே! வணக்கம்,

பாரி : வாழ்க!...(பாரி மகளிர் ஒருபுறம் அமர்கின்றனர்)
ஆடல் முடிந்ததா, அங்கவை!

அங்கவை : முடிந்ததும் நேரே இங்குதான் வந்தோம்

பாரி : சங்கவை! சிறப்புச் செய்தி ஏதும் உண்டா?

சங்கவை : உண்டு. புதியதொரு பாட்டிற்கு இன்று மெய்ப்பாடு கற்றோம். ஆகவேதான், வருவதற்குச் சிறிது நேரமாயிற்று.

கபிலர் : பாரி! நின் மகளிர் முத்தமிழ்ச் செல்வியராகத் திகழ்கின்றனர்.

பாரி : புலவர் பெருமானே! அவர்தம் ஆசானாகிய தங்கட்கே அப்பெருமை அனைத்தும் சேரும்.

கபிலர் : கலையைக் கற்பித்தால் அதை விரும்பி ஏற்க வேண்டாமா? கூர்த்த மதியும் ஆழ்ந்த நினைவாற்றலுங் கொண்ட நின் மகளிர்க்கு எக்கலைதான் எளிதில் வராது! (சிறிது அமைதி) அங்கவை! சங்கவை! இந்நிலவுக் காட்சியைக் கண்டதும்

உமது மனத்துள்ளே எழும் உணர்ச்சியைச் சொல்லுங்கள், கேட்கலாம்.

(சிறிது அமைதி. அங்கவை, சங்கவை இருவரும் நிலவைப் பார்க்கின்றனர். பாரியும் கபிலரும் அவர்தம் திருமுகத்தையே நோக்குகின்றனர்.)

அங்கவை : புலவர் பெருமானே! அழகு நங்கையரின் முகம்போல முழுநிலவு ஒளி செய்கின்றது.

சங்கவை : நம் புலவர் பெருமானின் புலமையின் முழுமை போல நிலவின் கலைகள் இன்று நிறைவு பெற்றுள்ளன,

பாரி : சங்கவை! நன்று சொன்னாய், நானும் அதைத்தான் எண்ணினேன்,

அங்கவை : எம் தந்தையாரின் ஆட்சியின்கீழ் மனம் நிறைவுற்ற குடிமக்களின் மகிழ்ச்சி முகம்போல நிலவு கதிரொளி வீசிச் சிரித்து மகிழ்கின்றது.

கபிலர் : அங்கவை! சிறப்பாக மொழிந்தாய்...நீவிர் இருவரும் செந்தமிழ்போன்று செழித்து வாழ்க!

பாரி : (மகளிர் இருவரையும் அணைத்துக்கொண்டு) பெருந்தகையே! இருவரும் அறிவறிந்த மக்கள்!

சங்கவை : தந்தையே! நாங்கள் இருவரும் சொன்னவற்றில் எதை நீங்கள் விரும்புகின்றீர்கள்?

பாரி : இருவர் சொன்னவற்றையும் ஒருசேர விரும்புகின்றேன்,

அங்கவை : அது எப்படி முடியும்? யார் சொன்னதை மிகுதியாக விரும்புகின்றீர்கள் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

பாரி : புலவர் பெருமானே! இதற்கு மறுமொழி?

கபிலர் : அங்கவை! உனக்கு வலக்கண்மீது விருப்பமா? அல்லது இடக்கண்மீது விருப்பமா?

அங்கவை : இரண்டையும் ஒருசேர விரும்புகின்றேன்,

கபிலர் : சங்கவை! உனக்கு?

சங்கவை : தமக்கை சொன்னதை அப்படியே ஒப்புகின்றேன்,

கபிலர் : அது எவ்வாறு இயலும்? உங்கள் எண்ணப்படி ஒரு கண்ணைத்தானே விரும்பவேண்டும்.

அங்கவை : இரண்டுமே ஒன்று போல்தான்.

கபிலர் : நீவிர் இருவரும் பாரியின் இரு கண்கள். இப்போது விளங்கியதா?

(இருவரும் தலையசைக்கின்றனர். பாரி நகைக்கின்றான்)

காட்சி முடிவு.

காட்சி — 2.

இடம்: பெருமன்றம்.

உறுப்பினர்: அமைச்சர், படைத் தலைவர்.

நிலைமை: இருவரும் பாரியைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.

அமைச்சர்: படைத்தலைவரே; நம்மரசர் வள்ளல் பாரியின் வளம் கண்டு இவ்வையமே புகழ்கின்றது. அதனைப் பொறுக்காத மூவேந்தரும் நம்மவர்மேல் அழுக்காறு கொண்டிருப்பதாக அறிகின்றேன். ஆகவே, எந்நேரத்திலும் திடீரென்று பகைவர்மேல் படை நடத்திச் செல்லவேண்டி நிலை ஏற்படலாம்.

படைத்தலைவர்: (மீசையை முறுக்கியபடி) அமைச்சரே; போர் என்று கேட்ட அளவிலே எனது தோள்கள் பூரிக்கின்றன; நரம்புகள் முறுக்கேறுகின்றன; கண்கள் சிவக்கின்றன; மீசை துடிக்கின்றது; கை வாளைச்சுழற்ற நேரம் பார்க்கிறது, மெய்யெல்லாம் சிலிர்க்கின்றது. (நெஞ்சைத் தட்டியவாறு) நமது நாட்டைக் கொள்ள வருவோர் யாவரே ஆயினும் அவரைப்படாத பாடு படுத்தி ஓட்டத்துடிக்கிறது உள்ளம்... ... உம்......

அமைச்சர்: நாட்டுப்பற்றுக்கொண்ட நீர் படைத் தலைவராக இருப்பதனால் நம்மவர் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை......... ஒரு வேளை; போர் நேரிடாமல் ஒழியினும் ஒழியலாம்.

படைத்தலைவர்: (ஏமாற்றத்தோடு) ஆகா!... விருந்தென்றீர்; வீறு கொண்டேன்; வீணே இருந்துவிடும் என்னும் உமது மொழி கேட்டு நான் அயர்கின்றேன். இரைமீது பாய இருந்த புலியை உமது பேச்சால் பூனையாக்கிவிட்டீர் அமைச்சரே! பூனையாக்கி விட்டீர்.

(பாரி நுழையவே இருவரும் வணங்குகின்றனர். பாரி இருக்கையில் இருந்தபின் இருவரும் அமர்கின்றனர்)

பாரி: (இளநகையுடன்) படைத்தலைவரே! போர்க்களத்திலே யானையின் மத்தகத்தை உடைக்கவேண்டிய நீர் ஏதோ பூனையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றீரே?

அமைச்சர்: போரே நெடுநாட்களாக இன்மையால் படைத்தலைவர் பூனைபோலாகிவிட்டாராம்.

பாரி: அப்படியா?

படைத்தலைவர்: ஆம் அரசே!

(வாயிலோன் நுழைந்து வணங்குகின்றான்;

வாயிலோன்: வணக்கம் அரசே! நம் ஒற்றர் நரிக்கண்ணர் வாயிலில் தங்கள் ஆணை நோக்கிக் காத்துள்ளார்.

பாரி : உடன் வரச்சொல். (வாயிலோன் நீங்குகின்றான்) நம் ஒற்றன் நரிக்கண்ணன் ஒற்றறிவதில் மிகவும் வல்லவன்.

படைத்தலைவர் : பெயரே நரியாயிற்றே, அரசே! (அனைவரும் நகைக்கின்றனர்) காற்றுப்புகாத இடத்திலும் அவர் நுழைந்து விடுவார்.

அமைச்சர் : கொடுத்த செயலைச் செய்து முடிப்பதில் அவர் தலைமை யானவர். பாண்டிய நாடு சென்றிருந்தார்; சிறப்புச் செய்தியுடன் வந்திருக்கக்கூடும்.

(ஒற்றன் நரிக்கண்ணன் பதைப்புடன் நுழைகின்றான்.)

அமைச்சர் : நரிக்கண்ணரே! நல்ல செய்தி கொணர்ந்திருப்பீர் என எண்ணுகின்றேன்.

நரிக்கண்ணன் : (பதைப்புடன்) அரசே! வாழ்க நும் கொற்றம்; வளர்க நும் ஆணை வளம்பல நல்கும் வள்ளலே, ஊழிதொறும் வாழி!

பாரி :(புன்னகையுடன்) நரிகண்ணா! வாழ்த்தை வாரி வழங்குகின்றாயே தவிர வந்த செய்தியை அறிவிக்கவில்லையே; உனது உடல் ஏன் நடுங்குகின்றது? முகத்தில் மாற்றம் ஏன்?

நரிக்கண்ணன் : நடுங்காமல் என்ன செய்வது, அரசே! சேர, சோழ, பாண்டியர் மூவரும் நமது பறம்பு நாட்டின்மீது படையெடுத்து வருகின்றனர். கடலலைபோல் படைகள் திரண்டுள்ளன. மடை திறந்த வெள்ளமென அவை ஆர்த்து வருகின்றன. மூவேந்தரும் படைத்தலைமை ஏற்றுள்ளனர்.

(பாரி வெகுண்டு எழுகின்றான். அனைவரும் எழுகின்றனர்)

பாரி : (சினச்சிரிப்புடன்) முடியுடை வேந்தர் மூவரும் பறம்பிற் கோமானை எதிர்க்கப் படைதிரட்டி வருகின்றனரோ?...... வரட்டும்...... (எள்ளல் சிரிப்பு) தன்னந்தனியான எம்மைத் தாக்கிப் பொருதற்குத் தமிழ்நாட்டு மூவேந்தரும் அணிவகுத்துள்ளனர்!... விந்தையிலும் விந்தை!... ஒருவருக்கொருவர் முரண்பட்டுப்போர் புரியும் மூவேந்தரின் ஒற்றுமைக்கு நாம் காரணமாக இருந்தோமே!... அதுவரை மகிழ்ச்சி!

படைத்தலைவர் : உறையினில் நெடுநாளாக ஒளிமங்கி உறங்கிக் கிடந்த எனது வாளுக்கு உரிய வேலை கிடைத்துவிட்டது.

அமைச்சர் : (அமைதியாக) வள்ளல் பாரியின் புகழ் பொறுக்காத மூவேந்தரும் ஒருசேர வருகின்றனர்போலும்!

பாரி : (அடங்கா வெகுளியுடன்) வரட்டும்! ... மூவேந்தர் என்ன? இந்த வையகமே எம்மை எதிர்க்கட்டும்! இந்தப் பாரியின் நெஞ்ச உறுதியை யாரும் குலைக்கமுடியாது. அரச யானை போன்று சிறந்து நிற்கும் நம் படைத்தலைவர் இருக்கும் வரை

இயற்கையிலே அரண் அமைந்த இந்தப் பறம்பு மலையை எவரும் நெருங்க இயலாது... என்ன, படைத்தலைவரே !

படைத்தலைவர் . போர் என்று கேட்டதும் கார்கண்ட மயிலென நம் வீரர் களித்து ஆடுவர். அன்னை நாட்டிற்குத்தங்கள் ஆவியையே உவப்புடன் தரத்தயங்கார். ஆணையிடுங்கள் அரசே ! ஆணையிடுங்கள் (வாளை உருவி) வருகின்ற பகைவர்க்கு நமதாற்றலை உணர்த்த ஆணையிடுங்கள்.

பாரி ; (பெருமிதமாக) படைத்தலைவரே ! எதிர்ப்பு எவ்வுருவில் வரினும் அதை எதிர்த்து முறியடிக்க நமது போர்ப்படைகள் அணிவகுக்கட்டும். மலைக்காவல் வலுவாக இருக்கட்டும்; நிலைப்படை மதிலைக்காத்து நிற்கட்டும்; துணைப்படை அரண் மனைக்கு அருகில் இருக்கட்டும். (உணர்ச்சிமிக) வாழ்வோம் ! அல்லது தாழ்வைக்கொள்ள உள்ளத்தோடு வீழ்வோம் !... நாமே படைத்தலைமை ஏற்கின்றோம் இப்பாரே ஒன்று திரண்டு வரினும் இப்பாரியின் பறம்புமலையைப் போரிலே கொள்ளல் அரிது என்பதை இவ்வுலகு உணரட்டும். படைத் தலைவரே ! முரசு முழங்கட்டும் ! போர் முரசு முழங்கட்டும் ! மூவேந்தரின் போர் வெறியை எதிர்க்கப் பாரியின் போர்முரசு முழங்கட்டும். (வாளை உருவி) போர் ! போர் !! போர் !!!

(காட்சி முடிவு)

காட்சி — 3.

இடம் : பாசறை.

உறுப்பினர் : சேரன், சோழன், பாண்டியன்.

நிலைமை : இரவு நேரம்; பாசறையில். போர் விளைவைப்பற்றி மூவேந்தரும் ஆய்கின்றனர்.

சேரன் : எப்படியோ பாரியின் பறம்பு மலையை முற்றுகையிட்டு விட்டோம். இனிமேல் அவனால் ஒன்றும் செய்ய இயலாது. இனி அவன் நமது கைப்பிடிக்குள்... (சிரிக்கின்றான்)

சோழன் : சேரரே ! பறம்பு மலையை வளைத்தது உண்மைதான்; ஆனால் பாரியை வெல்லல் அவ்வளவு எளிதில் முடியாது. மலைக்கு வெளியில் படையுடன் பல நாட்கள் தங்கலாம். மலைக்குள் நுழைய முயன்றால் நமது படை அணியே நிலை குலையும்.

சேரன் ; சோழரே ! எத்தனை நாட்களுக்குத்தான் பாரி பறம்பு மலை மேலே தங்கியிருக்கக்கூடும் ? ஒரு பொருளையும் உள்ளே செல் லாதவாறு தடுத்துவிடுவோம். உணவின்றி மலைக்கோட்டைக் குள்ளிருப்போர் மாண்டு போகட்டும். பாண்டியரே ! நீர் என்ன சொல்லுகிறீர் ?

பாண்டியன் : சோழர் சொன்ன கருத்தே எனக்குப் பொருத்தமாகப் படுகின்றது. பறம்புமலை இயற்கை வளம் வாய்ந்தது. ஆண்டு பல முற்றுகையிட்டால்கூட அதன் வளம் குன்றிவிடாது.

சேரன் : பாரியை எவ்வாற்றானும் வென்ற பிறகே இந்த இடத்தை விட்டு நீங்கவேண்டும்.

பாண்டியன் ; அதற்காகத்தானே மூவரும் ஒருசேரப் படை திரட்டி வந்தோம்,

சோழன் : அதோ! தூரத்தே கையில் தீவட்டியுடன் ஓர் உருவம் வருவதைப் பார்த்தீர்களா? (அவன் சுட்டிய திசை நோக்கி மற்ற இருவரும் பார்த்துத் தலையசைக்கின்றனர்.)

சேரன் : நம்முடன் சந்து செய்துகொள்வதற்காகப் பாரி யாரை யேனும் நம்பால் விடுத்துள்ளானோ ?

சோழன். அவ்வுருவம் நம்பால்தான் வருகின்றது; பொறுத் திருந்து பார்ப்போம். (தீவட்டியும் கையுமாக உள்ளே நுழை கின்றார் கபிலர். காவலன் தீவட்டியை வாங்கிச் செல்கின்றான். புலவரைக்கண்ட மூவேந்தரும் எழுந்து வணங்குகின்றனர்.)

கபிலர் : மூவேந்தரும் வாழ்க!
(அனைவரும் அமர்கின்றனர்)

சேரன் : (ஏளனமாக) பாரியின் அவைக்களப் புலவர் கபிலர், இந்த இரவு நேரத்தில் கூகையும் கோட்டானும் குடிகொண்ட கொடிய போர்க்களப் பாசறைக்கு வருகைதரும் சிறப்பு யாதோ ?

பாண்டியன் : சிறப்பின்றியாச் செந்நாப்புலவர் இங்கு வருகை தருவார் ?

கபிலர்: (அமைதியாக) மூவேந்தர்களே! நீவிர் கருதி வந்த போர் குறித்துப் பேசவே உங்கள்பால் வந்தேன்.

சேரன் · எனக்கு மட்டும் முன்னரே தெரியும்; பாரி தங்களைத் தூதுவராக எப்படியும் விடுப்பான் என்று ... ...

கபிலர் : வஞ்சி நாட! நின் முடிவு தவறு! வள்ளல் பாரியால் ஏவப்பட்ட தூதுவன் அல்லன் யான். உமது நிலைக்கு இரங்கியே ஒரு செய்தியை உமக்குத் தெரிவிக்க வந்தேன்.

பாண்டியன் : பறம்பு மலையைக் கொள்வதாக இருக்குமோ.

கபிலர் : பறம்பைக் கொள்ள நினைப்பது பகற்கனவு ஏனெனில் உழவர் உழாத மூங்கில நெல், பலாப்பழம், வள்ளிக் கிழங்கு, செந்தேன் ஆகிய நான்கு பயன்களையும் உடையது பறம்பு. விரிவில் வானத்தை நிகர்த்தது. விண்மீன்கள் போலும் எண்ணற்ற இன்னறுநீர்ச்சுனைகள் அதன்கண் உள்ளன. அம்மலையில் உள்ள மரங்கள் தோறும் நீவிர் யானைகளைப் பிணித்தாலும், அகன்ற இடத்திலெல்லாம் தேர்ப்படைகளை நிறைத்தீராயினும் பாரியை வெல்ல முடியாது.

சேரன் : (சினத்துடன்) வெற்றிபெறுமல் இவ்விடத்தைவிட்டு நாங்கள் அசையப்போவதில்லை.

கபிலர் : பறம்பைக்கொள்ளும் வழி ஒன்று உமக்குச் சொல்லுவேன். அதன்படி நீவிர் நடந்தீராயின் பாரி அவனையே உமக்குப் பரிசாகத் தருவான்.

பாண்டியன் : பாரியைத் தாங்கள் பிடித்துக்கொடுத்துவிட்டால் உங்களுக்குப் பத்து நூருயிரம் பொன் பரிசாகத் தருகிறோம்.

கபிலர் : மீனக்கொடியோனே! பொன்னுக்கு அடிமையாகிப் புன்மை செய்யார் புலவர்கள். என்னைப் பொறுத்தமட்டில் நீ தருவ தாகச் சொன்ன பொன் இந்த மண்ணுக்கு ஒப்பானது. முந்நூறு ஊர்களைக்கொண்டது இப்பறம்பு நன்னாடு; முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றனர். இப்போது பறம்புமலையும், பாரியும், யானும் உள்ளோம்.

சோழன் : பறம்பைக்கொள்ள வழி ஒன்று சொல்வதாகச் சொன்னீர் களே!

கபிலர் : பகைவரை வஞ்சியாது எதிர்நின்று கொல்லும் ஆற்றல் பெற்ற மூவேந்தரேயாயினும் உம்மால் போரில் பறம்பைக் கொள்ள முடியாது.

பாண்டியன் : அதை அடையும் வழி?

கபிலர் : நான் அதை அறிவேன். சீறியாழை இசைத்துக்கொண்டு, மணம் வீசும் கூந்தலையுடைய நும் விறலியர் பின்னே வர, நீவிர் இரவலர்களாக ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் பாரி யிடம் சென்றால் அவ்வள்ளல் பெருமான் நாட்டையும், தன்னை யும், பறம்பு மலையையும் பரிசிற் பொருள்களாக ஒருங்கே தருவான்.

சேரன் : (சினத்துடன்) புலவரே! போதும் உமது பிதற்றல்! குறுநில மன்னன் ஒருவன்பால் எம்மை இரவலராகச் செல்க என்று கூறத்தகாதவற்றைக் கூறிய உமது உயிரை, இந்நேரம் எமது கூர்வாள் சுவைத்திருக்கும். நீர் புலவர் என்பதால் உயிர் பிழைத்தீர். சொல் விளையாட்டைத்தவிர வேறு எதை அறிவீர் நீர்? வில்லும் வாளும் கொண்டு விளையாடும் எம் மறவர் படை தடை உடைத்து நாளை பறம்பு மலையைக் கொள்வதை நீர் காணத்தான் போகின்றீர். பாரிக்குரிய கையறு நிலைப்பாட்டை இப்போதே பாடுவையும்; எம்முன் நில்லாது ஓடும்.

கபிலர் : (அமைதியாக) பறம்பை அடையும் ஒரே ஒரு வழியைத்தான் உங்களுக்கு அறிவுறுத்தினேன்.

சோழன் : போதும், தங்கள் அறிவுரை! தாங்கள் போகலாம்.

கபிலர் : நன்று மன்னவா! நான் சொன்னவை நினைவிருக்கட்டும். வருகிறேன்.

(கபிலர் நீங்குகின்றார்)

சேரன் : (வெறுப்போடு) புலவனுக்கு எவ்வளவு இறுமாப்பு! பாடிப் பிழைக்கும் அவன் நாடாளும் நம்மையே இரவலராகச் செல்லச் சொன்னானே !

சோழன் : சேரரே ! செந்நாப் புலவரான அவரது மதிப்பைக் குறைக்காதீர். (சிறிது சிந்தனை) புலவர் கூறியதிலும் தவறொன்றும் இல்லை.

பாண்டியன் : காவிரிக் காவலர் என்ன சுழறுகின்றார் ?

சோழன் : பாரியின் வள்ளன்மையை இப்பாரே வியந்து போற்றும். காற்றால் நடுங்கிய முல்லைக்கொடிக்காகத் தனது மணி நெடுந் தேரையே விட்டுவந்த விரிந்த உள்ளம் அவனுடையது. நாம் பாணராக உருமாறி அவனையே பரிசாகக் கேட்பினும் அவன் உடனே கொடுத்து நம்மை மகிழ்விப்பான்.

சேரன் : நாம் பாணராக மாறி அவன்பால் இரவலராகச் செல்ல வேண்டுமா ?

பாண்டியன் : மலைநாட்டு மன்னரே ! நமது வேலை முடிவதற்கு எந்த வழியை மேற்கொண்டால் என்ன ? நாம் வெற்றிபெற வேண்டும். அதற்காக நாம் எதையும் செய்ய அஞ்சக்கூடாது. ...கபிலர் சொன்ன உரையை மேற்கொண்டால் போர் அழிவு இருக்காது. நமது புன்னகை ஒன்றாலே போரில் வெற்றியைப் பெற்றுவிடலாம். புகையின்றிநெருப்பெரியும் விந்தையைக் காணலாம். என்ன சொல்லுகிறீர் ?

சோழர் : மதுரை மன்னரே ! அவ்வழி இப்போது வேண்டாம். பொறுத்திருந்து கொள்வோம். மலையைப்பிடிக்க நம்மால் முடிந்த முயற்சிகள் அனைத்தையும் செய்து பார்ப்போம். பயன் ஒன்றும் விளையவில்லை என்றால் பின்னர், நயமாக நம்மை இகழ்ந்துரைத்த புலவரின் புது நெறியை நாடுவோம்.

சேரன் ; ஆமாம். இங்கு நடந்தவற்றைப் புலவர் பாரிக்குச் சொல்லாமல் இருக்கமாட்டார். ஒருவேளை அவன் நம்மைப் பாணர் உருவிலே எதிர்பார்த்தலும் கூடும். இந்நிகழ்ச்சி பழங் கதையாய்ப்போன பின்னர் நாம் செல்லின் நமது பகை முடிக்க வாய்ப்பாக இருக்கும்.

பாண்டியன் : வில்லவரே ! நீர் சொல்லுவதை நான் மனநிறைவுடன் கொள்கிறேன் . வளவர் ஏன் வாட்டமாக இருக்கின்றார் ?

சோழர் : மீனவரே ! வாட்டம் ஒன்றுமில்லை. புலி பதுங்குவது பாய்ச்சலுக்காக !

(அனைவரும் சிரித்தல்)

சேரன் : களைப்பாக இருக்கின்றது.

பாண்டியன் : யாரங்கே ! ... பழச்சாறு கொண்டு வா.

(காட்சி முடிவு)

காட்சி — 4.

இடம் : காட்டு வழி.

உறுப்பினர் : கபிலர், பாரி மகளிர் அங்கவை, சங்கவை.

நிலைமை : இரவு நேரம், வழிநடை வருத்தம் மீதூர அங்கவை சங்கவை இருவரும் மரத்தடியில் படுத்துள்ளனர். கபிலர் அவர்களின் அருகே வருத்தத்துடன் அமர்ந்துள்ளார். கண்ணீர் பொங்க, அடிக்கடி பெருமூச்சு விடுகின்றார். எழுந்து நின்று தூரத்தே தோன்றும பறம்பு மலையைக் காணும்போது அவருக்குத் தேம்பல் மேலிடுகின்றது. மகளிர் இருவரும எழுந்து உட்காருகின்றனர். அவர்களைக் கபிலர் பார்க்கவில்லை.

கபிலர் : (தனி மொழி) வருவார்க்கெல்லாம் வாரி வழங்கிய வள்ளல் பாரியின் பறம்பு மலையே! அவன் இருந்த காலத்துப்புகழால் உயர்ந்து நின்னை நேரே காணுதார்க்கும் செவிப்புலனுகத் தோன்றினுய். இப்போது இவ்விடத்து நின்ருர்க்குத் தோன்றுவாய் | சிறிது தொலைவு சென்று நின்று பார்ப்பார்க்கும் தோன்றுவாய் !

இதோ ! தந்தையை இழந்து தாங்காத் துயருறும் ஆத்தொடி அரிவையர் தந்தை நாடு முன்னர் மழைவளம் குறையாதது இனி என்னுகுமோ ?

நிழலிடையில்லா நீள் வழியில் தனிமரம் போல் நின்று இரப்பார்க்கெல்லாம் இல்லை என்னுது ஈந்துவந்த பாரியின் நாடு இனிக்கெடும்.

இன்னகை மகளிர், நெடுவரை ஏறி, முன்பு அரசரின் குதிரையை எண்ணுவார். இன்று குப்பை மேட்டின்மீதேறி உமணர் உப்புவணடியின் சகடத்தை எண்ணுவர் இதற்கு நோவேன் யான். வள்ளல் பாரியை இழந்து வாழும் என் வாழ்நாள் கெடுவதாக.

(அதற்குள் அங்கவை ஓடிச்சென்று புலவரின் வாயைப் பொத்துகின்ருள்.)

அங்கவை : பெருமானே ! தாங்களும் எங்களைத் தவிக்கவிட்டுச் செல்ல என்னமோ ? (அழுகின்ருள்)

சங்கவை : அரசிழந்தோம் ! ஆருயிர்த் தந்தையை இழந்தோம் ! அனைத்தையும் இழந்தோம இன்று அருமை ஆசானுகிய தங்களையும் நாங்கள் இழக்க வேண்டுமா ? (கண் கலங்குகின்ருள்)

கபிலர் : அங்கவை ! சங்கவை ! ஆறுதல் பெறுக. (தனது கண்களைத் துடைத்துக்கொள்கின்ருர்.) பாரி இறந்தும் உடன் மாயாது நான் உயிர் வைத்துள்ளேன் என்ருல் அது உங்கள் இருவருக்காகத்தான். உரிய இடத்திலே உங்களைச் சேர்த்து விட்டுப் பிறகு பாரியின் நினைவை நெஞ்சில் நிறுத்தி வடக்கிருந்து உண்ணுது என் உயிரைப் போக்கிக்கொள்வேன்.

அங்கவை : (துயரம் மிக). நட்பின் இலக்கியமே! நல்லோரே! தாங்கள் எம் தந்தையார் பால் கொண்ட நட்பு வானைவிட விரிந்தது. கடலை விட ஆழ்ந்தது.

கபிலர் : அங்கவை! மனங் கலங்காதே!

சங்கவை. பெருந்தகையே! எமக்கும் உரிய இடம், எம் தந்தையாரை நினைத்து வடக்கிருத்தலே யாகும்.

கபிலர் : சங்கவை அவ்வாறு சொல்லாதே! நீவிர் இருவரும் மணம் முடித்து மனையறம் செய்ய வேண்டியவர் ... மன உறுதியை இழக்காதே! (சிறிது அமைதி) பெரும் பெயர்ப் பறம்பே! ஊனும் சோறும் விரும்பிய வண்ணமே தந்து எம்முடன் நட்புச் செய்தாய் ... முன்பு. இப்போது பாரி இறந்தான், கலங்குகிறோம், செயலற்றோம் ; நீர்வார் கண்ணோடையோம் ; நின்னைத் தொழுது வாழ்த்துகின்றோம். இம்மகளிரின் நாறிருங் கூந்தலைத் தீண்டுவதற்கு உரியாரை நினைந்தே செல்லுகின்றோம்.

(மூவரும் பறம்பு மலையை வணங்குகின்றனர். கண்ணீரைத் துடைத்துக்கொள்கின்றனர். அப்போது அடிவானத்தில் முழு நிலவு தோன்றுகின்றது. அக்காட்சியைக் கண்டதும் அங்கவை தேம்பி அழுகின்றாள்.)

கபிலர் : அங்கவை! ஏன் அழுகின்றாய் ?

சங்கவை : அந்த முழு நிலவின் தோற்றம் பழைய நினைவுகளைக் கிளறுகின்றது. (கண்ணீர் வழிய) எம் தந்தையார் இருந்தால் இந்நேரம் இதனைக்கண்டு எவ்வளவு மகிழ்ச்சி கொள்வார் அன்று இனிமை தந்த நிலவு இன்று துயர் தருகின்றது.

அங்கவை : (பெருமூச்சுடன்) அன்றைய திங்களின் வெண்மையான நிலாக்காலத்தே எம் தந்தையையும் உடையேம். எம்முடைய பறம்பு மலையையும் பிறர்கொள்ளார்.

சங்கவை : இன்றைய திங்களின் இந்த வெண்ணிலவினிலே, வெற்றியால் ஒலித்த முரசுடைய மூவேந்தர் எம்முடைய மலையையும் கொண்டார் ; யாம் எம்முடைய தந்தையையும் இழந்தோம்.

கபிலர் ; மனம் ஆறுதல் பெறுக. (மகளிர் இருவரும் மெதுவாகப் பாடுகின்றனர்)

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்கொளார் ;
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே!"

(பாடல் முடிந்ததும் அனைவரும் நீங்குகின்றனர்.)

—o— (காட்சி முடிவு) —o—

"செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்று

வித்துவான் மோ. இசரயேல், எம். ஏ. டிப். (செர்மன்),
தமிழ் ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

சொற்களை வாய்பாடுகளில் அமைத்துக் கூறுவது தமிழ் மொழி இலக்கண மரபில் தொன்று தொட்டே அமைந்த ஒரு வழக்காகும். தொல்காப்பியனார் கூறும் ஒன்பது வினையெச்ச வாய்பாடுகள், இரு பெயரெச்ச வாய்பாடுகள், "செய்யும்" என்னும் வினைமுற்று வாய்பாடு, செய்யாய், செய் ஆகிய வாய்பாடுகள், உரியியலில் சில வேர்ச் சொற்களைப்புலப்படுத்த அமைத்துள்ள தொழிற்பெயர் வாய்பாடுகள்[1] யாவும் இதற்குச் சான்று தந்து நிற்கின்றன. நன்னூலாரும் பலவகையான சொற்களை இவ்வாய்பாட்டு முறையிலே அமைத்துக் கூறி உள்ளார்[2]. இவற்றுள் யாம் இவண் விளக்க விழைவது தொல்காப்பியனாரும் நன்னூலாரும் குறிப்பிடும் "செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்றினையேயாம். அதனை விளக்க இலக்கண முறையிலும், பின்னர் வரலாற்று இலக்கண முறையிலும் ஆராய்வாம். அதனை ஆயுங்கால், அதனோடு தொடர்புபட்ட பிறசொற்கள், அதன் வடிவில் அல்லது வாய்பாட்டில் அமைந்த வேறுபட்ட சொற்கள் யாவற்றையும் கொணர்ந்து தெளிவாக்குதல் நன்மை பயக்கும்.

வினைமுற்றுக்கள்:

தமிழ் மொழியில் வினைமுற்றுக்கள் பெரும்பாலும்[3] வினையடியினின்று தோன்றி, காலம், இடம், எண் — பால் ஆகியவற்றைக் குறிக்கும் உருபன்கள் இணைக்கப்பெற்று முற்றுப்பெறுகின்றன. அவை பயனிலைகளாகப் பணியாற்றுகின்றன[4]. தொல்காப்பியனார் வினைக்குக் கூறும்,

> வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலைக் காலமொடு தோன்றும் (தொ. சொ. 198)

என்னும் இலக்கணம் பெற்று அமைகின்றன. அவை குறித்து பல்வேறு உறுப்புகளைத் தொல்காப்பியனார் பிறிதோர் இடத்தில் கூறி உள்ளார்[5]. முற்று வினைகளையும் எச்சவினைகளையும் தெளிவாக வேறுபடுத்துவது, முற்று வினைகளில் இடம், எண் — பால் அறிகிளவிகள் உண்மையும், அச்சொற்கள் எழுவாய் ஏற்றுப் பயனிலையாகப் பணி ஆற்றி நிற்கும் இயல்பும், எச்சவினைகளில் இடம், எண் — பால் அறிகிளவிகள் இன்மையும் அவை பிறிதோர் வினையினை அல்லது பெயரினைத் தழுவி நிற்கும் இயல்புமாம். சில இடங்களில் எச்சங்கள் கூட இடம், எண் — பால் அறிகிளவிகள் ஏற்று வருதலும் உண்டு[6]. எனவே மிகத்தெளிவான வேறுபாடு வினைமுற்றுக்கள் பயனிலை ஆதலும் எச்சங்கள் பெயர் வினைகளைத் தழுவி நிற்றலும் ஆம்.

"செய்யும்" வாய்பாட்டு வினைமுற்று.

இவ்வகையாம் வினைமுற்று வடிவிலும் (form) பயன் வகையிலும் (fuuction) தனிச் சிறப்புடையது வினைமுற்றுக்கள் இடம், எண் — பால் அறி உருபன்கள் (person and number-gender morphemes) ஏற்று வருதல் இயல்பு. ஆனால் "செய்யும்" வாய்பாட்டு வினைமுற்றுக்களில் இவற்றைக் காண முடியாது. இவ்வாய்பாடு செய்+உம் எனப் பிரிக்கப்படினும் "உம்" இடம், எண் — பால் குறிக்கும் உருபன் ஆவதில்லை. ஏனெனில் தொல்காப்பியர் இதனை இரு திணைப் பொது வினைக் (விரவு வினைக்) குழுவில் அடக்கி உள்ளார்[7] மேலும் அது பல பால்களுக்குப் பொதுவானது என்பதை

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா (தொ. சொ. 227)

என்னும் நூற்பாவால் அறிதும், எனவே "உம்" எந்தத் தனிப்பட்ட பாலையும் குறித்து நிற்றல் இயலாது என்பது தெளிவு. மேற்கண்ட நூற்பாவில் தொல்காப்பியனாரே இது தன்மை, முன்னிலை ஆகிய இடங்களிலும் படர்க்கை பலர் பாலிலும் வழங்காது என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றார். நன்னூலார் தொல்காப்பியனாரையே பின்பற்றி

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே (நன். 348)

என்று கூறி உள்ளார். எனவே அன்னார் காலங்களில் "செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்று பின்வருமாறு வழங்கி இருத்தல் வேண்டும்.

அவன் உண்ணும்
அவள் உண்ணும்
அது உண்ணும்
அவை உண்ணும்

காலம்.

ஆனால் இருவர் கூற்றினுள்ளும் வேறுபாடு ஒன்று உள்ளது. தொல்காப்பியனார் "நிகழுங்காலத்துச் செய்யுமென் கிளவி"[8] என்று குறிப்பிடுவதினின்று அது நிகழ்காலம் காட்டிற்று என்பது தெளிவு. நன்னூலார் இதன் வழக்கு இடங்களை வரையறுக்கும் நூற்பாவின்கண் காலத்தைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. ஆனால் பிறிதோரிடத்தில் "செய்யும் நிகழ்பெதிர்வும்"[9] எனக்குறிப்பிட்டு அது குறித்து வழங்கும் காலத்தைத் தெளிவுபடுத்தி உள்ளார். தொல்காப்பியனார் காலத்தில் "செய்யும்" என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் நிகழ்வு, எதிர்வு ஆகிய இரு காலங்களுக்கும் பொதுவானது என்பது தெளிவு, ஏனெனில் செய்த, செய்யும் என்னும்

இரு வாய்பாடுகளிலேயே அவர் பெயரெச்சத்தைக் குறித்துள்ளார்; ஆனால் நன்னூலார் செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் மூன்று வாய்பாடுகளைத் தருகின்றமையான்[12] "செய்யும்" என்னும் எச்சம் நிகழ்வு, எதிர்வு ஆகிய இருகாலங்களைக் காட்டுகின்றதாக குறிப்பிடத் தேவை இல்லை. எனவே நன்னூலார் குறிப்பிட்டிருக்கும் "செய்யும் நிகழ்பெதிர்வும்" என்னும் தொடர் அவ்வாய்பாட்டு வினைமுற்றுக்களின் காலத்தையே விளக்கி நிற்கின்றது என்பது தெளிவு.

தொல்காப்பியனார் நிகழ்காலத்து என்று குறிப்பிடும் "செய்யும்" வாய்பாட்டு வினைமுற்று நன்னூலார் காலத்தில் எதிர்காலத்தையும் குறித்தது. தொல்காப்பியனார் காலத்திங் இவ்வாய்பாட்டு வினைமுற்றுக்களைத் தவிர நனனூலார் கூறும் "ஆநின்று, கிறு, கின்று" என்ற நிகழ்கால இடைநிலைகள்[11] அடைந்த வினைமுற்றுக்கள் எச்சங்கள் தோன்றவில்லை. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூற்களிலும் நன்னூலார் குறிப்பிடும் நிகழ்கால வடிவங்கள் பெரும்பாலும் வழங்கவில்லை எனலாம்[12] சங்ககாலத்தில் நிகழ்காலத்தைக் குறிக்க வேறுபட்ட சொல் வடிவங்களும், எதிர்காலத்தைக் குறிக்க வேறுபட்ட சொல் வடிவங்களும் வழங்கி உள்ளன. நிகழ்காலத்தில் மட்டும் எத்தகைய சொல் வரிவடிவங்கள் வழங்கின என்று தெளிவாக அறிதற்கில்லை "செய்யும்" வாய்பாட்டு வினைமுற்றுக்கள் தான் வழங்கி இருத்தல் வேண்டும் என்று கருத இடமுண்டு. ஆனால் அவை சங்க இலக்கிய வழக்கில் பெரும்பாலும் எதிர்காலப் பொருளையே தந்து நிற்கின்றன. எனவே நிகழ் காலம் என்று ஒன்று அக்காலத்தில் இல்லையா எனின், உண்டு - தொல்காப்பியனார் "காலந்தாமே மூன்றென மொழிப" என்றும் இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற................ "என்றும்[13] குறிப்பிடுவன மூன்று காலங்கள் உண்மையைத் தெளிவுபடுத்துகின்றன. இவண் காலஞ்சென்ற சிவராச பிள்ளை அவர்கள் பண்டைத் தமிழில் காலம் பற்றிக் கூறியுள்ளது கவனித்தற்பாற்று." நுணுகி ஆராய்ந்து பார்க்கின், காலம் எல்லாம் இறப்பு, எதிர்வு என்னும் இரு கூறுபாட்டினுள் அமையக் காண்கிறோம. "காலம்" நிலைத்து நில்லாது எஞ்ஞான்றும ஓர் நதிபோலப் பாய்ந்து செல்லுவதாதலின் அதன் நடுவண் நிகழ்வெனும் ஒரு சிறு கோட்டை நீக்கின் அக்கோட்டின் முன்னுள்ள வெல்லாம இறப்பின்பாலும், பின்னுள்ள வெல்லாம் எதிர்வின்பாலும் சென்று அடங்கி விடும். இறப்பு எதிர்வுகளால் நெருக்குண்டு நிகழ்வாய காலம் தன் பரிமாணம் அறவே குறுகி மாய்ந்துபோகக் காண்கிறோம்.

இறந்த காலம் எதிர்காலம் போலத் தமிழில் நிகழ்காலம் அத்துணை வந்து பயிலாமைக்கு இவ்வுண்மையே அடிப்படையாய காரணமா

விருக்கலாம்"[14] இக்கூற்று தொல்காப்பியனார் கால வழக்கினையும் சங்க கால வழக்கினையும் மிகத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. எனவே பழங்காலத் தமிழில் இறப்பு, இறப்பின்மை (past and nonpast) என இரண்டு கால வேறுபாடுகள்தான் தெளிவாக அமைந்திருந்தன. தொல்காப்பியனார் "செய்யும்" நிகழ்காலங் குறிக்கும் எனக் கூறி இருப்பினும் நிகழ்காலத்தில் வழங்க தன்மை, முன்னிலை இடங்களிலும், படர்க்கை பலர்பாலிலும் வினைவடிவங்கள் தராமையும் இவ்வுண்மைக்கு அரண் செய்யும் சான்றுகளாக அமைகின்றன. மேலும் ஒரிசா மாநிலத்தின் கொரபுட் என்னும் மாவட்டத்தில் இன்றும் பேசப்படும் திராவிட மொழிகளில் ஒன்றான ஒல்லாரி மொழியில் நிகழ்வு எதிர்வு ஆகிய இரு காலங்களைக் குறிக்கவும் ஒரே வினைச்சொல் வேறுபாடுகள் (verbal conjugation) தான் அமைந்துள்ளமையும் நோக்குங்கால் இந்த அமைப்பு மிகப் பழங் காலத் திராவிட மொழி இயல்பின் நிலைபேறே (retention) எனக் கருதவும் இடம் உண்டு.[15] இவற்றோடு தொல்காப்பியனார் நிகழ்வு எதிர்வு ஆகிய இரு காலங்களுக்கும் "செய்யும்" என்னும்[16] ஒரே வாய்பாட்டுப் பெயரெச்சத்தைக் குறிப்பிட்டிருப்பதும் கருதத்தக்கது.

"செய்யும்" என்னும் வினைமுற்று நிகழ்காலத்து வழங்கும் என்று குறிப்பிட்ட தொல்காப்பியனார் மூன்று காலங்களுக்கும் உளதாம் இயல்பையுடைய எல்லாப் பொருளையும் நிகழ்கால வினையாற் கூறவேண்டும் என்கிறார்.[17] இதற்கு உரையாசிரியர்கள்

மலை நிற்கும்; திங்கள் இயங்கும்

என்பன போன்ற எடுத்துக்காட்டுகளைத் தருகின்றனர். மேலும் தொல்காப்பியனார் மிககதன்கண் நிகழும் வினையின் பயன் கூறுங் கால், அம்மிக்கதனது பண்பு குறித்துவரும் வினைமுதல் இல்லாத விடத்து நிகழ்காலத்தான் கூறப்பட வேண்டும் என்கிறார்[18]

எ—டு :- தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும்.
தாயைக்கொன்றான், நிரயம் புகும்.

இவைபோன்ற வழக்குகள் யாவும் "செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள் காலங்காட்டுவதில் நிகழ்காலத்திற்கு மட்டும் உறுதிப்படுத்தப்பட்டன வல்ல என்பதைத் தெளிவு செய்து நிற்பன வாகும்.

எனவே, "உக்" தொல்காப்பியனார் காலத்தில் நிகழ்காலத்தை மிகுதியாக்குறித்தது எனவும், சங்க இலக்கிய காலத்தில் அது. எதிர்காலத்தையும் குறிப்பதாயிற்று என்பதும் தெளிவு. சங்ககாலத் திற்குப் பிற்பாடு நிகழ்காலத்திற்கெனத் தனிப்பட்ட வினை வேறுபாட்டு வடிவங்கள் தோன்றவே "உம்" பெரும்பான்மையும் எதிர்காலத்தை உணர்த்திச் சிறுபான்மை நிகழ்காலம் உணர்த்த லாயிற்று. எனவேதான் நன்னூலார் "செய்யும் நிகழ்பெதிர்வும்" என்று குறிப்பிட்டார். இன்றையத் தமிழில் "உம்" இடைச்சொல்

(அது வரும், அவை-வரும்) போன்ற எடுத்துக்காட்டுகளில் எதிர் காலத்தை மட்டும் குறித்து வழங்குகின்றன.

வடிவம்

தொல்காப்பியனுர் "செய்யும்" என்னும் பெயரெச்சத்தின் ஈற்று உகரம் மெய்யொடு கெட்டுவிடும் என்கிருர் 19 அவர் "செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்று அடையும் மாற்றங்களைக் குறிப்பிட்டிலர். ஆனுல் சேனுவரையர் "செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு ஈற்றுமிசையுகாரம் மெய்யொடுங் கெடுமெனவே "செய்யும்" என்னும் முற்றுச் சொற்கு ஈற்று மிசை உகரம் மெய்யொடுங் கெடும், மெய்யொழித்துங் கெடும் என்கின்ருர். பிற்கால இலக்கண ஆசிரியரான நன்னூலாரும்

செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளு ளும்முந் தாகலும் முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே (நன். 341)

என்னும் நூற்பாவில் "செய்யும்" என்னும் வினைமுற்றின் ஈற்று உயிர் அல்லது உயிர்மெய் கெட்டுப்போதல் உண்டு என்பதைத் தெளிவுபடுத்தி உள்ளார்

எ—கு சென்ம் (புறம், 137)	போன்ம் (புறம், 19)	உயிர் கெட்டது
கூம் (புறம், 4)	ஆம் (புறம், 134)	உயிர் மெய் கெட்டது.

இங்ஙனம் உகரம் கெடுங்கால் மகரம் மட்டும் காலம் உணர்த்து கின்றது. எனவே உம / ம் காலக்குறியீடு ஆகும்.

"செய்யும்" வினை முற்றினின்று தோன்றிய பிறசொற்கள்

1. கொய்யுமோன் (புறம், 225), அறியுமோன் (புறம், 137) போன்ற சொற்கள்

கொய் + உம் + ஓ — ன்
கொய்யும் + ஒன்
கொய்யுமோன்

இவற்றின்கண் "உம்" பெரும்பாலும் எதிர்காலங்காட்டுகிறது என்றுதான் கருத முடிகிறது; ஓ ட ஆ (தொ. சொ. 211)

2. கொண்மார், தோன்மார் (நற். 208) போன்ற மாரீற்றுச் சொற்கள். மாரீற்று வினைச் சொற்கள் சங்க இலக்கியங்களில் பெரும் பாலும் வினையெச்சங்களாகவே செயலாற்றுகின்றன. ஒரு சில இடங்களில் மட்டும் வினைமுற்ருக வழங்குகின்றன. திரு. இளைய பெருமாள் அவர்கள் இவற்றின் இத்தகைய வேறுபட்ட பயன்

வகைகளை விளக்கிக் கட்டுரை ஒன்று வரைந்துள்ளார்கள்[20] அக்கட்டுரையின்கண் அன்னார் இச்சொற்கள் "செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைகளினின்று ஆக்கப்பட்டிருத்தலையும் பகுத்து விளக்கித்தெளிவு படுத்துகின்றனர். மாரீற்றுச்சொற்களைப் பின்வருமாறு பிரிக்கலாம்

கொள் + உம் + ஆ—ர்
கொள்ளும் + ஆர்
கொண்ம் + ஆர்
கொண்மார்

3. என்மனூர் (தொ. எழு. 6, 33, 53, 131, 147, 159, 179, 223 273, 284, 289, 332, 334, 345, 370, 414, 433, 474 478, 483)

தொல்காப்பியனாரே இச்சொல்லைப் பலமுறை ஆண்டுள்ளார். இதனைப் பிரித்துக்காட்டுவதில் உரையாசிரியர்கள் பெரிதும் இடர்ப்படுகின்றனர். இவண் இதனைப் பிரித்துக்காட்டுதும

என் + உம் + அன் + ஆர்
என்னும் + அன் + ஆர்
என்ம் + அன் + ஆர்
என்மனார்

4. உண்மீர் (பதிற். 24), கொண்மர் (பத்துப்பாட்டு 6. 514) போன்ற சொற்கள்

உண் + உம் + அ—ர்
உண்ணும் + அர்
உண்ம் + அர்
உண்மர்

5. காணுமோர் (பதிற். 83), பாடுமோர் (புறம். 197) போன்ற சொற்கள்

காண் + உம் + ஓ—ர்
காணும் + ஓர்
காணுமோர்

பல்லோர் படர்க்கையில் "செய்யும்" என்னும் வினைமுற்று வராது என்பது இலக்கண நூலார்க்கொள்கை. இலக்கியங்களிலும் அது பல்லோர் படர்க்கையில் வழங்குதலைக் காணமுடியாது. ஆனால் மேற்காட்டப்பட்டவை "செய்யும்' என்னும் வாய்பாட்டு வடிவமே இடம், பால்-எண் உருபன்களை ஏற்றுப் பலர்பாலில் வழங்குவதாகும் இத்தகைய வழக்கினைச் சங்க இலக்கியங்களில் பல இடங்களிலும் காணுதல் இயலும்.

மாரீற்றிலுள்ள மகரம் தன்மைப் பன்மைப் பெயர்களான நாம், யாம், எம்; வினை விகுதிகளானதும், நும், றும், கும், டும் என்பவைகளில் உள்ளவைபோல பன்மைகுறிப்பது என்று யூலியன் வின்சன் கருவதை டாக்டர் சுப்பிரமணிய சாத்திரி அவர்களும் ஒப்புக் கொள்ளுகிறுர்கள் 21 இது பொருத்தமாகத் தோன்றவில்லே. ஏனெனில் பன்மை குறிக்கும் உறுப்பு இறுதியில் உள்ளது மேலும் "உம் / ம்" செய்யுமோன் போன்ற ஒருமைச் சொற்களிலும் உள்ளது. அதோடு மகரம் பன்மை குறிப்பதாயின் மாரீற்று வினைச் சொற்களில் காலங்காட்ட வேறு உருபன் இல்லாது போய் விடுகின்றது.

மாரீற்றுச் சொற்களில் உள்ள மகரம் எதிர்காலம் குறிப்பதே யாகும். இதனை உரையாசிரியர் சேனுவரையர் மறுக்கிருர். அவர் எழுதுவன பின் வருமாறு "மார் எதிர்காலம் பற்றி வந்த ஆரேயாம், ரஃகான் ஒற்றென அடங்குமெனின்" அற்றன்று, ஆரேயாயின் கொண்மார் என்புழி மகரம் காலம் பற்றி வந்ததோர் எழுத்தாதல் வேண்டும்; உண்பார் வருவார் எனக் காலம் பற்றி வரும் எழுத்து முதனிலைக் கேற்ற வாற்ருன் வேறுபட்டு வருமன்றே; அவ்வாறன்றி உண்மார், வருமார் என எல்லா முதனிலை மேலும் மகரத்தோடு கூடி வருதலாலும், வினைகொண்டு முடிதற்கேற்பதோர் பொருள் வேறுபாடுடைமையானும் ஆர் ஈறு அன்று வேறெனவே படும்" 22 சேனுவரையர் கூற்றுக்கு எளிதில் விடையிறுத்தல் இயலும். முதலாவது, மாரீற்றுச் சொற்கள் எதிர்காலத்தின் கண்ணேதான் சங்க இலக்கியங்களில் வழங்குகின்றன. இரண்டாவது, காலவெழுத்து முதனிலைக்கேற்றவாற்ருன் வேறுபட்டுவரும் என்பது முற்றிலும் பொருந்தாது என்பதைப் பின் வரும் எடுத்துக் காட்டுகள் தெளிவு படுத்தும்

1.	கூறுப (கலி. 144)	கூறுவ (கலி. 146)
2.	ஆகுப (குறு. 7)	ஆகுவ (புறம், 104)
3.	உகுப (கலி 48,11)	உகுவ (குறு. 282)

6. செய்யுந்து, ஒலிக்குந்து (புறம், 137), நிலக்குந்து (புறம், 386) போன்ற சொற்கள்

செய் + உம் + து
செய்யும் + து
செய்யுந்து.

தொல்காப்பியனுர் "உம்முந்தாகு மிடனுமா ருண்டே" (தொ. சொ. 262) என இடையியலுள் கூறி உள்ளார். சேனுவரையரும் நச்சினுர்க்கினியரும் பெயரெச்சத்தின் கண் வரும் "உம்" எனக் கருதுகின்றனர், நன்னூலாரும் "செய்யும்" என்னும் பெயரெச்சத்தின் ஈற்று "உம்" உந்து எனத் திரிகிறதாகக் கருதுகிருர். 23 ஆனல் சங்க இலக்கியங்களில் பெயரெச்சத்தின் இறுதி "உந்து"

எனத் திரிதற்கு எடுத்துக்காட்டுகள் ஒன்றும் காணப்பெறவில்லை. வினைமுற்றுக்களே " உந்து " என்னும் ஈற்றுடன் அமைந்துள்ளன. காலஞ்சென்ற வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள் இது தொடர்பாகக்கொண்ட ஆராய்ச்சி முடிவுகள் இங்கு நோக்கும் பான்மையன "எண்ணுப்பொருளில் வரும் "உம்" உந்து ஆகும் என்பது தெளியப்படும். செய்யும் என்னும் முற்றுச் சொல்லோடு துவ்விகுதி மட்டும் கூடிவந்தசொல்லே செய்யுந்து என்றாயிற்று என்பது போதரும்" [24]

" உம் " என்பதனோடு துவ்விகுதி இணைந்து செய்யுந்து வாய்பாட்டில் அமைந்துள்ள வினைமுற்றுக்கள் ஆக்கப்பட்டுள்ளன என்பது தெளிவான உண்மை. தொல்காப்பியனார் " உம் " உந்து என்று ஆகும் என்று குறிப்பிடும் நூற்பாவை " செய்யும் " என்னும் வாய்ப்பாடடு வினைமுற்றைப் பற்றிக் கூறும் நூற்பாவை அடுத்து வைக்காமல் இடையியலுள் எண்ணும்மைகளை அடுத்து வைத்திருப்பதால்தான் வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள் எண்ணுப் பொருளில் வரும் வழியே " உம் " உந்து ஆகும் எனக்கருதுகின்றார். இக்கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட இன்னும் பல ஆய்வுகள் தேவையாகும். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் செய்யுந்து என்பதனை செய்யுன் + து எனப்பிரித்தல் வேண்டுமெனக் கருதுகிறார்கள். [25]

7. செய்ம்மன (தொ. சொ. 222; தொ. எழு. 210), இசைக்குமன (தொ. சொ. 1,) போன்ற சொற்கள்

செய் + உம் + அன் + அ
செய்யும் + அன் + அ
செய்ம் + அன் + அ
செய்ம்மன

இச்சொல்லை வகை செய்வதிலும், இதன் உறுப்புக்களைக் கண்டு கொள்ளுவதிலும் உரையாசிரியர்கள் பெரும் இடர்ப்பாடு அடைகின்றனர். தெய்வச்சிலையார் ' செய்ம்மன" என்பதை விளக்குங்கால், "இது இக்காலத்துச் செய்வது, செய்வன, செய்பவை, செய்யுமவை என வழங்கும்போலும்" எனக் கூறுவதினின்று "செய்ம்மன" வாய்பாட்டு வினைச்சொற்கள் வழக்கில் பெயராகப் பணியாற்றின என்பது தெளிவாகின்றது. பெயராக வழங்கின் மட்டுமே தொல்காப்பியனார் கூறுகின்றவண்ணம் இருதிணைக்கும்பொது பயனிலையாக வழங்குதல் இயலும். வினையாக வழங்கின் இது அஃறிணையும் பன்மையில் மட்டுமே வழங்குதல் இயலும்.

எனவே "செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்று குறிப்பிட்ட எண்-பால் அறிகிளவிகளை ஏற்று (திணைபால் விகுதிகளைப் பெற்று), செய்யுமோன், செய்ம்மார், செய்மனர், செய்மர், செய்யுமோர், செய்யுந்து, செய்ம்மன எனத் தன் எல்லையைக் குறிப்பிட்ட ஒருபாலுக் குரியதாக வரையறுத்துக் கொள்ளுதல் உண்டு. இத்

தலைய அமைப்புகள் யாவும் எதிர்காலங் காட்டுகின்றனவென்று பேராசிரியர் எல். வி. இராமசாமி ஐயர் அவர்களும் கருதுகின்றனர்.[26]

"செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்றும், பெயரெச்சமும்

தொல்காப்பியனார் 'செய்யும்" என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தையும் பொது வினைகளுள் அடக்கி உள்ளார். பெயரெச்சம பெயரைக்கொண்டு முடியும்.[27] ஆனால் வினைமுற்று பயனிலையாகச் செயலாற்றும். மேலும் "செய்யும" என னும் வினைமுற்றிற்குக் குறிக்கப்பட்டது போன்ற வரையறைகள் "செய்யும்" என்னும் பெயரெச்சத்திற்குக் கிடையாது.[28] அது எல்லா இடங்களிலும் பால்களிலும் வழங்கும்.

எ-டு.

வினைமுற்று	பெயர் எச்சம்
அவன் உண்ணும்	யான் உண்ணும் ஊண்
அவள் உண்ணும்	யாம் உண்ணும் ஊண்
அது உண்ணும்	நீ உண்ணும ஊண்
அவை உண்ணும்	நீயிர் உண்ணும் ஊண்
	அவன் உண்ணும் ஊண்
	அவள் உண்ணும் ஊண்
	அவர் உண்ணும் ஊண்
	அது உண்ணும் ஊண்
	அவை உண்ணும் ஊண்

"செய்யும்" என்னும் வினைமுற்றும் ஏவலும்

தற்காலத்தில் உண்ணும், வாரும், செய்யும் என்பன போன்ற சொற்கள் உயர்வு ஒருமை (honorific singular) ஏவலாகப் பேச்சுத் தமிழில் வழங்குகின்றன தொல்காப்பியனார் செய்யுர்/செய்ம் என்னும் வாய்பாட்டில் ஏவலைக் குறிப்பிடவில்லை. அவர் ஏவலை முன்னிலை வினையினின்று பிரித்து விளக்கவும் இல்லை. —மின் விகுதி ஏவலின்கண் மட்டுந்தான் வழங்கினும அவர் ஏவல் எனக் குறிப்பிடவில்லை.[29] ஆனல் நன்னூலார் "மின் அவற்றேவல்" என்று குறிப்பிட்டுள்ளார்.[30]

செய்யும்/செய்ம் என்னும் வாய்பாட்டு ஏவற் சொற்களும், அவற்றுடன் அசைச்சொல் இணைந்த சிறிது வேறுபட்ட வடிவங்களும்[31] சங்க இலக்கியங்களில் பன்மை ஏவலாக அல்லது உயர்வு ஒருமை ஏவலாக வழங்குகின்றன. இவைகள் முன்னர் யாம் விளக்கிய "செய்யும்" வாய்பாட்டு முனைமுற்றினின்று முற்றிலும் வேறுபட்டவை. அவற்றேடு ஏவலில் வழங்கும் பன்மைச் சொற்களையும் சேர்த்து ஒரே தன்மையினவாகக் கருதி மயக்கமடையாத

படி ஏவலின் சொல்வடிவங்களையும் இவண் தருதும், இவை முன்னிலையில் மட்டும், பன்மையில் அல்லது உயர்வு ஒருமையில் வழங்கும்

வாரும் (பரி. 14)	கொண்ம் (புறம், 152)
	செய்ம் (புறம், 46)
	வம் (புறம், 180)
	களம் (புறம், 145)
சேர்மின் (புறம், 32)	சேர் — ம் + இன்
கேண்மியா	கேள் — ம் + யா
மொழிமோ (குறு. 2)	மொழி — ம் + ஓ
செய்ம்மே (புறம், 46)	செய் — ம் + ஏ

இங்கு தரப்பட்டிருக்கும் சொற்களின் அடிப்படை வேறு; முன்னர் விளக்கப்பட்ட "செய்யும்" என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்களின் அடிப்படை வேறு. இவண் தரப்பட்டிருக்கும் ஏவல் வினைகளில் உள்ள "உம்/ம்" விகுதி முன்னிலைப்பன்மை அல்லது முன்னிலை உயர்வு ஒருமை ஏவலைக் குறிப்பதாகும். ஆனால் முன்னவற்றில் "உம்/ம்" விகுதி காலக்குறியீடு என்று முன்னமே விளக்கப்பட்டது. டாக்டர். மு. வரதராசனார் அவர்கள் இவற்றின் வேறுபாட்டை மிகத் தெளிவாகப் பகுத்து உணர்த்தி உள்ளார்கள்.[32] ஏவல் எதிர்காலத்தின்கண்ணே நிகழ்தல் இயல்பாதலின் இங்கு "உம்/ம்" கால உணர்த்தவேண்டிய இன்றியமையாமை இல்லை. ஆனால் டாக்டர் கால்டுவெல் இவை எதிர்காலத்தின் மீது கட்டப்பட்டிருப்பதாகக் கருதுகின்றார்.[33]

இலக்கண நூலார் தருகின்ற மியா, மோ, மின் போன்ற வடிவங்கள்[34] தவறான பிரிப்பினால் (wrong segmentation) அடையப்பெற்றனவேயாகும்.

வரலாற்றுப்போக்கில் " செய்யும் " வாய்பாட்டு வினைமுற்று.

தொல்காப்பியனார் காலத்தில் " செய்யும் " என்னும் வினைமுற்று ஆண், பெண், ஒன்றன், பலவின்பால் ஆகிய பால்களில் மட்டும் வழங்கி நிகழ்காலத்தைக் குறித்துநின்றது. முக்காலத்தும் ஒத்தியல் பொருளைச் செப்பவும் பயன்பட்டது. அக்காலத்திலே அவ்வாய்பாட்டு முற்றுக்கள் பல இடம், எண்-பால் உருபன்களை ஏற்றுத் தம்மைக் குறிப்பிட்ட இடம், பால்களுக்கு வரையறை செய்து கொள்ளத் தொடங்கின என்று கருத, முன்னர்க் காட்டப்பட்டிருக்கும் சொற்கள் இடந்தருகின்றன. அவ்வாறு இடம், பால்களுக்குத் தம்மை வரையறை செய்துகொண்ட முற்றுக்கள் பெரும்பாலும் எதிர் காலங் குறித்து வழங்கின என்பதற்குத் தொல்காப்பியத்தில் கிடைக்கும் சான்றுகளும், சங்க இலக்கியச் சான்றுகளும் உறுதி யளிக்கின்றன, சங்க இலக்கியங்களில் " செய்யும் " என்னும் வினைமுற்றுக்கள் பெரும்பாலும் எதிர்காலத்தின் கண்ணேதான்

வழங்கப்பெறுகின்றன. காலஞ்செல்லச் செல்ல அவற்றின் வழக்கு நிகழ்காலத்தைவிட எதிர்காலத்தில் செல்வாக்கு பெற்றுவிட்டது. நிகழ்காலத்தில் "கிறு, கின்று, ஆநின்று" போன்ற இடைநிலைகள் அமைந்த சொல் வடிவங்கள் தோன்றலாயின' எனவேதான் கி. பி. 12-ம் நூற்றாண்டினராகக் கருதப்படும நன்னூலார் "செய்யும் நிகழ் பெதிர்வும்" எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் காலத்தில் இவ்வாய் பாட்டு முற்றுகள் எதிர்காலத்தின்கண் மட்டுந்தான் பயின்றிருக்க வேண்டும் என்னும் அவர் தம் முதனூலாம் தொல்காப்பியத்தைக் கவனித்தும், சங்க இலக்கியங்களில் நிகழ்காலத்தில் வழங்க வேறு சொல் வடிவங்கள் இல்லாக் குறையினைக்கண்டும் அதனை நிகழ் காலத்துக்கும் உரியதாகக் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்று கருத அவர் கால இலக்கியச் சான்றுகள் இடந்தருகின்றன.

தற்காலத் தமிழில் இவை ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய வற்றில் மட்டும், அதுவும் எதிர்காலத்தில்தான் வழங்குகின்றது [35]

எ—டு அது வரும் : அவை வரும்.

சில இடங்களில் பேச்சு வழக்கில் பயிலும் அண்ணன் வரும், அக்காள் வரும், அப்பாவும் அம்மாவும் வரும் போன்ற வழக்குகள் தற்காலத்தில் இலக்கணத் தவறுடையனவாகக் கடியப்படுகின்றன.

முடிவுரை : இக்கட்டுரை பண்டைக்காலத்தில் இறப்பு. இறப் பன்மை ஆகிய இருகாலப் பிரிவுகள்தான் தமிழ் மொழியில சிறப்பிடம் பெற்றிருக்கவேண்டும் என்பதையும், "செய்யும்" என்னும் வாய் பாட்டு வினைமுற்று "செய்யும்" வாய்பாட்டுப் பெயரெச்சம், ஏவல் வினைமுற்று ஆகியவற்றில் நின்று வேறுபட்டது என்பதையும். "செய்யும்,' வாய்பாட்டு வினைமுற்றினின்று தோன்றிய பிறசொல் வடிவங்களையும், அவ்வாய்பாட்டு வினைமுற்று காலப்போக்கில் அடைந்துள்ள வழக்கு வேறுபாடுகளையும், விளக்குவதோடு பண் டைக் காலத்தில் மேற்கொண்டுள்ள பல பிறழ்பிரிப்புகளை உணர்ந்து கொண்டு திருத்தம் செய்யவும் வழிகாட்டுகின்றது.

அடிக்குறிப்புகள் :

1. தொல்-சொல், 222, 227, 228, 450.

உரியியல் :

1. தொல்-சொல், 315, 316, 311, 317, 318, 319, 330, 333, 342, 347, 350, 358, 359, 361, 374 முதலியன
2. நன்னூல், 135, 138, 340, 343.
3. சிறுபான்மையான குறைவினைகள் (குறிப்பு வினைகள்) வினை யல்லாத பிற அடிகளினின்று தோன்றுதல் உண்டு.

   எ-டு அல்லன், இலன், உடையன் என்பன போன்றன

4. தொல்-சொல். 66.

5. ,, 112.

6. உண்பான், வந்தான், கொண்மார் வந்தார், கொள்வான் வந்தான் போன்றவை எடுத்துக்காட்டுகளாகும். இவை போன்றனவற்றை நன்னூலார் முற்றெச்சம் (நன்—351) என்பர்.

7. தொல்-சொல், 222.

8. ,, 227.

9. நன்னூல், 145.

10. ,, 340.

11. ,, 143.

12 ஆனால், "சேர்கின்ற" என்ற ஒரு வினையெச்ச வடிவம் பரிபாடலில் (22) காணப்படுகிறது

13. தொல்-சொல். 199, 200

14. சிவராச பிள்ளை, கே. என்., 'உந்து' என்னும் இடைச்சொற் பிரயோகம் அல்லது புறநானூற்றின் பழமை (1929), பக்கம்–47, 48.

15. Bhattacharya., S., Ollari A Dravidian Speech (1956) P. 33

16. தொல், சொல், 222, 234

17. தொ. சொல், 240

18. ,, 242

19. ,, 238

20. Elayaperumal, M., "The Mar Suffix in Early Tamil Literature" Indian Luiguistics Ralph Turner Volume I, 177–181.

21. Dr. Subrahmanya Sastri, P S., History of Grammatical Theories in Tamil and Their Relation to The Grammatical Literature in Sanskrit (1934), P. 162.

22 சேனாவரையர், தொல்காப்பியம் சொல்லதிகார உரை, பக். 8.

23. நன்னூல், 341.

24. வேங்கடராசுலு ரெட்டியார், வி., பரணர், பக் 195, 197.

25. Prof. Meenakshisundaram, T. P. A History of the Tamil Language (in print), P. 92.

26. Prof. Ramaswami Aiyar, L. V., "The Morphology of the Old Tamil Verb" Anthropos 33 (1938), 747-781.

27. தொல். சொல். 234, 433, நன்னூல் 340.

28. தொ. சொல், 235

29. தொல். சொல். 224

30. நன்னூல். 337.

31. இவண் குறிப்பிடுவன யாவும் "செய்யும்" வாய்பாட்டு ஏவலை அடிப்படையாகக் கொண்டவைகளையேயாம.

32. டாக்டர். வரதராசனார், மு., மொழி இயற் கட்டுரைகள் (1954) பக். 215–252.

Vide The Grammatical Structure of Dravidian Languages (1954), pp. 57, 58—Jules Bloch.

33. Dr. Caldwell, R., A Comparative Grammar of Dravidian Languages (3rd. ed., 1956) P. 533.

34. தொல். சொல், 274, 224, 451; தொல். எழு. 34, 224 நன்னூல் 440, 336, 337

35. பண்டைத் தமிழில் உம்/ம் காலக்குறியீடாக வழங்கிய இடங்களில் தற்காலத்தில் வ்/ப் வழங்குதல் காணத்தகுந்தது.

எ–டு	பண்டைத் தமிழ்	தற்காலத் தமிழ்
	உண்மார்	உண்பார்
	கொண்மார்	கொள்வார்
	என்மர்	என்பர்
	காணுமோர்	காண்போர்
	கொய்யுமோன்	கொய்வோன்

இவற்றோடு டாக்டர். மு. வரதராசனார் "வ், ப் என்ற இரண்டும் உம் என்னும் இடைச்சொல்லின் திரிபே" என்று கூறுவதும் ஒப்பு நோக்குந்தன்மையது. மொழி நூல் பக். 215.

—

கண்ணகி

புலவர் ந. செகதீசன். (ஈரோடு)

தமிழ்த்தாய் வணக்கம்.

இசைகொண்ட இன்றமிழே!. இறப்பில்லாத
இலககியங்கள் இலக்கணங்கள் பூண்டு, கல்விப்
பசைகொண்ட கவிஞருளக் கிளையைத்தொத்திப்
பாடுகின்ற மணிக்குயிலே!. ஆடுந்தோகாய்!.
திசைகொண்ட உலகனைத்தும் இருண்டிருந்த
தினமுதலாய் இங்குமிளிர் விளக்காய் நிற்போய்!
நசைகொண்ட உளத்துடனே உன்தாள் போற்றும்
நான் சிறியன்!. வணங்குகின்றேன்!. வாழ்த்து, தாயே!. 1

கவிஞர்க்கு

பயன் இனிமை இரண்டுமுருள் சக்க ரங்கள்!
படரோசை பாய்ந்துசெலும் பரிமா! அந்த
வயக்குதிரைக் குணர்ச்சிநெடுஞ் சாட்டை! தேரின்
வண்ணந்தான் கற்பனை! சீர் எதுகை மோனை
வியப்பளித்து மின்னுகின்ற தோர ணங்கள்!
விரிந்திருக்கும் நெஞ்சத்தேர் செல்லும் வீதி!
நயமாக அப்பாட்டுத் தேரை ஓட்டும்
நண்பர்காள்! சாரதிகாள்! வணக்கம் ஏற்பீர்! 2

வருபொருள்

உலகனைத்தின் அழகனைத்தும் பார்ப்போம் என்றே
உளம்நினைத்தோர் பலநாட்கள் அலைய வேண்டா!
நலன்குலைய நான்குதிசை சென்ற லுத்து
நலிவுற்றுப் பணமிறைத்து வாட வேண்டா!
கலன்களெலாம் வந்துவந்து தீவுகள்போல்
கடல்கடந்து வியப்புற்றுக் காண நல்ல
புலன்வல்லோர் புகழ்வதற்கு முடியா தேங்கும்
புகார்நகரை மட்டுமவர் பார்த்தால் போதும்! 3

பொன்னகரம்! புதுநகரம்! வருவாய் வந்து
பொங்குகின்ற வளநகரம்! ஒளிசி றந்து
மின்னகரம்! தொழில்கலைகள் குடிபு குந்து
மிகுநகரம்! தகுநகரம்! அங்கி ருப்போர்
"என்னகரம்! என்னகரம்! எனமு ழக்கி
இறுமாப்புக் கொள்நகரம்! நகரோம் இந்த
நன்னகரை விட்டினிமேல் நகரோம் என்றே
நன்கூன்றிக் குடிவாழும் நகரத் துள்ளே ... 4

வணிகருளே தாய்கன்மா நாய்கன்! அன்னோன்
வரவுவைத்த முதற்சொத்து குடும்பச் சொத்து

மணிமலர்ப்பூங் கொத்து நல்ல முத்து வீங்கும்
மகிழ்வினுக்கோர் புதுவித்து ! அவள்பி றந்த
அணிநாளில் என்னபெயர் இடுவ தென்றே
அகஞ்சிவக்க ஆராய்ந்தான் ! மகளைப் பார்த்து,
பிணிக்கின்றான் நினைக்கின்றான் களிப்பால் நெஞ்சைப்,
பெயராத பெயரிவட்கே இடுவேன் என்றான் ! 5

தண்ணிலவால் விண்ணகமே ! பூத்தி ருக்கும்
தாமரையால் குளம்நகுமே ! விரலால் மீட்டும்
பண்ணமுதால் யாழ்நகுமே ! தென்றற் காற்று,
பனிக்குளிர்ச்சி யால்நகுமே ! விரிந்தி ருக்கும்
மண்ணகுமே வயல்களினால் ! வானி டிக்கும்
மலைநகுமே அருவியினால் ! இந்தப் பெண்ணோ
கண்ணிரண்டால் நகுகின்றாள் ! ஆதலாலே
கண்ணகியென் றிவளையினி அழைப்போம் என்றான் ! 6

மடமயிலை விடச்சிறந்த சாயல் கோதை
மாநாய்கன் மனைவியிதை மறுத்தாள் ! இங்கே
குடங்குடமாய்க் குடிமக்கள் தமைம யக்கும்
குலவுசுவை அமுதின்பேர் கள்ளே ! இன்பக்
கொடைபுரியும் அக்கள்ளை வாய்தி றந்து
கொட்டுகின்ற குளிர்மழலை மொழியால் வென்று
உடன்நகுவாள் ! கள்நகுமிக் கார ணத்தால்
ஒண்டொடிக்குக் கண்ணகிப்பேர் பொருத்தம் என்றான் ! 7

அகரவுயிர் போற்சிறந்த நிலாக்கொ ழுந்தை !
அருந்தமிழில் திருக்குறள்போல் விளங்கு வோளை
நிகரற்ற பெற்றோர்கள் நெஞ்சின் தேய
நிழல்பரப்பி வளர்த்தார்கள் ! கல்வித் தேறல்
புகட்டியவள் நுண்ணறிவைப் பெருக்கி விட்டார் !
பூப்போன்ற ஒளிமுகத்தோள் வாழ்க்கை நூலின்
முகவுரைபோல் அமைந்திருந்த இளமை நாளை
முழுமகிழ்ச்சி நிகழ்ச்சியினால் தீட்டி வைத்தார் ! 8

அறத்துப்பால் தனைத்தாய்பால் கற்றாள் பற்றால் !
அதற்கப்பால் பொருட்பாலைத் தந்தை யின்பால்
சிறந்தன்பால் கற்றாள் மேல் பருவம் வந்து
சேர்ந்ததனால் அப்பன்பால் இன்பத் துப்பால்
திறமறிய வேண்டுமந்தப் பெண்பால் என்றே
தினமுமதைக் கற்பிக்க வல்லான் தன்பால்
உறவுகொளும் படிசெய்யும் விருப்பத் தாலே
ஒருமகனைப் பெற்றோர்கள் தேட லானார் ! 9

கரும்பினுக்குப் பலகணுக்கள் இருக்கும் ! அந்தக்
கவின்மனைக்கும் பற்பலவாய் அடுக்கி ருக்கும் !
நெருங்கிப்போய் முகில்திரையை நீக்கி வானின்

நெஞ்சணைத்து நிற்கின்ற அதனைப் பார்த்தால்
அருந்தமிழில் மற்றெழுத்தின் முன்னி னிக்க
அளபெடுத்த நெட்டெழுத்தே நினைவில் தோன்றும்
திருமிக்க மாசாத்து வானே அந்தத்
திகழுகின்ற நெடுமனைக்குச் சொந்தக் காரன்! 10

சொந்தமென ஊராரை உலகத் தாரைச்
சொல்லியந்தச் சொற்படியே வாழ்வோ னுக்குச்
சொந்தமகன்! செல்வமகன்! கலைப்பூ மேயும்
சுரும்புமகன்! நாட்டியமும் பாட்டும் இங்கே
எந்தமகன் அவனைப்போல் சுவைப்பா னென்றே
எல்லோரும் இயம்புமகன்! மகளிர் கூட்டம்
அந்தமகன் கிடைப்பானோ எனம யங்கும்
அழகுமகன்! பருவமகன்! கோவ...லன்! பேர்! 11

நகரழகைக் கோவைப்போல் காண்ப தற்கு
நன்குவலம் நாடோறும் வருவோ னுக்கு
மிகப்பொருத்தம் கோவலப்பேர் என்று சொல்லும்
மெல்லியலார் நெஞ்சமெத்தை புரள லானான்!
புகவந்த நதிகளினால் புனல்மி குந்து
பொங்குகடல் போன்றுயர்ந்த செல்வத் தந்தை
மகனுக்கோர் மணமுடித்து வைப்ப தற்கு
மனங்கொண்டார்! மணமகளைத் தேட லானார்! 12

சீர்நிறைந்த அளவடியும் சீர்கு றைந்த
சிந்தடியும் வெண்பாவில் சேர்ந்திருக்கும்!
பாரினிலே நிதிநிறைந்தோர் அதுகு றைந்தோர்
பக்கத்தில் இருப்பதற்குச் சரியென் பாரா?
தார்மறைத்த மார்பகத்தான் தனைம ணக்கத்
தகுதியெலாம் பிறர்க்கேது! பூம்பு காரில்
கார்வண்ணக் குழலிக்குப் பொருத்த மானோன்
காசுடையான் கோவலன்தான்! பிறர்யார் உள்ளார்? 13

இருவரையும் பெற்றவர்கள் ஒருநாள் சேர்ந்தார்!
எண்ணமிட்டார் தங்குடும்பம் இணைவ தற்கும்,
வருநாளில் தரமுயர்ந்து நன்மை யாவும்
வரப்பற்றுத் தம்மக்கள் வாழ்வ தற்கும்
ஒருவழியைக் கண்டறிந்தார்! கோவ லற்கும்
ஒப்பகன்ற கண்ணகிக்கும் மணமென் றந்தப்
பெருநகரின் செவியில்தேன் பாயும் வண்ணம்
பிறைக்கோட்டுக் களிறேறிச் சாற்றச் செய்தார்! 14

காவேரிப் பூம்பட்டி னத்தார் என்றும்
காணாத வகையினிலே மணமு டித்தார்!
பாவூறும் நாப்படைத்த பாட்டி னத்தார்
பாடாத வகையினிலே மணமு டித்தார்!

பூவேறுங் கருவண்டுக் கண்ணாள் தன்னைப்
புகழ்ந்துமுதல் இரவிலந்தக் கோவ லன்தன்
நாவேறும் மதுச்சொல்லால் வருணிக் கின்றான்!
நாமதனைச் சிறிதுமட்டும் இங்கே கேட்போம்! 15

நிலன்தொட்டு முத்தமிடும் நெடிய கூந்தல்
நேரிழையே! பழத்தோப்பே! மாசில் ஐந்து
புலன்தொட்டுக் களிக்கின்ற சுவைப்பி ழப்பே!
பொலிபொன்னே! ஒளிர்முத்தே! மணமே! இன்பப்
பலன்தொட்டுத் தருகரும்புச் சாறே' தேனே'
பனிப்பூவே! பாதிநிலா நுதலோய்! காதல்
நலன்தொட்டுப் பறிமாறும் நங்காய்! உன்னை
நான்தொட்டேன் எனச்சொல்லித் தொட்டான் தோளை! 16

மலையிடத்துத் தோன்றாத மணியே! என்றான்!
மாகடலில் தோன்றாத மணியே, என்றான்
குலைவாழைப் பழப்பாட்டு வடித்தெ வர்க்கும்
கொடுயாழின் இடம்பிறவா இசையே! என்றான்!
சிலைசெய்வார் படம்வரைவார் தங்க லைக்குச்
சிறப்பளிக்கும் வடிவுடையாய்! என்றான் அன்பு
வலைப்பட்ட மானே! உன் சாயல் கண்டே
வடுப்பட்டு மறைந்ததடி மயிலும்! என்றான்! 17

அவள்நடையால் அன்னப்புள் ஒளிந்த தென்றான்!
அவள்பேச்சால் கிளிமூச்சும் நின்றதென்றான்!
அவள்நுதலைப் புருவத்தை அல்லிக் கண்ணை
அழகிமையைச் சிற்றிடையைப் பெருந்த னத்தைச்
சிவப்புற்ற பட்டிதழை மணிக்க முத்தைச்
செங்கரத்தைச் சிற்றடியைக் கண்டுமிக்க
உவமையுடன் உரைத்துரைத்துக் காதல் பாணன்
உளமகிழ்ந்தான்! ஓவியப்பெண் குனிந்தி ருந்தாள்! 18

விரிக்கின்ற பல்கோடி உரைக ளுக்கும்
விஞ்சுமெழில் இலக்கணத்துச் சூத்தி ரம்நீ!
எரிக்கின்றாய் சுடர்விழியால் என்று சொல்லி
இருகையால் இழுத்தணைத்தான்! இதழி ணைத்தான்!
தரிக்கின்ற அன்புடையாள் பேச்சொ ழிந்து
தங்கநிலா முகத்தையவன் உரம்பு தைத்தாள்!
சிரிக்கின்ற மலர்தழுவி வந்த தென்றல்
திகைத்ததிடைப் புகுவதற்கு வழியி ழந்து! 13

பெருங்குணத்துக் காதலினாள் கோவ லன்பால்
பிணைந்தறங்கள் பலபுரிந்தாள்! இல்ல றத்துத்
திருவிளக்காய் ஒளிபுரிந்தாள்! கேள்வன் நெஞ்சத்
தேரேறித் திளைத்துலவி வந்தாள்! அன்னோன்

உருவினையே தனதுள்ளத் திரையில் தீட்டி
ஒருநாளும் வெறுநாளாய்க் கழியா வண்ணம்
பெருமதிப்பால் வழிபட்டாள்! இன்ப முற்றாள்!
பேதையவள் வாழ்நாட்கள் நகருங்காலை...... 20

முத்தமிட்டுக் கடலலைகள் இசைமு ழக்க
முதிர்வளங்கள் சதுராடும் பூமபுகாரில்
சத்தமிட்டுக் கால்தண்டை கலக லக்கத்
தாமரைக்கை யான்மிதந்து குறிப்பு ணர்த்த
நித்தநித்தம் நடமாடும் கணிகைப் பெண்டிர்
நெடுங்காம நிலையத்தில் பலர்ப டிக்கும்
புத்தகங்கள்! இரவுக்கோர் வரவு பார்க்கும்
பூவையர்கள்! ஒளிமுத்துக் கோவை யர்கள்! 21

அப்பெண்டிர் வழிவந்தோள்! கலைகள் யாவும்
அடைக்கலமாய் அவளடியில் கிடக்கப் பெற்றோள்!
கப்பலைப்போல் சுவைச்சரக்கை ஏந்திப் பார்க்கும்
காளையர்கள் மனக்கடலில் மிதப்போள்! அன்னோள்
ஒப்பகன்ற நாட்டியத்தின் அரங்கேற் றத்தில்
ஒற்றிவைத்த தன்விழியால் அவன்வ னப்பை
அப்படியே பருகுவன்போல் பார்த்திருந்தான்
அகம்நெகிழ்ந்தான் கோவலன்தன் அறிவி ழந்தான்! 22

கண்ணகியை மறந்தவள்பால் சென்றான்! நின்றான்!
காரிருட்டைக் காதலித்தான் ஒளிம றந்தான்!
வெண்ணிலவைத் துறந்தானோர் மின்மி னிக்கு
விருப்புற்றான்! வெண்பாவைப் போற்சி றந்த
பெண்பாவை துயர்க்கடலில் வீழ்ந்த ழுந்தப்
பிணைந்திணைந்து மாதவிபால் ஒன்றி விட்டான்!
பண்வடிக்கும் இசையாழை நிலத்தெ றிந்தான்!
பறந்திட்டான் புதுமலர்பால் காமத் தும்பி! 23

தாய்மொழியை மறந்தவன்போல் ஆனான்! வேற்றுத்
தகவற்ற மொழிமணந்த கீழோன் ஆனான்!
தூய்மைமிகும் நறும்பன்னீர் ஊற்றை விட்டான்!
துணிந்துபொதுக் குளத்தில்போய் வீழ்ந்தான்! இன்னாக்
காய்நுகரச் சிறகடித்தான்! கனிது றந்தான்!
கவின்முல்லை எறிந்துகன காம்ப ரத்தைப்
போயணிந்தான்! புதுக்காம வேளே ஆனான்!
புதியவள்வாய் மதுக்கடையில் நின்றி ரந்தான்! 24

பண்பட்ட கண்ணகியை அவன்பி ரிந்தான்!
பாவையவள் தேவையில்லை என்று போனான்]
புண்பட்டுப் புயல்பட்ட சோலை யானாள்!
புகைபட்ட படமானாள்! கண்ட வர்கள்

கண்பட்டு விடுமென்னும் வனப்பி ழந்து
கருகிவிட்ட மலரானாள்! வான்ச ரிந்து
மண்பட்டு நொறுங்கிவிட்ட நிலவே யானாள்!
மனம்பட்ட துன்பத்தை அடக்கி வைத்தாள்! 25

தேனென்றுந் திருவென்றுந் தினம்பு கழ்ந்த
திருவாளன் இயல்பழிந்தான் என்ற றிந்தும்
ஏனென்று கேட்டாளா? புதியோள் பக்கம்
ஏகாதே என்றுதடை போட்டா ளா? தன்
மானென்றும் விழிகலங்கி நெட்டு யிர்த்து
மணவாளன் இன்பநிலை ஒன்றே ஒன்றைத்
தானென்றும் மனமொன்றி விரும்பு வாளாய்த்
தனித்திருந்தாள்! துயர்க்கவிதை வடிவ மானாள்! 26

கற்கோட்டைக் கற்புடையாள் தனது காதல்
கணவனையே தெய்வமெனத் தொழுதாள்! மற்றோர்
சொற்கேட்டுப் பிறதெய்வம் வணங்க வில்லை!
சொல்லியவள் தேவந்தி தோற்றுப் போனாள்!
பொற்கோட்டுப் பேரிமைய உறுதி யாலே
பூமியைப்போல் அசையாத பொறுமை யாலே
முற்கேட்டால் பிரிந்தவனை மீண்டும் பெற்றாள்!
முணுகாமல் அவன்சொல்லக் கூடல் செல்ல 27
ஒருப்பட்டாள்! உடனெழுந்தாள்! தனது கேள்வன்
உறுதுயர்க்கே வருந்தித்தன் துயர்ம றந்தாள்!
நெருப்பிட்ட நெடுங்காட்டில் ஓரிடத்தில்
நின்றார்கள்! தெய்வமுற்ற பெண்ணொ ருத்தி

பொருப்பிட்ட விளக்கிவளைத் தெய்வ மென்று
புகழ்ந்திட்ட காரணத்தால் வெட்கப் பட்டாள்!
திருப்பட்டான் முதுகின்பின் மறைந்து செவ்வாய்
தேடிட்ட புன்சிரிப்பிற் கிடத்தை விட்டாள்! 28
துறவுடைய கவுந்தியெனும் அம்மை அந்தத்
தூயவட்கு வழித்துணையாய் விழிபோல் காத்தார்;
நறவுடைய திருமலர்கள் நடனஞ் செய்யும்
நான்மாடக் கூடலுக்குப் புறந்தே வாழும்
செறிவுடைய இடையரினக் குடிகள் உள்ளே
சிறப்புடைய மாதரிபால் சேர்த்து வைத்தார்!
உறவுடைய அவளோடு தங்க லுற்றாள்!
ஒளிவாழ்வின் வைகறைக்குத் துடித்து நின்றாள்! 29

கடிமதுரை நகர்மன்னன் அறம்பி ழைத்துக்
கள்வனெனக் கோவலனைக் கொன்றுவிட்டான்!
இடிவிழுந்த தெனவிந்தச் செய்தி சென்றே
இளங்கொடியின் செவியினிலே விழுந்த தாலே

படியதிர விண்ணதிர ஆர்த்தெழுந்தாள்!
படர்நெருப்பாய், கொதிகடலாய்ச் சீறிச் சென்றாள்!
வெடிமுழக்கம் வீதியெலாம் செய்தாள்! கண்டோர்
வீதிக்கு வந்தஇவள் தெய்வம் என்றார்! 30

தெய்வமென்று சொன்னவர்கள் கலக்க முற்றுத்
தென்னவன்கோல் சிதைந்ததினி இந்த ஊரில்
உய்வமென்று கருதவழி இல்லை என்றார்!
"உயர்கணவன் தனையிழந்தேன்! உருக்குலைந்தேன்!
நைவதென்றும் நானினிமேல்! நாட்டு மன்னன்
நடுவுநிலை தனைப்புதைத்தான்! ஆராயாமல்
பொய்மைநின்ற குறைசாட்டிக் கள்வனென்றே
புரிந்தானே கொடுங்கொலையை எனக்கென்றாள்! 31

கனல்பட்ட மொழியுடையாள் மதுரை வீதி
கடிதேகித் தன்கொழுநன் உடலைக் கண்டாள்!
அனல்பட்ட பஞ்சானாள்! அழுதாள்! அந்த
அருங்காதல் கோமானைத் தழுவி வாடிப்
புனல்பட்ட விழியுடையாள்! நீதி கேட்கப்
புறப்பட்டாள்! புறப்பட்டாள்! பாண்டி மன்னன்
எனப்பட்ட அறங்கொன்றான் வாழ்மனைக்கே!
எடுத்துரைத்தாள் அன்னவன்பால் வழக்கை! வென்றாள் 32

பனிதாங்கும் தும்பைமலர் சூழுந் தென்றற்
பாங்கினிலே தன்கணவன் நெஞ்சப் பூவை
இனிதாங்குச் சூழ்ந்திருந்தாள் இதுவரைக்கும்!
இறந்தவுடன் வெறிவேகம் பீறும் வீரம்
நனிதாங்கும் புயலானாள்! நடுக்க முற்று
நலிவுற்ற இறைசெத்தான்! உடனே அன்னோன்
கனிதாங்கும் கொடியொப்பாள் மனைவி செத்தாள்!
கண்ணகியால் அம்மதுரை கருகிற் றன்று! 33

மழைத்துளிபோல் தூயமனங் கொண்டோள் கொண்ட
மணாளன்மேல் வந்தபழி துடைத்தாள்! நீதி
பிழைத்தவனை அழித்துலகில் வாழச் செய்தாள்!
பிறகந்தச் சீரிழந்த ஊரழித்தாள்!
மழைதவழும் மலைநாட்டைச் சென்றடைந்தாள்!
மணிமலர்கள் நிறைசாரல் சேர்ந்து மாண்பு
தழைக்கவொரு பெருந்தெய்வம் ஆகிவிட்டாள்!
தண்டமிழர் நன்னெஞ்சம் வாழுகின்றாள்! 34

பூவேந்தும் விழியுடையாள் தன்னைப் போற்றிப்
புகழ்ச்சேரன் கற்கோயில் கட்டி வைத்தான்,
மூவேந்தர் நாட்டினிலும் கொடியின் வாழ்க்கை
முழுமைபெறப் படர்ந்ததனால் பொதுமை கொண்டு
சாவேந்தாச் சொற்கோயில் அவளுக் காகச்
சரியாத துறவுடைய இளங்கோ செய்தார்!
நாவேந்தி அவர்பாடல் படிக்கும் நாமும்
நன்கேந்தி அவளடியை வணங்க வேண்டும்! 35

கண்ணகியைப் பெண்கள்பின் பற்ற வேண்டும்!
கணவன்மார் கோவலன்போல் ஆதல் வேண்டாம்.
மண்காப்போர் நெடுஞ்செழியன் போல நீதி
மறுப்பட்டால், உயிர்விட்டால் சிறப்புக் கொள்வர்
பண்பற்றுத் தமிழினத்தை இகழு வோர்க்குப்
பாடந்தான் கனகவிச யர்தம் வாழ்க்கை,
நண்புற்றுச் செங்குட்டு வன்பால் வீரம்
நாம்பெற்றால் நாட்டுக்கு நன்மை யாகும்! 36

சிலப்பதிகா ரமெனுமுயர் கோவில் உள்ளே
சிறப்புடைய கண்ணகியே தெய்வ மாவாள்
சிலப்பதிகா ரமெனுமெழில் தங்கத் தட்டில்
திருத்தகைய கண்ணகியே மாணிக் கக்கல்,
சிலப்பதிகா ரமெனுமின்பக் கவிதை வானில்
சீதநிலா, கண்ணகியே! நெஞ்சை அள்ளும்
சிலப்பதிகா ரப்பொய்கை தன்னில் ஒற்றைச்
செந்தாம ரைப்பூவும் இவளே யாவாள்! 37

கற்பினுக்கோர் புதுக்கொழுந்து, பொற்பின் செல்வி,
கடவுளெனத் துறவியரும் புகன்ற வல்லி,
நற்றமிழில் மெல்லினம்போல் இருந்து தேவை
நண்ணியதால் வல்லினம்போல் ஆனாள், ஞாலப்
பொற்கொடியர் குலத்தினுக்குப் புகழ்விளக்கு,
நிற்கின்றாள் காவியத்தில், நமது நெஞ்சில்,
நிழல்போல நமைத்தொடர்வாள், துணையும் ஆவாள்! 38

வணக்கம்.

வாழிய செந்தமிழ்.